

வானம்
தொட்டு விடும் தூரம்தான்
ஆனந்த் ஸ்ரீனிவாசன்

# வானம் தொட்டு விடும் தூரம்தான்

**ஆனந்த் ஸ்ரீனிவாசன்**

ananthseenu@yahoo.co.in

**மின்னூல் வெளியீடு : http://FreeTamilEbooks.com**

உரிமை - CC-BY-SA-NC கிரியேடிவ் காமென்ஸ். எல்லாரும் படிக்கலாம், பகிரலாம்.

பதிவிறக்கம் செய்ய -

http://FreeTamilEbooks.com/ebooks/vaanam_thotuvidum_thooramthan

அட்டைப்படம் - லெனின் குருசாமி - guruleninn@gmail.com

மின்னூலாக்கம் - ஐஸ்வர்யா லெனின் - aishushanmugam09@gmail.com

கணியம் அறக்கட்டளை (kaniyam.com/foundation)

This Book was produced using LaTeX + Pandoc

# மின்னூல் வெளியீடு

மின்னூல் வெளியீட்டாளர்: http://freetamilebooks.com

அட்டைப்படம்: லெனின் குருசாமி - guruleninn@gmail.com

மின்னூலாக்கம்: ஐஸ்வர்யா லெனின் - aishushanmugam09@gmail.com

மின்னூலாக்க செயற்திட்டம்: கணியம் அறக்கட்டளை - kaniyam.com/foundation

## Ebook Publication

Ebook Publisher: http://freetamilebooks.com

Cover Image: Lenin Gurusamy - guruleninn@gmail.com

Ebook Creation: Iswarya Lenin - aishushanmugam09@gmail.com

Ebook Project: Kaniyam Foundation - kaniyam.com/foundation

# பொருளடக்கம்


அச்சுப்பதிப்பு . . . . . . 7
சமர்ப்பணம் . . . . . . 8
அணிந்துரை . . . . . . 9
பதிப்புரை . . . . . . 12
என்னுரை . . . . . . 14
1. தரிசு நிலம் . . . . . . 15
2. அந்திம கிரியை . . . . . . 21
3. வானம் தொட்டு விடும் தூரம்தான் . . . . . . 27
4. அம்மா . . . . . . 38
5. பிணைப்பால் தொடரும் உறவுகள் . . . . . . 44
6. இருட்டில் ஒரு வெளிச்சம் . . . . . . 52
7. இதுவும் கடந்து போகும் . . . . . . 60
8. அப்பா . . . . . . 66
9. கொஞ்சம் கல்வி நிறைய காசு . . . . . . 72
10. வேலை . . . . . . 78
11. வீழ்வேன் என்று நினைத்தாயோ ? . . . . . . 84
12. அன்னபூரணி . . . . . . 91
13. நான் செய்தது . . . . . . 101
கணியம் அறக்கட்டளை . . . . . . 106

# அச்சுப்பதிப்பு

வானம் தொட்டு விடும் தூரம்தான்
ஆசிரியர் - ஆனந்த் ஸ்ரீனிவாசன்
உரிமை  - ஆனந்த் ஸ்ரீனிவாசன்
முதல் பதிப்பு - ஜனவரி 2022
பக்கங்கள் - 148
தாள் - 80 ஜிஎஸ்எம்
எழுத்துரு - ATM 052 | ATM 280 | 12pt
விலை - ₹ 165 /-
வடிவமைப்பு மற்றும் அச்சகம் - சன் கிரியேசன்ஸ், காரைக்குடி +91-9578078500
பதிப்பாளர் - பாண்டியன் – வைகை பதிப்பகம்,
பிளாட் எண். 102, செல்லப்பா நகர்,
கழனிவாசல், காரைக்குடி - 630 002
அலைபேசி : 9942847919 / 9688303124

# சமர்ப்பணம்



ஆர். அனந்தச்சாரியார் - ஸ்ரீரெங்கநாயகி

எனக்கு உயிர் கொடுத்து, என்னை நல்வழிப்படுத்தி, நல்ல கல்வி கொடுத்த என் தாய் ஸ்ரீ ரெங்கநாயகி என் தந்தையார் ஆர். அனந்தச்சாரியார் அவர்களுக்கு இந்த சிறுகதை நூல் சமர்ப்பணம்..

# அணிந்துரை



வானம் தொட்டுவிடும் தூரம்தான் என்னும் சிறுகதைத் தொகுப்பு படிக்கின்ற வாய்ப்பை அதன் படைப்பாளர் திரு. ஆனந்த் சீனிவாசன் அவர்கள் எனக்கு அளித்து அதற்கான அணிந்துரை வேண்டியிருந்தார்.

பொதுவாக கதை சொல்லும் மரபு தொன்றுதொட்டு இருந்து வந்த வழக்கம் என்பதைத் தொல்காப்பியர்,

'பொருள் மரபில்லாப் பொய்ம்மொழி யானும்
பொருளோடு புணர்ந்த நகைமொழியானும்'

என்று உரைப்பார்.

ஆகக் கதை சொல்லும் வழக்கம் நம் முன்னோர்கள் காலத்திலேயே இருந்துள்ளது. அவ்வகையில் இராமாயணமும் மகாபாரதமும் மிகப் பழமையான கதை வரிசையில் முன் நிற்கிறது.

தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறுகதைத் துவக்கமும் அதன் வளர்ச்சியும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் தொடங்குகிறது.

வ.வே.சு. அய்யர் அவர்கள் குளத்தங்கரை அரசமரம் என்ற சிறுகதை மூலம் துவக்குகிறார். அந்த வகையில் தமிழ் சிறுகதை முன்னோடியாக அவர் நிற்கிறார். அதன் பின் ஆ. மாதவையா. பாரதியார் என வரிசைகட்டி சிறுகதை வடிவத்தைக் கொண்டாடினர்.

சிறுகதையில் வித்தியாசமான உத்திகளை புதுமைப்பித்தன் அவர்கள் கொணர்ந்தார். மௌனி, எம். வி. வெங்கட்ராம், கு. ப. ரா., கு. அழகிரிசாமி, கல்கி, தி.ஜானகிராமன், ஜெயகாந்தன், சுஜாதா, எஸ்.ராமகிருஷ்ணன், ஜெயமோகன் என சிறுகதைகள் பல்கிப் பெருகி வளர்ந்தன.

இப்படியான வளர்ச்சியில் நம் நண்பர் வானம் தொட்டுவிடும் தூரம்தான் சிறுகதைத் தொகுப்பைக் கொணர்கிறார்.

சிறுகதை துவக்கத்திலேயே கதையின் தொடக்கம் நிகழ்த்தி எடுத்துக் கொண்ட கருவை சுருக்கமாகவும் நறுக்காகவும் அமைத்திடல் வேண்டும். சிறு கால அளவிற்குள் நடக்கும் நிகழ்வாக அமைதல் வேண்டும். முடியும் நேரம் வாசகர்கள் எதிர்பாராத விதமாய் அதன் முடிவு

அமைதல் வேண்டும்.

இந்த இலக்கண வரையறைக்குள் நண்பர் ஆனந்த் சீனிவாசன் தம் சிறுகதைகள் படைத்திருப்பது சிறப்பு.

தொகுப்பில் இடம்பெறும் அப்பா சிறுகதை ஆபீஸ் இன்ஸ்பெக்ஷனில் துவங்குகிறது. அப்பாவின் உடல் நலக்குறைவு மற்றும் அதில் வரும் அப்பாவுடனான பழைய நினைவுகள், அவர் விரும்பிய படியே பணியாற்றும் துறையில் உயர் அதிகாரியாக நியமனம் பெறும் கடிதத்தைக் காட்ட முற்படும் வேளையில் அவர் வைகுண்டம் ஏகி விடுகிறார். அப்பாவின் சிறப்பியல்புகளைப் பட்டியலிட்டபடியே அவர் விதேஹி ஆவதைக் காட்டி நம் கண்களைக் குளமாக்கி விடுவதில் வெற்றி காண்கிறார் கதாசிரியர்.

பிணைப்பால் தொடரும் உறவுகள் என்ற சிறுகதையில் தந்தை பேச்சைக் கேட்காமல் வேற்று இனத்தைச் சார்ந்த பெண்ணை மணந்து கொண்டதில் பெற்றோருக்கு வருத்தம். மகனது குடும்பத்தைப் பிரித்து வைக்கிறது. பெருந்தொற்றுக் காலம் அப்பாவைப் பலி கொள்கிறது. தீர்க்க சுமங்கலியாக இருக்க வேண்டிய அம்மா உறவின்றித் தனிமையில். அப்போது அதே பெருந்தொற்று மகனையும் பலிகொள்ள மருமகள் தனிமையில். பக்கத்து வீட்டு தம்பதியர் இருவரின் நிலை உணர்ந்து மாமியாரையும் மருமகளையும் சேர்த்து வைக்க முயல்கின்றனர். அவ்வகையில் கதையில் பாசப் போராட்டங்கள் நடத்துவதில் வெற்றி காண்கிறார்.

மூன்றாவது வீழ்வேனென்று நினைத்தாயா...? என்ற சிறுகதை திருநங்கையர் நிலையைக் காட்டுகிறது. திருநங்கையாக மாறும் மகனைத் தள்ளி வைக்கும் தந்தை. தனித்து விடப்பெற்ற மகன் திருநங்கையாகி வக்கீலாகி வெற்றி காண்கிறான் வாழ்க்கையில். கிராமத்தில் வேதம் ஓதிய குருக்கள் கொரானாவால் இறந்துவிட அந்திமக் கிரியைகள் செய்வதற்கும் பணம் செலவழிக்கவும் தயங்குகின்ற கிராம அக்ரஹாரப் பெருமக்கள் முன் சுயம்புவாய் வளர்ந்த குருக்கள் மகன் பாரதி அந்திமக்கிரியை செய்கிறான் திருநங்கையாக. இதைப் பார்த்து கேள்வி கேட்கும் அக்ரஹாரத்தினரை எதிர் கேள்வி கேட்டு வாயடைக்கிறான். சமுதாய மாற்றங்களை எடுத்துரைத்துச் சாடுகிறான். பாரதி வரிகளால் நான் வீழ்வேனென்று நினைத்தாயோ என நிமிர்ந்து நிற்கிறான். அந்த வகையில் ஓர் இனத்தில் காணும் சுயநலத்தையும் பழக்கவழக்கங்களையும் சாடுவதில் ஆனந்த் சீனிவாசன் சமுதாய சீர்திருத்தவாதியாகிறார்.

இப்படிப் பல்வேறு சிறுகதைகள் உள்ள இந்தத் தொகுப்பு சிறப்பாக உள்ளது. தினமலர் வாரமலரில் பரிசு பெற்ற கதைகள் என தாம் வெற்றி பெற்ற சிறுகதைகளால் இத்தொகுப்பை அலங்கரித்திருக்கிறார்.

ஆனந்த் சீனிவாசன் அஞ்சல் உதவியாளராய்த் துவங்கி கண்காணிப்பாளராய் பதவி உயர்ந்து வாழ்வில் வெற்றி அடைந்தவர். தம் அலுவலக வாழ்விட அனுபவங்களை ஒருசேரத் தம்கதைகளில் கற்பனையுடன் காட்டி இருப்பது பாராட்டத் தக்கது.

வானம் தொட்டுவிடும் தூரம்தான் சிறுகதைத் தொகுப்பு சிறுகதை வரலாற்றில் வெற்றி பெற வாழ்த்துகிறேன். வாசகர்கள் இதனை வாங்கிப்படித்துப் பயன்பெற வேண்டுகிறேன்.

என்றென்றும் அன்புடன்
இளவல் ஹரிஹரன், மதுரை
01-01-2022
9841613494

# பதிப்புரை



**வானம் தொட்டுவிடும் தூரம்தான்…**

வாசிப்பவர்கள் குறைந்துகொண்டே போவதாய் சொல்கிறார்கள். எல்லாமே காட்சி ஊடகங்களாக மாறிவிட்டது என்கிறார்கள். பொழுதுபோக்கெல்லாம் முகநூலும், வாட்ஸ்அப்பும் என்றாகிவிட்டது. வேலைவெட்டி இல்லாதவர்கூட வாசிக்க நேரமில்லை என்கிறார்கள். ஆனாலும், புத்தகங்கள் வெளியாகிக்கொண்டே இருக்கின்றன. இது முரணாக தெரிந்தாலும், இந்த முரண் தேவைதான்.

யாரேனும் வாசிப்பார்கள். இன்று இல்லாவிட்டாலும் என்றேனும் வாசிப்பார்கள் என்ற நம்பிக்கைதான் எழுத்துக்கு அடிப்படை. கதைகளும், இலக்கியமும் இல்லாவிட்டால் வாழ்வின் துன்பங்களில் அடிபட்டு மனிதர்கள் எப்போதோ காணாமல் போயிருப்பர்.

புத்தகங்களின் மூலம்
அறிவைப் பெறலாம்
நம்பிக்கையை பெறலாம்
அனுபவத்தை பெறலாம்
ஆனந்தத்தை பெறலாம்
புதிய சிந்தனையை பெறலாம்
மனமாற்றத்தை பெறலாம்…

அதிலும் அனுபவம் வாய்ந்த பெரியவர்கள் எழுதும்போது அந்த எழுத்தில் நிச்சயம் அவர்கள் கடந்து வந்த வாழ்வின் தடம் பதிந்து இருக்கும். அந்த காலடித்தடம்தான் நாம் போகும் பாதைக்கு வழிகாட்டி.

திரு.ஆனந்த சீனிவாசன் ஐயாவின் அப்படியான கதைகள் பதிமூன்றை இங்கே நாம் வாசிக்க இந்த தொகுப்பு உதவுகிறது.

இவற்றில் பல கதைகள் பத்திரிகைகளில் பிரசுரமானவை. சில கதைகள் போட்டிகளில் பங்கேற்று பரிசுகளையும் பெற்று வந்திருக்கின்றன. ஒரு பத்திரிகையில் நம் படைப்பு பிரசுரமாக வேண்டுமென்றால் எத்தனை போராட்டங்களையும், முயற்சிகளையும் தொடர்ந்து செய்திட வேண்டுமென்பதை ஒரு எழுத்தாளனாக நான் நன்கு அறிவேன். அந்த வகையில் தினமலர், கல்கி போன்ற வெகுஜன மக்கள் வாசிக்கிற, பாரம்பரியமிக்க பத்திரிகைகளில்

படைப்புகள் பிரசுரம் காண்பதென்பது அவ்வளவு எளிதல்ல. அவற்றிலேயே ஐயாவின் கதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது என்றால், கதைகளின் தரம் எந்தளவுக்கு உயர்வாக இருக்கும் என்பதை நீங்கள் எண்ணிப்பாருங்கள்.

மழை இல்லாவிட்டாலும் உழுதலை மறந்துவிடக்கூடாது என விவசாயி ஏர் கலப்பையை பிடிப்பதுபோலத்தான் வாசிக்க நேரமில்லை என கடந்து போகும் மனிதர்களுக்காகவும் எழுதுவதை விடாமல் செய்து கொண்டிருக்கிறார்கள் எழுத்தாளர்கள். என்றாவது ஒருநாள் மழை பெய்யும்... மண்செழிக்கும் என்ற நம்பிக்கையோடு...

தன் வாழ்விலிருந்தும் கனவுகளில் இருந்துமே தம் எல்லாக் கதைகளையும் தனித்துவமாய் படைத்திருக்கிறார் ஆசிரியர். நாம் கடந்துபோன, பார்க்க மறந்த, நம்முள் அடைந்து கிடக்கும் உள் உணர்வுகளின் நுண்ணிய கதவுகளை கதைகளின் மூலம் திறந்து விடுகிறார். அது பரமபதவாசல் போல திறந்திருக்கிறது. உள்ளே நுழைந்து பாருங்கள். சொர்க்கம் தெரியும்...

ஒரு வாழ்வை வார்த்தைகளில் பதிவு செய்வதென்பது அத்தனை எளிதல்ல. கடனுக்காக கொத்தடிமைகளாகப் போய் கஷ்டப்படும் மனிதர்களின் வாழ்வியலை மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்திருக்கும் கதை வானம் தொட்டுவிடும் தூரம்தான்.

நமக்கு இனி விடிவுகாலம்தான் என எல்லா குடும்பங்களையும் நம்பவைத்து ஓசி சரக்கு போன்ற ஆசை வார்த்தைகளை கூறி, மூளைச்சலவை செய்து அழைத்துப்போகப்படும் மனிதர்கள் படும் கஷ்டங்களை அஞ்சலை எப்படி சமாளிக்கிறாள் என்பதை அழகாய் சொல்கிறது. அந்தக் கதை சிறப்பு. இந்தக் கதை சிறப்பு என நான் இங்கே எந்த கதைகளுக்கும் பொழிப்புரை, விளக்கவுரை கொடுக்கப் போவதில்லை. மாறாக அனுபவிக்க அழைக்கிறேன். ஒரு பெருவிருந்தில் பரிமாறப்படும் உணவில் உப்பும், காரமும் ஒரே மாதிரி போட்டு சமைத்து இருந்தாலும் சுவை ஒருவருக்கு ஒருவர் மாறுபடும். ஒருவருக்கு காரம் குறைவாக இருப்பது மாதிரியும், இன்னொருவருக்கு உப்பு அதிகமாக இருக்கிறது மாதிரியும் தோன்றுவது இயல்பு. சாப்பிட்டு பார்த்தால்தானே அதை நீங்கள் சொல்லமுடியும்.

இங்கே என் உணர்வு வேறு. உங்கள் உணர்வு வேறு. வாசிக்கும்போதுதான் அந்த உணர்வை நீங்கள் பெற முடியும். வாருங்கள் வாசியுங்கள்...

நிச்சயம் உங்கள் நேரம் பொன்னாகும். கதைகளை வாசித்தப்பின் ஒரு புது மனமாற்றத்தை நீங்கள் பெறுவீர்கள்...

பேரன்புகளுடன்,
திருமயம் பெ.பாண்டியன்
9942847919

## என்னுரை



என் பெயர் ஸ்ரீனிவாசன். ஜெயா ஸ்ரீனிவாசன் என்கிற புனை பெயரும் உண்டு. திருச்சி புனித வளனார் கல்லூரியில் வணிகவியல் பட்டபடிப்பு.

1972ம் ஆண்டு தபால் துறையில் அஞ்சல் உதவியாளராக நுழைந்து கண்காணிப்பாளர் gazetted ஆஃபீஸராக உயர்ந்து 31 oct 2010 அன்று ஓய்வு பெற்றேன். சிறு வயதில் இருந்தே படிக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தியவர் என் தந்தை. 1990 இல் தினமணி ஆராய்ச்சி மணியில் முதல் சமூக பிரச்சனை கடிதம். எழுத தொடங்கி, துக்ளக், பாக்யா,குங்குமம் குமுதம், முத்தாரம், கல்கி, ஜூனியர் விகடன், ஜூனியர் போஸ்ட், தராசு, நெற்றிக்கண் போன்ற இதழ்களில் துணுக்குகள் வாசகர் கடிதமென பலவற்றை எழுதியிருக்கிறேன். அதன்பின் பாஞ்சஜன்யம், குங்குமம், கல்கி, தினமலர், வாரமலர் இவைகளில் சிறுகதைகள் என வலம் வருகிறேன். வாரமலரின் TVR நினைவு சிறுகதை போட்டியில், இரண்டு முறை ஆறுதல் பரிசு பெற்றுள்ளேன்.

இதுவரை 45 கதைகள் எழுதி உள்ளேன். இன்னும் நிறைய சமூகம் சார்ந்த கதைகள் எழுத விருப்பம்.

“வானம் தொட்டுவிடும் தூரம்தான்” என் முதல் கதை தொகுப்பு.

இன்னும் சிலதொகுப்புகள் விரைவில் ...

இந்த நூலுக்கு அணிந்துரை வழங்கி சிறப்பித்த திரு.இளவல் ஹரிஹரன் அவர்களுக்கும் திருமயம், பெ.பாண்டியன் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

இப்புத்தகத்தை அச்சில் ஏற்றி பாண்டியன்- வைகை பதிப்பகத்தாருக்கும் என் மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

அன்புடன்<br>
ஆனந்த் ஸ்ரீனிவாசன்<br>
சென்னை 600089<br>
9444958521

# 1. தரிசு நிலம்

**இன்று, நகரங்கள் ஆதிக்கம் செலுத்தி, கிராமங்களின் வளத்தை கறந்து விடுகின்றன. இதனால், கிராமங்கள் நாசம் அடைந்து கொண்டிருக்கின்றன. இந்த ஆதிக்கம் மறைந்து, கிராமங்களுக்கு, நகரங்கள் துணையாக இருந்து உதவ வேண்டும் என்று, என்னுடைய மனோபலம் எனக்குக் கூறுகிறது. கிராமங்களைச் சுரண்டுவது, திட்டமிட்டு நடைபெறும் பலாத்காரம்தான். அகிம்சையின் அடிப்படையில், சுயராஜ்யத்தை தீர்மானிப்பதற்கு கிராமங்களுக்கு ஓர் இடத்தை நாம் அளித்தாக வேண்டும்!**

**-மகாத்மா காந்தி,**

**'அரிஜன்' இதழில் (20.1.1940)**

காந்தி ஜெயந்தி அன்று, பஞ்சாயத்து அலுவலகம் முன், மார்பு அளவு காந்தி சிலைக்கு, கைராட்டினத்தால் நெய்யப்பட்ட, நூல் மாலையை, அணிவித்து, வார்டு உறுப்பினர்களும், கிராம மக்கள் சிலரும் அங்கு கூடியிருந்தனர். பரபரப்பாய் அங்கு வந்தான் பாரதி.

அவன் வந்த வேகமும், அவன் முகத்தில் காணப்பட்ட கோபமும், நன்றாகத் தெரிந்தது.

"இந்த அநியாயத்தை கேட்டீங்களா... நம்ம ஊர்ல ஆடு, மாடு மேய்ச்சலுக்கு பயன்படுகிற தரிசு நிலம், 70 ஏக்கரை, பக்கத்து டவுனுக்கு தாரை வார்த்து, அந்த நகரத்திலுள்ள குப்பைகளையும், மற்ற திடக்கழிவுகளையும், இங்கே வந்து கொட்டப் போறாங்களாம். அதற்கான உத்தரவை, நம்ம கலெக்டர் போட்டிருக்கிறார்.''

கையுடன் கொண்டு வந்த செய்தித்தாளில் இருந்த, செய்தியைக் காட்டினான் பாரதி.

அந்த செய்தியை பார்த்ததும், சத்யமூர்த்திக்கு கோபம் வந்தது. மற்றவர்களும் ஆவேசமாயினர்.

"இந்த பிரச்னையை இப்படியே விடக்கூடாது. இதற்கு ஒரு முடிவு கட்டியாகணும்.''

"இனிமே, நாம எங்கே ஆடு, மாடுகளை மேய்க்கிறது... கலெக்டருக்கு நாமெல்லாம் யாருன்னு காட்டணும்.''

"பஸ் மறியல் செய்யணும்.''

"என்ன இது, அக்கிரமமா இருக்கு.... கலெக்டருக்கு யார் அதிகாரம் கொடுத்தாங்க.... நம்ம பஞ்சாயத்துக்கு அதிகாரப்பூர்வமாய் எந்த தகவலும் இல்லையே?''

ஆளுக்கு ஆள், ஒவ்வொன்றாய் சொல்லிக் கொண்டிருந்தனர். கூட்டத்தில் சலசலப்பு அதிகமாகவே, எல்லாரையும் அமைதிப்படுத்தினார் சத்யமூர்த்தி.

"இதப்பாருங்க... உங்க ஆவேசமும், ஆதங்கமும் எனக்கு நல்லாவே புரியுது. நல்ல பஞ்சாயத்து கிராமம்ன்னு நாம பேர் வாங்கிருக்கோம். வீணா வன்முறையிலே இறங்கி,

நம்ம ஊர் பேரை கெடுத்துக்க வேண்டாம். காந்திய வழியிலே, அகிம்சை முறையிலே போராடுவோம். முதல்ல, இன்னிக்கு கலெக்டர் உத்தரவை எதிர்த்து, தீர்மானம் போடுவோம். தீர்மான நகலோட, நாளைக்கே கலெக்டரை பார்த்து, நம்ம பிரச்னையை பற்றி பேசுவோம்."

அவர் பேச்சை எல்லாரும் ஆமோதித்தனர். தீர்மானம் போடப்பட்ட பின், கூட்டம் கலைந்து சென்றது. ஆனாலும், சத்யமூர்த்தி மனதில் கவலை குடி கொண்டது.

காந்தி கண்ட கிராம ராஜ்யமாக, கிராமங்கள் இருக்க வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டவர் அவர். அரசியல் கட்சி சாயம் ஏதுமின்றி, சுயேச்சையாக நின்று, பஞ்சாயத்து தலைவராக ஜெயித்தவர். 20 ஆண்டுகள், கட்சி பாகுபாடின்றி, கடினமாக உழைத்து, தன் கிராமத்தை, மாதிரி கிராமமாக மாற்றிய பெருமை, முழுக்க, சத்யமூர்த்தியைச் சேரும்.

கிராமத்திற்கு மட்டுமல்லாமல், தன் பஞ்சாயத்துக்குட்பட்ட சின்ன சின்ன கிராமங்களுக்கும், அடிப்படை வசதி செய்து கொடுத்து, கிராமங்களின் ஜீவாதாரமே விவசாயம் தான் என உணர்ந்து, பசுமை புரட்சி ஏற்படுத்தியவர்.

எட்டாம் வகுப்பு வரை இருந்த பள்ளிக்கூடத்தை, பத்தாம் வகுப்பு வரை தரம் உயர்த்தியது, நீர் நிலை தொட்டிகள், தெரு விளக்குகள் அமைத்தது, மகளிருக்கு சுய வேலை வாய்ப்பு ஏற்படுத்தியது போன்றவை, அவரது சமூகப் பணிகளில் சில.

நிலமற்ற ஏழைகள், குறிப்பாக தலித் மக்களுக்கு வங்கிக் கடன் உதவி மூலம், ஆடு, மாடுகள் வாங்கிக் கொடுத்து, தரிசாக கிடந்த புறம்போக்கு நிலமான, 70 ஏக்கர் நிலத்தையும், அந்த கால்நடைகளின் மேய்ச்சலுக்காக பயன்படுத்தி கொள்ளச் செய்திருந்தார் சத்யமூர்த்தி.

அப்படி பயன்பட்ட நிலம், இப்போது இன்னொரு நகரத்தின் திடக்கழிவையும், குப்பைகளையும் கொட்டுவதற்கு, இனி பயன்படப்போகிறது என்று தெரிந்தவுடன், அவருக்கும் நெஞ்சு குமுறத்தான் செய்தது.

கல்யாணம் செய்து கொள்ளாமலேயே இருந்த சத்யமூர்த்தி, தன் தங்கையின் மகன் பாரதியை, தன்னுடன் உதவிக்கு வைத்துக் கொண்டிருந்தார்.

ஆனால், பாரதியோ, அவரது குணத்தில் இருந்து, சற்று மாறுபட்டவன். எந்த ஒரு மனிதனும், தன்னை அந்தந்த சூழ்நிலைக்கு தகுந்தவாறு மாற்றி, நெளிவு சுளிவுடன் நடந்து கொண்டால், எந்த விதமான காரியத்தையும் சாதிக்கலாம்; குறிப்பாக, பணத்தினால், எந்த விதமான காரியத்தையும் முடித்து விடலாம் என்ற எண்ணம் கொண்டவன்.

என்றாவது ஒரு நாள், அவனது கருத்து மாறும் என்ற நம்பிக்கையோடு இருந்தார் சத்யமூர்த்தி.

கிராம மக்கள் கலைந்ததும், மறுநாள் கலெக்டரை சந்திக்க தேவையான ஆயத்த வேலைகளை ஆரம்பித்தார்.

"வணக்கம் சார்!''

சத்யமூர்த்தியும், ஊர் பிரமுகர்களும் கலெக்டர் முன் இருந்தனர்.

"என்ன விஷயம்?''

"எங்க ஊர் புறம்போக்கு நிலம், கால்நடைகளின் மேய்ச்சல் நிலம். இந்த கால்நடைகளை நம்பித்தான், 700 குடும்பங்கள், வாழ்க்கை நடத்தி வருகின்றன. மேலும், அந்த நிலத்தை சுற்றித்தான், எங்கள் கிராம மக்களின் குடிநீர் ஆதாரமான, குளம், குட்டை எல்லாம் இருக்கு,'' நிதானமாக, சூழ்நிலையை விளக்க ஆரம்பித்தார் சத்யமூர்த்தி.

"பக்கத்து டவுன்ல இருக்கிற குப்பைகளையும், திடக் கழிவுகளையும், எங்க ஊர் தரிசு நிலத்தில் கொட்ட, நீங்கள் உத்தரவு போட்டிருப்பது, இதையெல்லாம் பாழாக்கிடும் சார்.''

இப்படி கூறியவுடனேயே, விஷயத்தை புரிந்து கொண்டார் கலெக்டர்.

"எங்க நிலத்துல குப்பைகளை கொட்டி குவித்து வைப்பதால், நாள்பட நாள்பட, அந்த குப்பைகள், மீத்தேன் வாயுவை உண்டாக்கும். இது எரியக் கூடியது.

எப்போதும், கசிந்து வரும் புகையை சுவாசிக்கும் மக்களுக்கும், கால்நடைகளுக்கும், சுவாச கோளாறுகளையும், ஆரோக்கிய குறைச்சலையும் ஏற்படுத்தி விடும். குடிநீரும் மாசுபடும். நிலத்தடி நீரும் வீணாகும், எங்க கிராமங்களுக்கு, இவ்வளவு தீமைகளை ஏற்படுத்துற இத்திட்டத்தை கைவிடணும் சார்.''

"வாட்... நான் போட்ட உத்தரவை, கான்சல் செய்யணுமா... நெவர்! நான் சரியாத்தான் செஞ்சிருக்கேன். குப்பைகளையும், திடக்கழிவுகளையும் கொட்டுவதற்கு, ஒரு துளி நிலம் கூட கிடையாது. உங்க ஊர்ல இவ்வளவு நிலமும் புறம்போக்குதானே?'' என்றார் கலெக்டர் அலட்சியமாக.

"மறுசுழற்சி செய்ய முடியாத குப்பைகளை, லேண்ட் பில்ஸ் எனப்படும் இடங்களை உண்டாக்கி, அதிலே தானே கொட்ட வேண்டும்? உங்க கிராமத்தில இருக்கிற, 70 ஏக்கர் புறம்போக்கு நிலத்திலே, கொஞ்சம் நிலம், லேண்ட் பில்ஸ் ஆக பயன்பட்டு போகட்டுமே?''

"கலெக்டர் சார்... மக்கள் குடியிருக்கிற பகுதிகள், காடுகள், நீர்வளப்பகுதிகள், வரலாற்றுப் பகுதிகள், தேசிய பூங்காக்கள், இந்த மாதிரி இடங்கள்ல, லேண்ட் பில்ஸ் அமையக் கூடாதுன்னு சட்டம் சொல்லுதே. நீங்க சொல்ற அந்த புறம்போக்கு நிலத்தை சுற்றிலும், நீர் நிலைகள் இருப்பதால், தண்ணீர் மாசுபட்டு விடுமே... குப்பைகள் நாளுக்கு நாள் மலைபோல குவிந்து, மக்களுக்கு நோய் நொடி ஏற்படுமே...''

"மன்னிக்கணும் மிஸ்டர் சத்யமூர்த்தி.... நான் முன் வைச்ச காலை பின் வைக்க மாட்டேன். நீங்க போகலாம். எனக்கு வேற அவசர மீட்டிங் இருக்கு...'' பதிலுக்கு காத்திராமல், தன் சீட்டை விட்டு எழுந்து கலெக்டர் வெளியே கிளம்ப, சத்யமூர்த்தியும், மற்றவர்களும் வெறுமையுடன் ஊர் திரும்பினர்.

"என்ன மாமா... போன காரியம் சக்சஸ் ஆயிடுச்சா... கலெக்டர், தான் போட்ட உத்தரவை கான்சல் செய்திட்டாரா?'' கிண்டலாக கேட்டான் பாரதி.

”தீர்மான நகலை கொடுத்திருக்கோம்… எங்க எதிர்ப்பையும் காட்டியிருக்கிறோம். சீக்கிரம் நல்லது நடக்கும்ன்னு தோணுது. அரசு காரியமில்ல… கொஞ்சம் லேட் தான் ஆகும்…’’ சற்றே கம்மிய குரலில் பதிலளித்தார் சத்யமூர்த்தி.

“பார்த்துக்கிட்டே இருங்க… நீங்க என்னதான் பொறுமையா இருந்தாலும், அரசாங்க காரியங்கள் முடியறதுக்கு, மாத கணக்கில் ஆகும். உங்க காரியத்தின் தன்மை நல்லதா இருந்தாலும் சரி, கெட்டதா இருந்தாலும் சரி, அந்தந்த காரியங்களுக்கு ஒரு,”ரேட்’ இருக்கு மாமா. சம்திங் கொடுக்காம, நீங்க கொடுத்த தீர்மானத்தை தொடுவாங்களா முதல்ல?’’

”டேய் பாரதி… என்ன பேசுற நீ? இது நம்ம கிராமத்தோட ஜீவாதார உரிமைடா… நம்ம ஊர் நிலத்தை குப்பைக்கிடங்கா மாத்துறத, நாம தடுத்தே ஆகணும். அதுவும் காந்திய வழியில்…’’ அவர் குரலில் உறுதி இருந்தது.

பாரதி சொன்னபடி, நாட்கள் மட்டும் நகர்ந்தன. அவர்கள் முயற்சிக்கு எந்த பலனும் கிடைக்கவில்லை.

இடையில் சத்யமூர்த்தியும், மற்றவர்களும், கலெக்டரை பார்க்க பல முறை முயற்சித்தும், அவரை பார்க்க முடியாமல் போனது. நகராட்சி அதிகாரிகள், தரிசு நிலத்தை பார்வையிட வந்தபோது, அவர்களை அனுமதிக்காமல், பொறுமையாக திருப்பி அனுப்பினர் கிராம மக்கள்.

அன்று கிராமத்தில் அவசரக்கூட்டம் ஏற்பாடாகியிருந்தது. பேச ஆரம்பித்தார் சத்யமூர்த்தி.

”இவ்வளவு நாள் பொறுமையா இருந்திட்டோம். நம்மோட மனு மேல, கலெக்டர் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கல. இந்த விவகாரத்துல மாசுக்கட்டுப்பாட்டு வாரியமும் சம்பந்தப்பட்டிருக்கு அதனால, நம்ம ஊர் புறம்போக்கு நிலத்தை, குப்பை கொட்டும் இடமாக பயன்படுத்த அனுமதியோ தகுதி சான்றோ கொடுத்திருக்காங்களான்னு தெரிஞ்சுக்கணும்.’’

”ஆமா… நாம போய் கேட்டா உடனே சொல்லிடுவாங்களாக்கும்…’’ கிண்டலாக சொன்னான் பாரதி.

”போய் கேட்டா சொல்ல மாட்டாங்கதான்…. ஆனா, தகவல் அறியும் உரிமைச்சட்டம் மூலமா கேட்ட30 நாளுக்குள்ள சொல்லித்தானே ஆகணும்?’’ என்ற சத்தியமூர்த்தி, தொடர்ந்து பேசினார்…

”நாம இது சம்பந்தமா மாசு கட்டுப்பாட்டு வாரியத்துக்கு, தகவல் அறியும் உரிமைச்சட்டப்படி மனு அனுப்புவோம். அங்கிருந்து பதில் வந்ததும், அடுத்த கட்டமாக என்ன செய்யலாம்ன்னு முடிவெடுப்போம். அதுவரைக்கும் நீங்க பொறுமையாக இருக்கணும்… ஆவேசப்படக் கூடாது…’’

கிராம மக்கள் ஒத்துக்கொள்ள, உடனடியாக மனு தயார் செய்யப்பட்டு, அன்றே அனுப்பப்பட்டது.

சத்யமூர்த்தி எதிர்பார்த்த மாதிரி மாசுக்கட்டுப்பாட்டு அலுவலகத்திலிருந்து பதிலும்

வந்தது. கிராம மக்கள், சத்யமூர்த்தி வீட்டில் கூடியிருந்தனர். கடித்தை படித்து, விவரம் தெரிவித்தான் பாரதி.

மாசுக் கட்டுப்பாடு அலுவலக ஆய்வு கமிட்டி, மேற்படி நிலம், கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலமாக பயன்படுத்துவதாகவும், நீர் நிலைகள், குட்டைகளின் அருகில், நகரத்து குப்பைகளை கொட்டுவதால், கிராம மக்களின் குடிநீர் மாசுபடும் என்றும், குப்பை கழிவுகளை கொளுத்தி, அதனால் வரும் புகை, கிராம மக்களின் ஆரோக்கியத்தை பாதிக்கும் என்றும், இதனால், வியாதிகள் வர வாய்ப்பு உள்ளது என்றும்,

"குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி தரிசு நிலமான 70 ஏக்கர் நிலம், திடக் கழிவுகளை கொட்டுவதற்கு தகுந்த இடம் அல்ல என்று அறிக்கை கொடுத்துள்ளது. அந்த அறிக்கையை புறக்கணித்து, மாவட்ட நிர்வாகத்தால், தடை இல்லாத சான்றிதழ் அரசாங்கத்துக்கு கொடுக்கப்பட்டுள்ளது,'' என்று விவரம் சொன்னான் பாரதி.

எல்லார் முகத்திலும், மலர்ச்சி தெரிந்தது.

"நல்லதா போச்சு... இந்த அறிக்கையை வைத்து மீண்டும் தீர்மானம் போடுவோம்; போராடுவோம்'' என்றார் சத்யமூர்த்தி.

தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டத்தின்படி, கிராமத்தில் உள்ள நிலத்தை கையகப்படுத்துவதற்கு முன், அந்த குறிப்பிட்ட பஞ்சாயத்து தலைவர் மற்றும் கிராம மக்களின் கருத்துகளை கேட்டு, கலந்து ஆலோசித்து, முடிவு எடுக்கணும். ஆனா, இங்கே அப்படி எதுவுமே நடக்கலையே... எல்லாம் அரசியல்வாதிகளோட கைங்கர்யம்.

"ஆமாம்... நீ சொல்றதும் சரிதான். என்னையோ, நம் கிராம மக்களின் கருத்தையோ கேட்காமல், கலெக்டர் தன்னிச்சையாக போட்ட உத்தரவால், இப்போ நாம், நம் உரிமைக்காக போராட வேண்டியுள்ளது,'' வருத்தமாக சொன்னார் சத்யமூர்த்தி.

"இது, காந்தி தேசம் காந்தி தேசம்ன்னு நீங்க அடிக்கடி சொல்வீங்க. இந்த காந்தி தேசத்தில்தான், லஞ்சம், லாவண்யம், பித்தலாட்டம், களவு, கொள்ளை, ஒருவருக்கொருவர் ஏமாத்திக்கிறது, கூட இருந்து குழி பறிப்பது போன்ற சமூக அவலங்கள் நிறைய இருக்குது. நீங்க சொன்ன காந்தி தேசத்தில் தான், இனாமா கிடைச்சுகிட்டிருந்த தண்ணீரை, இப்போ காசு கொடுத்து வாங்கிட்டிருக்கோம். மாசுக் கட்டுப்பாடு நிறைந்த இந்த பூமியில, இனி, காற்றையும், விலைக்கு வாங்க வேண்டிய அவசியம் வந்தால் கூட, ஆச்சரியப்படுவதற்கில்லை...'' ஆவேசமாகப் பேசினான் பாரதி.

"இல்லை பாரதி... நீ சொல்றது எல்லாம் உண்மையாக இருக்கலாம். ஆனாலும், சில விதி விலக்குகளும் இருக்கத்தானே செய்யுது? இனி, நாம சட்டரீதியா போராட வேண்டிய நேரம் வந்தாச்சு... நம் தரப்பு நியாயங்களோட, நாம் வழக்கு தாக்கல் செய்யலாம்...'' என்றார் சத்யமூர்த்தி.

மாசுக்கட்டுப்பாட்டு விதிகளை முறையாக கடைப்பிடிக்காமலும், பஞ்சாயத்து சட்டப்படி

சரியாக நடக்காமலும், தன்னிச்சையாக உத்தரவு போட்ட கலெக்டர் உத்தரவை கண்டித்து, உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு ஒன்று தாக்கல் செய்யலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

ஒரு மாதம் சென்றதும், வழக்கறிஞரிடமிருந்து தகவல் வந்தது. ”நம் வழக்கை விசாரித்த உயர்நீதி மன்றம், மறு ஆணை பிறப்பிக்கும் வரை, நம்ம ஊர் தரிசு நிலத்தில், எந்த குப்பையையும் கொட்டக் கூடாது என்றும், தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம், 1994 (134(3)) ன் படி, நம்ம ஊர் தரிசு நிலத்தை கையகப்படுத்திய கலெக்டர் நடவடிக்கை தவறு என்றும், மேல்முறையீட்டுக்கு மேற்படி நம்ம பஞ்சாயத்தும், சம்பந்தப்பட்ட நகரமும், சுற்றுச்சுழலை தீர்மானிக்கும் அலுவலகத்தை, அணுகலாம் என்றும், சாதக பாதகங்களுக்கு தகுந்தவாறு மறு முறையீடு செய்யலாம் என்றும் சொல்லியிருக்கு.’’

எல்லார் முகத்திலும், மகிழ்ச்சி காணப்பட்டது. ”கிட்டத்தட்ட நாம வெற்றியின் விளிம்பு வரை வந்து விட்டோம். முழுமையான வெற்றி அடை யும் நாள் ரொம்ப துாரத்தில் இல்லை. இது வரை நீங்க கொடுத்த ஒத்துழைப்புக்கு நன்றி.’’ நெகிழ்ச்சியாக சொன்னார் சத்யமூர்த்தி.

அந்த கிராமத்துக்கு இனி, நல்லது நடக்கும் என்ற நம்பிக்கை எல்லாருடைய மனதிலும் தெரிந்தது. பாரதிக்கும், அந்த நம்பிக்கை லேசாக மனதுக்குள் வர ஆரம்பித்தது. காந்தி சிலையை பார்த்தான். அந்த பொக்கைவாய் புன்னகையில், ஏதோ அர்த்தம் தெரிவதாக இருந்தது அவனுக்கு.

## 2. அந்திம கிரியை

டாக்டர் ராகவன் வீட்டு அழைப்பு மணியை, தபால்காரன் சிவா அழுத்தியவுடன், வாசலுக்கு வந்தவர், ”என்ன, போஸ்ட்மேன்... எதாவது ரிஜிஸ்டர் தபால் வந்திருக்கா?’ ’ என்றார்.

”இல்ல சார்... சன்னிதி தெருவில் உள்ள நாடார் கடையிலே, ‘டெலிவரி’ பண்ணிட்டு இருக்கும்போது, ஒருவர் மயங்கி விழுந்துட்டாரு... நாடார், உங்களை அழைத்து வரச்சொன்னார்,’ ’ என்றார் சிவா.

அடுத்த ஐந்தாவது நிமிடம், நாடார் கடையில் இருந்தார் டாக்டர்.

பெருமூச்சு வாங்கிக் கொண்டிருந்த பெரியவரை பார்த்தவுடன், ”ஸ்டெதாஸ்கோப்‘பை வைத்து, மார்பில் இரண்டு கைகளாலும் அழுத்தி அழுத்தி பார்த்தார். உடனே, ”பெரிய ஆஸ்பத்திரிக்கு அழைத்து போக வேண்டும்,” என்றார் டாக்டர்.

பக்கத்து டவுன் ஆஸ்பத்திரிக்கு, தன் காரில், அவரை அழைத்து போக நாடாரும், சிவாவும் உடன் சென்றனர்.

“வர்ற வழியிலேயே அவருக்கு,”மாஸிவ் ஹார்ட் அட்டாக்’ வந்திருக்கு... “யூ ஆர் டூ லேட்’ டாக்டர் ராகவன்.”போஸ்ட் மார்ட்ட’த்துக்கு ஏற்பாடு பண்ணணும்... போலீசுக்கு, ”இன்பார்ம்’ பண்ணிடுங்க;

அவருக்கு சொந்தக்காரங்க யாராவது இருந்தா, தகவல் சொல்லிடுங்க,’ ’ என்றார் அங்கிருந்த டாக்டர்.

ஆஸ்பத்திரியை விட்டு வெளியே வந்த, டாக்டர் ராகவன், போலீசுக்கு தகவல் கொடுத்தார்.

“இவர், பஸ்சை விட்டு இறங்கினதும், நேரா என் கடைக்கு வந்தார். ரொம்ப,”டயர்டா’ இருக்கு... ஒரு, ”கூல்டிரிங்ஸ்’ கொடுங்க’ன்னு. வாங்கி குடித்தார். வெளியூரை சேர்ந்த அவர், ஊர் ஊராய் கோவிலில் சாமி தரிசனம் செய்து வர்றாராம்.....

”நம்மூர் கோவில் சனி பிரதோஷம் பிரசித்தி பெற்றது என்பதை கேள்விப்பட்டு, இன்னிக்கு சாமி கும்பிட்டால் ரொம்ப விசேஷம்ன்னு சொன்னவரு, அப்படியே மயக்கமாயிட்டாரு... நான்தான் போஸ்ட்மேனை விட்டு, டாக்டரை கூட்டி வரச்சொன்னேன்,’ ’ என்றார், நாடார்.

“போஸ்ட்மார்ட்டம்’ மற்றும் போலீஸ்,”பார்மாலிட்டி‘கள் முடிந்த பின், ”பிணத்தை ஆஸ்பத்திரியிலே விட்டுடுங்க... அவங்க என்ன செய்யணுமோ செஞ்சிடுவாங்க,” என்றார் போலீஸ் அதிகாரி.

உணர்ச்சிவசப்பட்டவராய், ”இல்ல... இவர் அனாதை இல்ல... இவருக்கு, நான் காரியம் செய்ய போறேன்,’ ’ என்றார் டாக்டர்.

மற்ற, ”பார்மாலிட்டி’கள் முடிந்த பின், காரில் ஏறி கிளம்பினர்.

”ஏன் டாக்டர், இந்த அனாதை பிணத்துக்கு காரியம் செய்யணும்ன்னு நினைக்கறீங்க... பேசாம ஆஸ்பத்திரியிலேயே விட்டுட்டு, வந்துடலாம்ல... நீங்க, இந்த ஊருக்கு வந்ததிலிருந்து பார்த்துகிட்டுதான் இருக்கேன்...

ஊர்லயோ, பக்கத்து கிராமங்களிலோ, சாவுன்னு கேள்விப்பட்டா, உடனே போய் தோள் கொடுக்கறீங்க... வேண்டிய உதவி செய்யறீங்க... ஆனா, ஈமகிரியை செய்யிற அளவுக்கு வருவீங்கன்னு நினைக்கல,’’ என்றார் நாடார்.

”நாடார்... பகவத் கீதையிலே ஒரு ஸ்லோகம் இருக்கு... எதையும் எதிர்பார்க்காதவன்; அகம், புறம் துாய்மை உடையவன்; வேண்டியவர், வேண்டாதவர் என எண்ணாதவன்; நான் செய்கிறேன் என்று எண்ணாதவன். இப்படி உள்ள பக்தனே, எனக்கு பிரியமானவன்னு கிருஷ்ண பரமாத்மாவே சொல்லி இருக்கார்.

”ஏதோ என்னால் இயன்ற வரை, அப்படி நடக்க முயற்சிக்கிறேன். மேலும், இப்படி நான் நடப்பதற்கு இன்னொரு காரணமும் இருக்கு,’’ என்றார், டாக்டர்.

”அது என்ன சார்?’’ என்றார் போஸ்ட்மேன் சிவா.

”இது வரை யாரிடமும் சொல்லாத ரகசியத்தை இப்ப சொல்றேன்... டில்லியில் வேலை பார்த்துக்கொண்டிருந்த நான், ஒருநாள், சுவாமி சிவானந்த சரஸ்வதியின் உபன்யாசத்தை கேட்கும் பாக்கியம் கிடைத்தது.

உபன்யாசம் முடிந்தவுடன், கூட்டத்தை ஊடுருவியபடி சென்று கொண்டிருந்த சுவாமிகள், ஒதுக்குபுறமாக நின்றிருந்த என்னை பார்த்து, ”இறந்தவர்களை சுமந்து செல்...’ என்று சொல்லி, புறப்பட்டு விட்டார்.

சில நிமிடங்களுக்கு எனக்கு ஒன்றும் புரியவில்லை . ”சுவாமிகள், என்னை பார்த்து எதற்காக இப்படி சொல்ல வேண்டும்...’ என்ற குழம்பிய மனதுடன், என் அறைக்கு திரும்பினேன்.

சிறிது நேரத்தில், பக்கத்து அறையில் ஏதோ சத்தம். சற்று முன் வரை, நல்ல நிலையில் பேசிக் கொண்டிருந்த நண்பனுக்கு மாரடைப்பு; இறந்து போயிருந்தான். அன்று, முதன் முதலாக அந்த நண்பனின் பிணத்தை சுமந்து சென்றவன் தான், இன்று வரை, நுாற்றுக்கும் மேல் பிணங்களை சுமந்து, சுடுகாட்டுக்கும், இடுகாட்டுக்கும் சென்று கொண்டிருக்கிறேன்.

இதில், ஜாதி, மத பேதம்ன்னு கிடையாது. அடக்கம் செய்வதற்கோ, எரியூட்டுவதற்கோ ஏற்பாடு செய்து கொடுத்து, கடைசி வரைக்கும் துாக்கிச் செல்வேன். மரணம் ஏற்பட்ட குடும்பத்தில், சோகம் நிறைந்திருக்கும். அந்த சூழலில் காரியங்களை எடுத்து செய்வதற்கு ஆட்கள் இருக்க மாட்டார்கள்.

“அம்மாதிரியான சூழ்நிலையில், பொருளுதவியும் செய்து, உதவிக்கரம் நீட்டினால், அக்குடும்பத்திற்கு பெரிய ஆறுதலாக இருக்கும். சுவாமிகள் கட்டளைப்படி, என் கடைசி மூச்சு

இருக்கும் வரை, இப்பணி தொடரும்," என்றார், டாக்டர்.

"ரொம்ப பெருமையா இருக்கு, டாக்டர்... உங்க சேவையில, நானும், போஸ்ட்மேனும். அணில் மாதிரி சேவை செய்ய காத்திருக்கோம். ஆனாலும், எனக்கு ஒரு சந்தேகம். நீங்க இப்படி செஞ்சிட்டு வர்ற புனிதமான சேவையை, உங்க அக்ரஹாரத்து ஜனங்க வெறுக்கிறாங்க, ரெண்டு வருஷமா எதிர்க்கிறாங்க, உங்களை விரோதமா பார்க்கிறாங்களே'' என்றார் நாடார்.

"அது, அவங்களோட அபிப்ராயம்... அஞ்சு விரலும் ஒண்ணாவா இருக்கு... என் கடன் பணி செய்து கிடப்பதே...'' என்றார் டாக்டர்.

ஊர் வந்துவிடவே, தன் வீட்டு வாசல் திண்ணையில், இறந்தவரின் உடலை கிடத்தினார்.

நாடாரிடமும், போஸ்ட்மேனிடமும், "நீங்க ரெண்டு பேரும் ரொம்ப உதவி செஞ்சிருக்கீங்க... இன்னும் ரெண்டு, மூணு பேரை கூட்டி வந்து, பிணத்துக்கு தோள் கொடுத்தீங்கன்னா, ரொம்ப புண்ணியமா போகும் செய்வீங்களா?'' என்றார் தழுதழுத்த குரலில்.

"என்ன டாக்டர், கண் கலங்கிட்டு... இந்த ஊருக்கு எவ்வளவு உதவிகள் செஞ்சிருக்கீங்க... நீங்க சொல்லி, நாங்க செய்யாம இருப்போமா... கடையிலிருந்து ரெண்டு, மூணு பேரை வரச்சொல்லி இருக்கேன்... ஊர் மக்களுக்கும் சொல்லியிருக்கேன்... தகனத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் பண்ணிட்டு இருக்கோம்... நீங்க கவலையை விடுங்க; மத்த வேலையை பாருங்க'' என்றார் நாடார்.

டாக்டர் ராகவன், தன் பூர்வீக கிராமமான இந்த ஊருக்கு வந்து, இரண்டு ஆண்டுகள் இருக்கும். சொந்தமாக, 'கிளினிக்' வைத்து, இந்த கிராமம் மட்டுமல்லாமல், சுற்றுபுற கிராமங்களுக்கும் வைத்தியம் செய்து கொண்டிருந்தார். தன் கடைசி காலத்தில், சொந்த மண்ணின் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்று, எண்ணம் கொண்டிருந்தார்.

தினமும் காலை, 7:00 மணிக்கு, அக்ரஹாரம் ஒட்டியுள்ள தெருக்களுக்கு, 'ஸ்கூட்டி'யில் சென்று, யாராவது நோய்வாய்பட்டிருந்தால், அவர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பார். வீடு திரும்ப, மதியம், 1:00மணி ஆகிவிடும். சாப்பாட்டிற்கு பின் சிறிது ஓய்வு.

மீண்டும், 3:00 டூ 6:00 மணி வரை, சுற்றுபுற கிராமங்களுக்கு மருத்துவ சிகிச்சை. இரவு, 7:00 -டூ 10:00 மணி வரை, வீட்டிற்கு வரும் நோயாளிகள். அவர்களால் என்ன கொடுக்க முடியுமோ, அதை உண்டியலில் போடச் சொல்வார். மாதம் ஒருமுறை உண்டியல் திறக்கப்பட்டு, அதில் உள்ள பணம், தர்ம காரியங்களுக்கு பயன்படுத்தப்படும்.

அவருக்கு வரும் கடிதங்களில், அவர் பெயர் குறிப்பிடாமல், 'கைராசி டாக்டர்' என்ற முகவரியுடன் வரும். அந்த அளவிற்கு, கிராம மக்களின் அன்பையும், மதிப்பையும் பெற்றிருந்தார்.

தகவல் தெரிந்து, அக்ரஹாரத்து மக்கள், கொஞ்சம் கொஞ்சமாக, ராகவன் வீட்டு முன் கூடினர்.

கூட்டத்தை விலக்கி வந்த, சாம்பசிவ குருக்கள், ''என்ன டாக்டர்... இன்னிக்கு, சனி பிரதோஷம், சாமி புறப்பாடு வேற இருக்கு... யாரு இந்த அனாதை பிணத்துக்கு காரியம் பண்ணுவா....?

“என்ன ஜாதியோ, என்ன கோத்திரமோ... நீங்க பாட்டுக்கு பிணத்தை ஆஸ்பத்திரியிலயே விடாம, ஒங்காத்துக்கு கொண்டு வந்திருக்கிங்க... சேதி தெரிஞ்சு, கோயில் நடை சாத்தியாச்சு... தீட்டு வேற. பேசாம,”டெட் பாடி‘யை திரும்பவும் ஆஸ்பத்திரியிலயே விட்டுட்டு வந்துடுங்கோ,’ என்றார்.

குருக்களின் பேச்சுக்கு ஆதரவாக, ”டாக்டருக்கு ஏன் இப்படி புத்தி போகுது... அனாதை பிணத்துக்கு இவர் காரியம் பண்ண போறாராமே... இவருக்கு, பைத்தியம் பிடிச்சிருக்கா என்ன...'' என, ஆள் ஆளுக்கு பேசினர்.

சாஸ்திரத்திலும், சம்பிரதாயத்திலும், சடங்குகளிலும் கரை கண்ட, ராகவன் டாக்டர். விளக்கம் சொல்லி, குருக்கள் வாயை அடைக்க முடியும். ஆனால், மனசு உருக வேண்டிய இந்நேரத்தில், அறிவு, அதுவும் சக்கை அறிவை பற்றி பேசி என்ன ஏற்பட போகிறது என, மனதுக்குள் நினைத்தார்.

”ராமாயணம் எல்லாருக்கும் தெரியும். சாட்சாத் ஸ்ரீராமரே, ஜடாயு பறவைக்கு அந்திம கிரியை செஞ்சாருன்னு உங்களுக்கு தெரியுமா...? ராமர் வேற கோத்திரம், ஜடாயு வேற கோத்திரம்... ஜாதி மட்டுமல்ல, இனமே வேற... அப்படி, சாட்சாத் ஸ்ரீராமரே செஞ்சிருக்கும்போது, நான் சாதாரண மனிதன், இறந்தவருக்கு, அந்திம கிரியை செய்யிறதிலே என்ன தப்பு,'' என்றார்.

ராகவனை சுற்றி நின்ற, வைதீக கூட்டமும், மெத்த படித்த கூட்டமும், அவர் சொன்னதை காதில் போட்டுக் கொள்ளவில்லை.

”இத பாருங்க ராகவன், நீங்க டாக்டருங்கிறது அப்புறம். முதல்ல, நீங்க இந்த அக்ஹாரத்து மனுஷன்... எங்களோட ஒண்ணா இருக்கிறவர்... அக்ரஹாரத்துக்குன்னு சில கட்டுப்பாடுகள் இருக்கு; அதை மீற கூடாது. அதனால், ஆஸ்பத்திரியில் பிணத்தை விட்டுட்டு வந்துடுங்க,'' என்றார் சாம்பசிவ குருக்கள்.

“சரி, குருக்களே... சாமி பஜைக்கு, பங்கம் வராது நம்புங்கோ ... பெரியவா பெரியவான்னு சொல்லிண்டி இருக்கேளே, அந்த பெரியவா என்ன சொல்லியிருக்கா,”அனாத பிரேத சமங்கார அச்வமேத பலம் லபேத்!’ அதாவது, அனாதை பிணத்துக்கு, அந்திம கிரியை செஞ்சா, அச்வமேத யாகம் செஞ்ச பலன் கிடைக்கும்ன்னு சொல்லியிருக்கா.''

”ஓய், ராகவன்... பெரியவா சொன்னதா ஏதேதோ சொல்லாதீங்கோ,'' என்றார் பட்டு சாஸ்திரிகள் கிண்டலாக.

சாஸ்திரிகளே, நான் சொன்னது, சாஸ்திரம் மட்டுமல்ல... பெரியவாளோட திவ்ய சரித்திரம்... உங்களுக்கு தெரியாம போனது ஆச்சரியமா இருக்கு... இன்னொரு சம்பவம்

சொல்றேன், அதை கேட்ட பிறகாவது உங்க புத்தி தெளியுதான்னு பாருங்கோ ...

காஞ்சிபுரத்திலே ஓடற வேகவதி ஆற்றிலே, வெள்ளத்தின் போது ஒரு பிணம் வந்தது. சக்ரவர்த்தி என்ற வைணவ பக்தர், அந்த பிணத்தை கரையிலே எடுத்து பார்த்தபோது, அவர் மேல், வைணவ சின்னங்களான திருமண் காப்பு (நாமங்கள்) இருந்தன.

உடனே, ஒரு வைணவருக்கு செய்ய வேண்டிய அந்திம கிரியை செஞ்சார்... பூஜையும், புரோகிதமும், மெத்த படித்த சாஸ்திரங்களை கரை கண்டவா எல்லாரும் சேர்ந்து, அந்த சக்ரவர்த்தியை, ஜாதி ப்ரஷ்டம் செய்திருந்தனர்.

ஆனால், அந்த ஊரில் கோவில் கொண்டிருந்த தேவாதிராஜா பெருமாளோ, ஊர் மக்களிடம், "சக்கரவர்த்தி அப்படி செய்தது, எனக்கு சம்மதம்'ன்னு கூறி, 'ஊருக்கு பொல்லான்; ஆனால், அவன் எனக்கு நல்லான்' என்று சொல்லவே, அவருக்கும், அவர் பரம்பரைக்கும்,"நல்லான் சக்கரவர்த்தி என்ற பெயர் வர காரணமாயிற்று,' என்று சொல்லி, அருகில் இருந்த குளத்தில் மூழ்கி. பூணூலை வலது தோளுக்கு மாற்றினார்.

தீச்சட்டியை கையில் எடுத்து, தெளிவாக மந்திரத்தை சொன்னபோது, அதிர்ந்து போனார், பட்டு சாஸ்திரிகள். ராகவன், தன்னை விட, விஷயம் தெரிந்தவராக இருப்பதை நினைத்து, ஆச்சரியப்பட்டார்.

நாடார், சிவா மற்றும் இருவருடன் டாக்டர் முன்னே செல்ல, இவர் மீது மரியாதை வைத்திருந்த ஊர் மக்கள், ஊர்வலமாக போக தயாராக இருந்தனர்.

சுடு காட்டில், வாக்கரிசி போட்ட பின், மந்திரங்களை தெளிவாக சொல்லி, சிதைக்கு தீ மூட்டினார்.

உதவி செய்தவர்களுக்கு, ராகவன் நன்றி சொல்ல, நாடாரும், சிவாவும் மற்றும் ஊர் மக்களும் நெகிழ்ந்து போயினர்.

'எப்பேர்பட்ட மனிதநேயம் இவருக்கு...' என்று தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

மீண்டும் ஆற்றில் குளித்து, வீட்டு வாசலில் வைத்திருந்த தண்ணீரில் ஒரு சொம்பு எடுத்து கை, கால்களை சுத்தம் செய்து, உடைகளை மாற்றிய பின், மனைவியிடம், "சூடா ஒரு கப் காபி கொண்டு வா,'' என்றார்.

திடீரென ஒரு உந்துதல், மின்னலென ஒரு யோசனை. இறந்தவரின் முகம் திரும்ப திரும்ப கண்ணில் வரவே, பரணில், பழைய பெட்டியில் இருந்த, கருப்பு வெள்ளை புகைப்படத்தை எடுத்து பார்த்தபோது, கண்கள் குளமாகின.

மன்னார்குடி நேஷனல் ஸ்கூல், 1968, எஸ்.எஸ்.எல்.சி., "எப்' பிரிவு,"குரூப் போட்டோ'வில், தலைமை ஆசிரியர், வி.சீனிவாசனுக்கு பின்புறம், தானும், நண்பன் சந்திரசேகரனும் நின்றிருந்ததை பார்த்தார்.

"பிறப்பால் தொடரும் உறவுகளாக இல்லாமல், பிணைப்பால் தொடரும் உறவுகளே

புனிதமானது என்பது, எவ்வளம் பொருத்தமானது. புகைப்படத்தில் இருந்தவரின் மூலம், தான் இப்படி உயர்ந்த நிலைக்கு வந்ததும், அதை மறக்காமல் அவரை தேடி சென்றபோது, கிடைக்காமல் போனதும், ஞாபகத்திற்கு வந்தது. அவ செய்த உதவிக்கு நன்றி கடன் தானோ இன்று செய்த செயல்…’ என்று நினைத்து கொண்டார், டாக்டர் ராகவன்.

## 3. வானம் தொட்டு விடும் தூரம்தான்

காவிரிபடுகையில், பாமணி ஆற்றின் கிளை ஆறானா, முள்ளியாற்றின் கரையில்தான், அஞ்சலையின் கிராமம். ஒருகாலத்தில் செழிப்பாகதான் இருந்தது. ஆனால், கடந்த அஞ்சு வருடமாக, விவசாயம் பொய்த்து போயிருந்தது..

சமீபத்தில் கஜா புயல் மூலம், ஏற்பட்ட வெள்ளத்தினாலும், கடும் மழையினாலும், அவளுடைய குடிசை மட்டுமல்ல, அந்த சேரியில் எல்லா குடிசைகளும் நாசமாகி போனது. வரும் பாதையில் விழுந்த மரங்கள் அகற்றப்படாமல், மின்துண்டிப்பு வேறு.

குடிசை சுவர் இடிந்து விழுந்ததில், வெட்டவெளியாக இருந்த ஜனங்களுக்கு, சமூக அமைப்பும், தன்னார்வ தொண்டு நிறுவனமும், தார்பாலின்பாய்களும், ரொட்டி, பால்பாக்கட், பிஸ்கட் பழம் போன்றவைகளை மிகவும் சிரமப்பட்டு கொண்டு வந்து கொடுத்து விட்டு போயிருந்தார்கள்.

கொடுத்த தார்ப்பாய்களை வீட்டின் முகப்பில் கூரையாக அமைத்து இருந்தார்கள்.

ஒரு வாரமாக தூங்கா இரவு தான்!

பக்கத்து ஊரான விளக்குடியிலிருந்து, வெள்ளந்தியான ஜெயபால் நாடார்,

அய்யனார் கோயில் பக்கம் மளிகைகடை சேரி மக்களுக்காகவே நியாயமான விலை. அத்துடன் கடனுக்கும் சாமான்கள் கொடுத்து வந்தார். ”தன்னார்வ தொண்டுகள் கொடுத்த பொருள்கள், தீர்ந்து போனதால், இன்றாவது நாடார் கடை திறப்பாரா, என்று எதிர்பார்த்து கொண்டிருந்தாள் அஞ்சலை.

நாடார் மிகவும் சிரமப்பட்டு சைக்கிளை தள்ளிக் கொண்டு வந்ததை பார்த்தாள். கேரியரில் மளிகை சாமான்கள் காய்கறிகள் மூட்டை இருந்தது. சைக்கிள் ஸ்டான்டை போட்டபடியே. ”நீங்க சாப்பாட்டுக்கு கஷ்டப்படுவீங்கன்னு நினைச்ச உடனே டவுனுக்கு போய் எல்லாம் வாங்கியாந்தேன்…’

மத்த பங்காளிகளின் குடும்பத்துடன் சாமான்கள் வாங்கிட்டு வந்தவளுக்கு, மனதில் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் ஊரை விட்டு ஓடிப் போன உள்ளூர் வார்டு கவுன்சிலர் மீதும் பஞ்சாயத்து தலைவர் மீதும் கோபம், கோபமாக வந்தது.

ஒரு முறை “கக்கூஸ் கட்டி கொடுங்க’ என்று கேட்ட போது களிமண் மூளக்கு”கக்கூஸ் ஒரு கேடா என்று சொன்ன ஆளு.’

அஞ்சலை, ஜெயபால் ஊரான விளக்குடியில் பிறந்து பத்தாவது வகுப்பு வரை, படித்தவள். தையல் கற்று கொண்டு இருந்தாள். ஆனால், அனுபவ படிப்பு அவளிடம் இருந்தது.

உறவு பையன் மாடசாமிக்கு வாக்கப்பட்டு வந்த பிறகு அவனிடம், பழைய தையல் மிசின்

வாங்கிக் கொடு என்று கேட்ட போது, ”அவனவன் பொழைப்புக்கே பணம் இல்லைன்னு, கஷ்டப்படறான், இதிலே ஒனக்கு தையல் மிசின் ஒரு கேடான்னு?' சொல்லி அவள் வாயை அடைத்தான்.

பங்காளிகளிடம், ”கூரை இல்லாமல், கரண்ட் இல்லாமல், ராவு பூரா முழுச்சிட்டு எவ்வளவு நாளக்கு, இப்படி காலம் தள்ள முடியும்?' நாடார் கடன் கொடுக்கிறார்னு எப்போதும் வாங்கி சாப்பிட முடியுமா?

நமக்கு வேலை கொடுத்த முதலாளி வயல்களும் நாசமா போச்சு, கூலி வேலை செய்ய கூட முடியாத நிலையில், அடுத்த வேளை சோத்துக்கு தவிக்கிறோம். கஜா புயல் நம்ம வாழ்க்கையை புரட்டி போட்டுடுச்சு. இதுவரைக்கும் அரசாங்கமும் எட்டிப் பார்க்கலை, பஞ்சாயத்து தலைவரும் சரி, கவுன்சிலரும் சரி கண்டுக்காம ஊரை விட்டு போயிட்டாங்க.” “நாம இனிமே எப்படி பொழைக்கப் போறோம் நமக்குன்னு யாருமே இல்லை.”

“ஏன் மாடசாமி புலம்பற?” “இதோ நான் இருக்கேன்”. “கவலைப்படாதே.”

குரல் வந்த திசையை பார்த்த போது, குடை பிடித்துக் கொண்டு, காவி பல் தெரிய புரோக்கர் பொன்னுரங்கம் வந்து கொண்டுருந்தான்.

”அட டே! நம்ம புரோக்கர் ஏது இவ்வளவு தூரம்?'

”மாடசாமி, உத்திராபதி, இருளப்பன் குடும்பங்க, கஜா புயலினால் கஷ்டப்பட்டிருப்பாங்க என்னை வேலையில, சேத்து விட்ட மாதிரி, அவங்களயும் இங்கே அழைச்சிட்டு வந்துடுன்னு உன் கூட்டாளி பரமசிவம் தான், சொல்லி அனுப்பிச்சான் அதான் கிளம்பி வந்தேன்.''

”போன தடவை கூப்டப்ப, நீங்க யாரும் என் பேச்சை கேட்கலை, ஆனா பரமசிவம் கேட்டான். இப்ப வாங்கின கடனை அடச்சுட்டான். நிம்மதியா குடும்பத்தோட சந்தோசமா இருக்கான். மறுபடியும் ஊருக்கு வந்து கஷ்டபட தயாரா இல்லைன்னு சொல்லிட்டான்.''

”யாரு இந்த காலத்திலே, வட்டி வாங்காமா, அசலை மட்டும் திருப்பி கொடுத்தா போதும்ன்னு கடன் கொடுப்பாங்கா சொல்லு?''

”நீயும் உன் பங்காளிங்களோட கிளம்பி வந்தேன்னு, வைச்சுக்கோ, இங்கே வாங்கின, ஒன் கடனை அடச்சிடலாம். வேலை செஞ்சு வாங்கிற சம்பளத்திலே முதலாளிகிட்டே வாங்கற கடனயும், இரண்டு வருசத்திலே அடச்சிடலாம். என்ன சொல்றே? இப்பவாது என் பேச்சை கேளு மொத்த குடும்பமும் கிளம்புங்க…''

”மத்த பங்காளிங்கக்கிட்ட பேசிட்டு சொல்றேன் நாளைக்கு வா…''

புரோக்கர் பொன்னுரங்கம் வேலையே இதுதான். விவசாயம் பொய்த்து போனதால் ஒரு வேளை சோத்துக்கு, கஷ்டபடும் மக்களை ஒவ்வொரு ஊரா போயி பாத்து, தேன் ஒழுக பேசி, ஆசையை காட்டி, மயக்கி, தன் பக்கம் இழுத்து. முதலாளியிடம் சேர்த்து விட்ட பிறகு, அந்த ஊர் திரும்பி போக மாட்டான்.

எல்லா பிறகு தொடர்பையும் துண்டித்து விடுவான்.

மாடசாமியை ஆசை வார்த்தை காட்டி வேண்டிய மட்டும் மூளை சலவை செஞ்சுருக்கோம். மாடசாமி பங்காளிங்க குடும்பம், அப்படி இப்படின்னு சேத்தா, மொத்தம் 20 பேர்க்கு குறையாது, மனதில் கமிஷன் கணக்கு போட்டான் பொன்னுரங்கம்.

“புரோக்கர் சொன்ன மாதிரி, அவன் கொடுக்கிற பணத்தை வாங்கிட்டு, இங்கே வாங்கின கடனை அடைச்சுட்டு” அங்கே போய் சம்பாதிக்கலாம் என்ன சொல்றீங்க.?’

மாடசாமியின் பேச்சு மத்த பங்காளிங்களுக்கு ஆர்வத்தையும் ஆசையையும் தூண்டியது.

ஆனால் அஞ்சலை மட்டும், ‘ஏன் மச்சான் போய்தான் ஆகணுமா?” என்று கேட்டதும், மாடசாமிக்கு கோபம் கோபமாய் வந்தது. ”ஏன் உன் அப்பன்கிட்ட பணம் வாங்கிட்டு வறியா? ஒங்க அப்பனும் நம்மள மாதிரி அன்றாட காய்ச்சிதான். பெரிசா பேச வந்துட்டா? தினமும் பட்டினி கிடக்கனுமா?” மாடசாமி இப்படி சொன்னதும்,

”இல்ல மச்சான், இப்ப 6 மாசம், அங்கே குடியேறி எப்படி வயத்திலே இருக்கிற பிள்ளையை பெத்து எடுக்க போறேன்னு, கவலை. அதான்…’ ’

”ஏண்டி கூறு கெட்டவள ஒண்ணோடுதானே நாங்களும் வாரோம். நாங்க பாத்துக்கமாட்டாமா ? முதலாளி ஆஸ்பத்திரியில் சேத்து விடுவாரு கவலையை விடு’ ’

அதே சமயம் அஞ்சலைக்கு நாடாருக்கு கொடுக்க வேண்டிய கடன பத்தி ஞாபகம் வந்தது. கிட்டதட்ட ஒரு வருஷம் பாக்கி இருக்கு. இப்ப வர்ற பணம் மூலம் கடன அடச்சுடலாம். அவரா இதுவரைக்கும் கேட்கலை.? நாம கொடுக்கறது தான் மரியாதை…

நமக்கு இனி விடிவு காலம்தான்னு நினைச்சு எல்லா குடும்பமும் கிளம்பலாம் என முடிவு எடுக்கப்பட்டது. ”நாங்க 20பேர் வர்றதுக்கு தயாரா இருக்க்கோம்.’

எதிர்பார்த்த ஆட்களைவிட, கூட வராங்க என்று சொன்னதும் பொன்னுரங்கத்தின் சந்தோசத்திற்கு அளவில்லாமல் போனது. நமக்கு சாதகமான ஆளுங்க. அழைச்சிட்டு வந்துடலாமா? முதலாளியிடம் தகவல் சொன்னான்.

“ஒங்களுக்கு என்ன வேலைன்னு, சொல்லிடறேன். நாம போற இடம் மெயின் ரோட்டிலிருந்து 5 கி.மீ. தொலைவில் 100 ஏக்கர் தரிசு நிலத்திலே, செங்கல் சூளை வச்சிருக்காரு. காலைலே 8 மணிக்கு வேலை ஆரம்பிச்சு, மாலை 6 மணிக்கு முடியும்.’ அவங்க சொல்ற இடத்திலேதான் நீங்க தங்கணும். சூளை மேட்டுக்கு போகிற பாதை மேடும் பள்ளமுமா இருக்கும். பெரிசா வசதி கிடையாது.”அங்கே வந்தபிறகு, நீங்க யாரும் இந்த வசதி பத்தலை, அந்த வசதி இல்லன்னு, புலம்ப கூடாது. தினமும் வேலை முடிஞ்ச கையோட, சூப்பரவைசர் ஒங்களுக்கு சரக்கு வாங்கிக் கொடுப்பாரு, சாப்பிட்டு மறுநாள் கரக்டா 8 மணிக்கு வேலைக்கு வந்துடனும்.’ செல்போனே யூஸ் பண்ணமுடியாது.

“வேலையோட, ஓசி சரக்கு வேறே. அந்த முதலாளிக்கு எவ்வளவு நல்ல மனசு இருக்கணும்” பங்காளிகள் மாடசாமியிடம் தூபம் போட்டார்கள்.’

"எல்லோரும் பரமசிவம் மாதிரி, விசுவாசமா இருப்பாங்கன்னு சொல்லி ஒங்களுக்கு சிபாரிசு பண்ணியிருக்கேன். என் பெயரை காப்பாத்திடுங்க''

"பூம்பூம் மாடு' மாதிரி தலையாட்டினார்கள் மாடசாமியும் அவன் பங்காளிகளும்.

ரூ.20/- பாண்டு பத்திரத்தில், ஒரு லட்சம் கடன் பெற்றதாகவும். கடன் அடையும் வரை, வேலை செய்யவேண்டும், என்றும் எழுதி இருந்தது. கைநாட்டு வாங்கிய பிறகு ஒவ்வொரு ஆளுக்கும் கடன் கொடுக்க வேண்டிய ரூபாய் 20000யில் ரூபாய் 2000கமிசன், எடுத்துக் கொண்டு, மீதியை கொடுத்தான். படிச்சவங்க, யாரும் இல்லாமல் போனது, அவனுக்கு சாதகமாகப் போனது. "இதபாரு மாடசாமி டவுனுக்கு போய் வண்டி ஏற்பாடு பண்ணி, கூட்டியாறேன் ரெடியா இரு.''

மாடசாமியும் அவன் பங்காளிகளும், உள்ளூர் கடனை அடைத்து விட்டு பிள்ளகளுக்கு துணிமணி ஸ்வீட் வாங்கிய பிறகு சரக்கை புல்லா அடிச்சிட்டு தள்ளாடிய படி வந்தார்கள்.

"பத்திரம் எங்கேய்யா?'' என்று அஞ்சலை கேட்ட்துக்கு அது புரோக்கர்கிட்ட இருக்கு அதுக்கு இப்ப என்ன?

"கூறுகெட்ட மனுசனா நீ? பிள்ளக்கு பசிக்குதுன்னு நாடார் கடைக்கு போயிட்டு வரதுக்குள்ளாற கைநாட்டு வச்சுட்ட. என்ன எழுதிருக்குன்னு படிச்சிருப்பன்ல.''

"ஏண்டி கழுதை! நாலு எழுத்து படிச்சவ என்கிற, திமிர்ல பேசறியா? அப்படி பத்திரத்தில் என்ன எழுதிருக்குன்னு தெரிஞ்சுகிட்டு என்னடி பண்ணப் போறே?'

போதையில் அவளை அடிக்க வேறு செய்தான்.

"நான் சொல்றதை இப்ப கேக்கமாட்டே. ஆனா, ஒரு நாளைக்கு வருத்தபடுவே. கொஞ்ச பணமாவது கொடு நாடாருக்கு கொடுத்துட்டு சொல்லிட்டு வரேன்...''

அடுத்த ஒரு மணி நேரத்தில் வேன் வந்துவிடவே மூட்டை முடிச்சுகளுடன், வேனில் ஏறி உட்கார வேன் புறப்பட்டு சென்றது.இரவு பயணத்தில் யாருக்கும் தூக்கம் வரவில்லை.

வண்டியில் போகும்போது மாடசாமி, புரோக்கரிடம், "ஏன் சாமி? பங்காளி பரமசிவம் வேலை பாக்கிற இடத்துக்குதானே நாங்களும் போறோம்?''

நீங்க தங்கற இடத்திலிருந்து உள்ளே 2 கி.மீ இருக்கு உடனே பாக்க முடியாது?"

"அதனாலென்ன? 2 கி.மீ தானே? என்னிக்காவது வேலை இல்லாத அன்னிக்கு பாத்துட்டா போச்சு"

அட, களிமண் மூளைகாரங்களா, ஒங்களுக்கு வாரம் 7 நாளும் வேலைதான்டா சக்கையா பிழிய போறாங்க" வன்மத்துடன் மனதில் சிரித்துக்கொண்டான் பொன்னுரங்கம்.

மறுநாள் காலை 7 மணிக்கு, இறங்கிய எல்லோருக்கும் அதிர்ச்சி

100ஏக்கர் தரிசுநிலம் செம்மண் காடாக இருந்தது. சுற்றிலும் வான் உயர்ந்த பனை

மரங்கள். காற்றில் மட்டைகள், ஒலைகள் சத்தம், ஏதோ ஒரு அமானுஷ்ய சூழலில் தாங்கள் இருப்பதாக அஞ்சலை மட்டும் உணர்ந்தாள்.

அடுத்த பத்தாவது நிமிடம், ஆட்டுகிடா மீசையுடன், தெலுங்கு பட வில்லன் கணக்கில், கலர் வேட்டி கழுத்தில் 20 பவுன் சங்கிலி, கையில் சுருட்டு, பாடிகார்டாக, இரண்டு தடியன்கள் வலம் சூழ, ஜீப்பை விட்டு இறங்கினான் செங்கோடன். அவனை பார்த்ததும் கதி கலங்கி நின்றது மொத்த குடும்பமும்.

“வாங்க முதலாளி!” கூழை கும்பிடு போட்ட பொன்னுரங்கம், ”நீங்க சொன்னபடி ஆட்களை கொண்டாந்துட்டேன்.’

”இத பாருங்க புரோக்கர்கிட்ட கொடுத்த பத்திரம் என்கிட்ட இருக்கு. சீக்கிரம் வேலையை முடிச்சு கடனை அடைங்க.’

“ஒங்க எல்லோருக்கும், தங்கறதுக்கு தனி தனி குடிசங்க ரெடியா இருக்கு”.

”ஒவ்வொரு ஞாயித்துக் கிழமையும் குடும்பத்துக்கு, வேண்டிய அரிசி பருப்பு மளிகை சாமான், எண்ணெய், என் ஆளு கொண்டு வந்து கொடுப்பான். அத வாங்கிட்டு, அந்த வாரம் முழுவதும் வச்சுக்கனும்.’

”காலைல எட்டு மணிக்குள்ளார சமைச்சு, சாப்பாட்டு தூக்கை எடுத்துகிட்டு, இங்கிருந்து 2 கி.மீ தள்ளி இருக்கிற, செங்கல் காளவா போய், மண் குழைச்சு கொடுக்கிறதும், காளவா எரிக்க, மரத்தை வெட்டி, விறகாக அடுக்கி வைக்கறதும்தான் வேலை.’

இந்த 100 ஏக்கர் இடத்தை சுத்தி எல்லா பக்கமும் கரண்ட் முள்வேலி போட்டுருக்கு.. 24 மணி நேரமும் செக்யூரிட்டி இருப்பாங்க.

“வேலை முடிஞ்சதும் யாருக்கு சரக்கு வேணுமோ, சூப்பர் வைசர்கிட்ட வாங்கி சாப்பிடுங்க. இதுக்கு நீங்க காசு கொடுக்க வேண்டாம்.”பொதுவா ஒரு கிணறு இருக்கு, அதிலிருந்துதான் குடிக்கவும், குளிக்கவும் தண்ணீர் எடுக்கணும்.’

“அதெல்லாம் சரிங்க. நாங்க பொம்பளங்க வெளி வாசல் போக கக்கூஸ் இல்லையா?’ என்று அஞ்சலை கேட்டதும்,”அட தூத்தறி, கக்கூஸ் கேக்குதா கக்கூஸ்?’ ”நீங்க கோவிச்சுக்காதீங்க முதலாளி, இதுகளுக்கு கக்கூஸ் ஒரு கேடு?’. இப்படி மாடசாமி சொல்லவே அடங்கி போனாள் அஞ்சலை.

”இன்னிக்கு ரெஸ்ட் எடுங்க. நாளைக்கு காலையில வேலை ஆரம்பிச்சுருங்க. என்ன சரியா…? மெயின் ரோட்டுக்கு போயிட்டு வரலாம்ன்னு நினைச்சா தொலஞ்சிங்க…’ ’

”எல்லா வசதிகளும் இருக்கறப்ப நாங்க ஏன் போகப் போறோம்?’ என்றான் மாடசாமி.

சிறிது நேரம் கழித்து ஜீப் கிளம்பி சென்றது.

ஆச்சு இன்னியோட நாலு மாசம் ஆச்சு

செங்கோடன் சொன்னது, வார்த்தை ஜாலம் என்று தெரிந்தது.

பலசரக்கு சாமான்கள் முதல் ஒரு மாதத்திற்கு மட்டும் கொடுத்தவன் அடுத்த வாரம் அளவை குறைத்து வயிற்றுக்கு பத்தாமல் அனுப்பியிருந்தான்..

கொடுத்த மட்டமான சரக்கு அவர்கள் செஞ்ச கடின வேலைக்கு பத்தாமல் இருந்தது.

முதல் இரண்டு மாதம் இருந்த பொது டி.வியையும் எடுத்து கொண்டான் செங்கோடன்.

அன்று அஞ்சலைக்கு, பிரசவவலி, ஏற்பட்டு துடி துடித்தபோது, ஆஸ்பத்திரிக்கு அனுப்பாமல், அதுகளுக்கு ஆஸ்பத்திரி ஒரு கேடா? என்று சொல்லி. குருவம்மாவை விட்டு பிரசவம் பார்க்க செய்தான் செங்கோடன்.

பிரசவித்து 20 நாள் கூட ஆகி இருக்காது. ஒரு நாள், காலை 10 மணி. பிறந்த கை குழந்தைக்கு, தன் குடிசையில் தாய்பால் கொடுத்து கொண்டிருந்த சமயம், திடீரென ஜீப்பில் இறங்கிய செங்கோடன், ”வேலைக்கு போகாம இங்கே என்னடி பண்றேன்னு’? தன் பூட்ஸ் காலினால் உதைத்து, தலை மயிரைபிடிச்சு, குடிசை வெளியே உதைத்து தள்ளினாள். அவள் முகத்தில் அடி பட்டு ரத்தம் வழிந்தது.

”சீ நாயே! சீக்கிரம் வேலைக்கு போடி…’’ என்று கத்தவே ரத்தம் சொட்டச் சொட்ட கை குழந்தையை தூக்கிக் கொண்டு போன பிறகுதான், ஜீப்பில் ஏறி போனான் செங்கோடன்.

அஞ்சலைக்கு அவன் பேசிய திட்டுகளையும், ஏற்படுத்திய, காயத்தையும் நினைத்து, தூக்கில் தொங்கிவிடலாம் என்று நினைத்தவள், அடுத்த நிமிடம் குழந்தைகளை நினைத்து, எண்ணத்தை மாற்றிக் கொண்டாள்.

வாழ்ந்து காட்டணும் இந்த செங்கோடன் முகத்திரையை கிழிக்கணும்.

மற்ற பங்காளிகள் பொண்டாட்டிகளும் வக்கு இல்லாத புருசன கட்டிக்கிட்டு தினமும், நரகவேதனை அனுபவிச்சுட்டு வரோம். விடிவு காலம் எப்போது என்று புலம்பி கொண்டிருந்தார்கள்.

ஒருநாள் மரம் வெட்டப் போன மாடசாமி, எலும்பும், தோலுமாக காணப்பட்ட, பரமசிவத்தை பார்த்தான்.

என்ன பரமசிவம் நீ நல்லா இருக்கிறதா, புரோக்கர் சொன்னான்.

”நம்ம பங்காளிகள் வந்து ஆறு மாசம் ஆச்சு’

பரமசிவம், மாடசாமியை தரதரவென்று ஒரு மறைவான இடத்துக்கு இழுத்துபோய், கடனை அடைக்கிறதாவது, சந்தோசமா இருக்கிறதாவது, புரோக்கர் சொன்னது எல்லாம் பொய். ரூ.50,000 கடன் கொடுத்துட்டு அக்ரிமென்டில் ஒரு லட்சம் வாங்கி இருக்கே பண்த்திரத்தை பாருன்னு சொல்றான்”.

”படிச்சுருந்தா இந்த நிலைமை வந்துருக்குமா?’’

கடனயும் வட்டியையும், அடைக்க இன்னும் எவ்வளவு வருசம் வேலை பார்க்கணுமோ தெரியல. நடபிணமாதான் வாழ்ந்திட்டிருக்கேன். பங்காளி”

செங்கோடன் பணபலம், அரசியல்பலம் உள்ளவன்னு இங்க வந்தப்ப, தெரிஞ்சுப் போச்சு. “யாரும் அவனை எதிர்த்து பேசமுடியாது.”

இந்த இடம் அவன் உலகம், சாம்ராஜ்யம், சினிமாவிலேதான், இதுமாதிரி வில்லன்களை பார்த்திருப்போம் செங்கோடன், அவங்களயும் மிஞ்சினவன் .

ஒரு தடவ நான் ஒரு வருஷமா வேலை செஞ்சிருக்கேன் எவ்வளவு கடன் அடஞ்சிருக்குனு கேட்டதற்கு சாட்டை அடி கொடுத்தான் பாரு”

”சீக்கிரம் கிளம்பு. பங்காளிங்களை கேட்டதா சொல்லு. நான் அந்த பக்கம் வர முடியாது.’ ஓட்டமும் நடையுமாய், யார் கண்ணிலும் படாமல் தன் குடிசைக்கு, திரும்பிருந்தான் மாடசாமி.

நடந்த விஷயத்தை கேள்விப்பட்டு எல்லோரும் அதிர்ச்சியானார்கள்.

”இதுக்குதான் அன்னிக்கே தலையா அடிச்சுகிட்டேன்.’ பத்திரத்தை நான் படிச்சு பாக்கறத்துக்குள்ளாரே கைநாட்டு வைச்சுட்டீங்க? என் பேச்சை கேட்டீங்களா?

ஒரு வருஷமாச்சு. மாடசாமியும், அவன் பங்காளிங்களும், மட்டமான சரக்கை குடித்து வந்ததால், குடல் வெந்து, தினமும் வாந்தி எடுத்தார்கள்.

உடம்பு சரியில்லை, என்று சொன்னால், எங்கே சவுக்கடி வாங்கி விடுவோமோ, என்று பயந்து, உடம்பு முடியாத சூழ்நிலையிலும் கொத்தடிமையாக வேலை செய்தார்கள்.

எல்லோருக்கும் சரியான சாப்பாடு இல்லாமல் போனது. கை குழந்தை சரியான போஷாக்கு இல்லாமல், மெலிந்து இருந்தது. அன்று கும்மிருட்டு. மழை பெய்து கொண்டிருந்தது. குழந்தைக்கு ஜன்னி ஜுரம்.

தான் எப்படியாவது தப்பிச்சு, மெயின்ரோடு போய், மருந்து கடையில் மருந்து வாங்கிய பிறகு போலீஸ் ஸ்டேஷன்ல கம்ப்ளைன்ட் கொடுப்போம் என்று நினைத்து முள்வேலி ஓரம் நின்ற அஞ்சலை, செக்குரிட்டி கக்கூஸ் போய் இருந்த சமயம், கரடு முரடான பாதையில், கைக் குழந்தையை மாரில் அணைச்சுட்டு, ஓட்டமும் நடையுமா மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க மெயின் ரோடு வந்தடைந்தாள். இந்த மாதிரி விளக்குகளயும், கார், பஸ் போன்றவைகளையும் பாத்து ஒரு புது உலகத்துக்கு, வந்த உணர்வு, ஏற்பட்டது அஞ்சலைக்கு.

யாரோ ஒருவர் பஸ் ஸ்டாண்ட் பக்கத்தில் உள்ள மருந்து கடை, டீ கடை, போலீஸ் ஸ்டேசன் இருக்கும் இடத் காமிக்க, வேகமாக மருந்துதை கடையில் ஜன்னி கண்ட குழந்தையை காண்பித்து, “அவசரத்தில காசு கொண்டு வரல. மருந்து கொடுங்க நான் கொத்தடிமை.”’ஒங்க தங்கச்சியா இருந்தா, உதவி பண்ணமாட்டீங்களா?’ என்று சொன்னதும் மருந்துகளை கொடுத்தார். டீ கடைக்காரரும் பால் கொடுத்தார்.

கண்ணீருடன் கடைகாரர்களுக்கு நன்றி சொன்ன அஞ்சலை.

அவசர அவசரமாக போலீஸ் ஸ்டேஷனுக்கு போக முயற்சிக்கும் போது, போலீஸ்காரர் முனுசாமி தடுத்து, ”ஏய் யாரு?’ பிச்சைகாரியா இல்ல பச்ச பிள்ளையே வைச்சுட்டு, விபசாரம்

பண்ண பஸ் ஸ்டாண்ட் பக்கம் வந்தியா?

”தன்னுடைய கோலம் பிச்சைக்காரி மாதிரி இருக்க போய் தானே இந்த கேள்வி?’ ’

“நான் பிச்சக்காரியும் இல்ல விபச்சாரமும் பண்ணலய்யா இந்த கை குழந்தைக்கு ஜன்னி ஆகி, மருந்து கடையில் மருந்து வாங்கிட்டு, இந்த டீ கடையில் பால் வாங்கி, பிள்ளைக்கு, கொடுக்க வந்தேங்க. என்னை நம்புங்க இங்கே இருந்து 5 கி.மீ. தொலைவில் இருக்கிற செங்கோடன் முதலாளி செங்கல் சூளையில்தான் வேலை செய்யறேன்”அவரை பற்றி புகார் கொடுக்கணும்.’

”ஏ புள்ளே! நீ உயிரோட இருக்கணும்ன்னு நினைச்சா உடனே சூளைமேட்டுக்கு திரும்பி ஓடு.’

இந்நேரம் செங்கோடனுக்கு தகவல் பறந்துருக்கும்.

டீயை குடித்துக்கொண்டிருந்த அரவிந்தன், எல்லாவற்றையும் கவனித்தவன். அஞ்சலை ஒரு கொத்தடிமைன்னு தெரிஞ்ச உடனே அவளை துரத்திக்கொண்டு சென்றபோது, அவள் மனதில் செங்கோடன் ஆள்தான், தன்னை துரத்திக்கொண்டு வருகிறான் என்று பயந்து, ஓட்டமும் நடையுமாய், மெயின் ரோட்டை விட்டு சூளை பாதையில் இருட்டில் மறைந்து போனாள்.

அஞ்சலையை பார்த்து எதுவும் விசாரிக்க முடியாமல், திரும்பவும் வந்து அந்த போலீஸ்காரரிடம் விசாரிக்க தொடங்கினான்..

”வணக்கம் சார், என் பேரு அரவிந்தன். நான் ஒரு என். ஜி. ஓ. இந்த ஊருக்கு ஒரு வேலையா வந்தேன். ஆமாம் அந்த பொண்ணு, செங்கோடன் சூளையில வேலை செய்யறேன்னு சொன்னப்ப, ஒங்க முகம் படப்படப்பா இருந்தது. உடனே அனுப்பிட்டீங்க ஏன் சார்?’

”எதுக்கு நீ கேக்கறே?’

”ஒங்கள பாத்ததும், நீங்க நேர்மையான ஆள்ன்னு தெரிஞ்சுது . அசப்பிலே எங்க அப்பா மாதிரி இருக்கீங்க’ ’

நெகிழ்ச்சியான போலீஸ்காரர் முனுசாமி சொல்ல ஆரம்பித்தார்.

“செங்கோடன், இப்ப இருக்கிற இன்ஸ்பெக்டர் இரண்டு பேரும் கூட்டாளிங்க.’ மாமூல் வாங்கிக்கிட்டு யார் செங்கோடன் பத்தி புகார் கொடுத்தாலும் கண்டுக்காம இருப்பார்.”போன வருஷம் இதே மாதிரி சம்பவம் நடந்தப்ப நான் இவனை பற்றி கேஸ் கொடுத்ததற்கு என் மகனை சாகஅடிச்சு என் வீட்டையும் கொளுத்திட்டான்.’

”அக்கிரமத்தின் மொத்த உருவம். பணபலம், அரசியல் செல்வாக்கு, போலீஸ் ஒத்துழைப்பு, இதை எல்லாம் சாதகமாக வைத்துக்கொண்டு, சாட்சி இல்லைன்னு, என் கேசை க்ளோஸ் பண்ணியவன்.

ரிடயர்மன்டுக்கு இன்னும் 6 மாசம்தான் இருக்கு. ஜாக்கிரதையா இருன்னு, என்னை மிரட்டினாவங்க இன்ஸ்பக்டரும், செங்கோடனும்,

அதான் இப்ப அந்த அஞ்சலை வந்து அப்படி சொன்னதும், திருப்பி அனுப்பினேன்.''

''நீ என்.ஜி.ஓன்னு சொன்னதால, எல்லாத்தையும் சொல்லிட்டேன்.'

''என் பேர் வராத மாதிரி பாத்துக்குங்க.'

''செங்கோடன் சூளையில் கிட்டத்தட்ட 50 பேர் கொத்தடிமையா இருக்காங்க அவங்களை மீட்கணும்!'

''தகவலுக்கு நன்றி சார்! சாரி அப்பா.'' பஸ்வரவே, கிளம்பி போயிருந்தான் அரவிந்தன்.

அவனுக்கு தெரியும், லோக்கல் போலீஸ் ஸ்டேசன் மூலம், எந்த நடவடிக்கையும் எடுக்க மாட்டார்கள். செங்கோடனுக்கு தகவல் போகும். மாமூல் வரும் என்று.

அடுத்த இரண்டு நாளில், மற்ற என்.ஜி.ஓக்களையும் அழைத்துக் கொண்டு, நேரே மாவட்ட கலெக்டர் ஆபிஸ் சென்று மனு கொடுக்கதயார் ஆனான்.

கலெக்டரிடம் தாங்கள் மனித உரிமை மீட்பு சார்பாகவும், என்.ஜி.ஓ என்ற முறையிலும், சம்பந்தப்பட்ட இடத்தில் கொத்தடிமைகளாக இருக்கும், 50பேரையும் உடனே விடுவிக்க, ஏற்பாடு பண்ண வேண்டும் என்று மனு எழுதி கொடுத்தார்கள்.

மாவட்ட கலெக்டர், பெண் என்றும் மிக திறம்பட வேலை செய்யும் ஆற்றலும், எந்தவிதமான அரசியல் பயமுறுத்தல்களுக்கும், அடி பணிவதில்லை, துணிச்சல் ஆனவர் என்று பெயர் வாங்கியவர் என்பதை அறிந்த அரவிந்தன், நல்ல தீர்வு கிடைக்கும் என்று நம்பினான்!

எதிர்பார்த்த மாதிரி உடனடியாக, சப்-கலக்டர், மாவட்ட வருவாய் ஆபிசர், ஆர்.டி.ஓ தாசில்தார், வி.ஏ.ஓ மற்றும் இன்ஸ்பெக்டர் போலீஸ் படையுடன், செங்கோடனின் சூளை மேட்டுக்கு, அரவிந்தனும், அவன் நண்பர்களுடன் விரைந்தான் ...

சூளைமேட்டை அடைந்தபோது, அரவிந்தன், அஞ்சலையை, அடையாளம் கண்டுகொண்டான். அவளிடம் உதவி செய்வதற்காக, தொடர்ந்து வந்ததாகவும், தான் என்.ஜி.ஓ என்றும் மீட்க வந்துள்ளேன் என்றும் சொன்னபோது, அஞ்சலையின் கண்களில் கண்ணீர்.

செங்கோடன் தனக்கு செய்த கொடுமைகளை புகாராக எழுதிக் கொடுத்திருந்தாள்.

மற்றவர்களிடம் விசாரித்தபின் வாக்குமூலம் வாங்கப்பட்டது. செங்கோடன் செய்த அக்கிரமங்கள் கொடுமைகள் வெளிச்சத்துக்கு வந்தன. கிராம நிர்வாக அலுவலரையும், லோக்கல் இன்ஸ்பெக்டரையும், கலெகடர் கண்டித்தார்.

பரமசிவம் உட்பட, எல்லோரும் ஒரு வேனில் ஏற்றப்பட்டு, கல்யாண மண்டபத்தில் தங்கவைக்கும் படி கலெக்டர் உத்திரவிட்டிருந்தார்.

வி.ஏ.ஓ கொடுத்த புகாரின் பேரில் செங்கோடன், ப்ரோகர் மற்றும் சூப்பர்வைசர், கைதாகி. கலெக்டர் உத்தரவுபடி, செங்கோடன் மீது, உடனடியாக முதல் குற்றவாளி என எப்.ஐ.ஆர் போடப்பட்ட பின்பு மண்டபத்தில் இருந்தவர்களுக்கு சாப்பாடு வழங்கப்பட்டது.

ஆள் ஒன்றுக்கு ரூ.20,000 பணம் உடனடியாக கொடுக்கபட்டது. கலெக்டர் விசாரணையில் ரூ.20,000/- பணம் கொடுத்துவிட்டு ரூ.1,00,000/- ஒரு லட்சம் என்று எழுதியிருந்த பத்திர பேப்பர்கள், செங்கோடன் திருப்பி கொடுத்தான்.

"கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டது உண்மை' என ரீலிஸ் சர்டிபிகட் எல்லோருக்கும் கொடுக்கப்பட்டது.

கலெக்டர் பேசும் போது, "நீங்க இனிமே கொத்தடிமை இல்லை. அஞ்சலை துணிச்சலையும் தைரியத்தையும் பாராட்டுகிறேன். அஞ்சலைக்கும் மற்றவர்களுக்கும் என்ன உதவி வேண்டுமானாலும் செய்ய தயார்.'

அஞ்சலை மற்றும் மாடசாமி பங்காளிகள் கலெக்டரை விழுந்து, வணங்கி, நன்றி கூறினார்கள்.

அரவிந்தன் பேசும் போது, "இது மாதிரி விசயங்களில் நடைமுறை சிக்கல்கள் நிறையவே இருக்கு. மீட்கப்பட்ட ஒவ்வொரு ஆணுக்கும் 1 லட்சமும், பெண்ணுக்கும் மற்றும் குழந்தைகளுக்கும் 2 லட்சமும், மாற்று திறனாளிகளுக்கும் திருநங்கைகளுக்கும் ரூ.3 லட்சம் மத்திய அரசு நிதி உதவி அளிக்குது.

2016 முதல் இந்தத் திட்டம் அமலில் இருந்தாலும் போலீஸ்தரப்பு, நடவடிக்கையில், தாமதம் ஏற்படும்போது, மத்திய அரசு உதவி கிடைப்பதிலும், தாமதம் ஆகிறது.

இந்த கொத்தடிமை ஒழிப்பு சட்டம் 1976- ம் வருடம் முதல் அமலில் இருந்த போதிலும், அந்த சட்டத்தின் கீழ் எந்த முதலாளிகளும் கன்விக்ஷன் ஆகவில்லை. சரியான சாட்சிகள் இல்லை, என்று வாதாடி வெளியே மீண்டும் வந்திருந்தனர்.

கடந்த மூனு வருடத்தில் சமீபத்தில்தான், ஒரு செங்கல் சூளை முதலாளியை, கன்விக்ஷன் செய்திருக்கிறது, சென்னை உயர்நீதி மன்றம்.

"ஆனா, இப்ப காலம் அதே மாதிரி இல்லை, திறமையான அதிகாரிகளும், அவங்க வேலையை திறம்பட செய்யறாங்க.'

"செங்கோடன் மாதிரி ஆயிரம் செங்கோடன்கள் இருக்காங்க. சீக்கிரமே அவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.'

அரவிந்தனை கட்டி தழுவிக்கொண்டார், போலீஸ்காரர் முனுசாமி.

"நீ சாதிச்சிட்ட அரவிந்தன்!'

"அஞ்சலை என்னை மன்னிசுடும்மா.' ஒன்கிட்ட கடுமையா நடக்கும்படி சூழ்நிலை அன்னிக்கு

அஞ்சலையும் மற்றவர்களும் அரவிந்தன் காலில் விழுந்து தங்கள் நன்றியை சொன்னார்கள்.

”கவலைப்படாமா ஊருக்கு கிளம்புங்க’

கலெக்டர் அஞ்சலைக்கு ஒரு தையல்கடை வைத்து கொடுக்க அரவிந்தன் மூலமாக ஏற்பாடு செய்திருந்தார். மற்றவர்களுக்கும் உதவி செய்யப்பட்டது. எல்லோரும் ஊர் திரும்பியிருந்தார்கள்.

”ஒவ்வொரு முறையும்’ தான் செங்கோடன் மூலம், சாட்டை அடி வாங்கியது, தலை மயிரை பிடித்து தர தரவென்று, இழுத்து காலால் உதைத்தது, திரும்ப திரும்ப, ஞாபகத்திற்கு வந்து போனது.. அஞ்சலைக்கு.

அரவிந்தனிடமும் மற்ற அதிகாரிகளிடம், மாதா மாதம் கேஸ் சம்பந்தமாக விசாரித்துக் கொண்டிருந்தாள். லோயர் கோர்டில் செங்கோடனுக்கு 3 வருடம் கடுங்காவல் தண்டனை அளித்திருந்தது. ஆனால் அவன் உயர்நீதி மன்றத்தில் அப்பில் பண்ணிருந்தான்.

அங்கும் அவன் முயற்சி தோற்றுப் போனது.

உயர்நீதிமன்றம் லோயர் கோர்ட்டின் தண்டனையை உறுதி செய்ததுடன் மட்டுமல்லாமல், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்ட ஈடாக, ஒரு லட்சம் தரவேண்டும் என்று தீர்ப்பு அளித்திருந்தது.

தீர்ப்பு நகலை அரவிந்தன் படித்தபோது, அஞ்சலையின் முகத்தில் இரட்டிப்பு சந்தோஷத்தை கண்டான்.

இனி செங்கோடன் ஜெயிலில் களிதான் திங்கணும் ”கவலைப்படாதிங்க’ ஒரு வாரத்தில் மத்திய அரசு உதவி வந்துவிடும். கொத்தடிமையிலிருந்து மீட்கப்பட்ட நீங்க, இனி ஒரு போதும் அடிமை இல்லை என்று உரக்க சொல்லுங்க, என்று அரவிந்தன் சொன்னதும், எல்லோரும் உரக்க சொன்னார்கள்.

இனி அவர்களுக்கு வானம், தொட்டு விடும் தூரம்தான்.

## 4. அம்மா

இன்று அம்மாவின் 40வது ஸ்ரார்த்தம். என்னவோ மனது அழுதது.

40 வருடம் முன்பு நான் அம்மாவுடன் பழகிய நாட்கள் நினைவில் வந்து போனது.

நான் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் குரூப் 4 எக்ஸாம் பாஸ் செய்து ரெக்ரூட் ஆகி தாலுகா ஆபீஸ் கிளெர்க் டிபார்ட்மென்ட்டில் வேலைக்கு சேர்ந்து முதல் மாதம் சம்பள கவரை, அம்மா அப்பாவிடம் கொடுத்து ஆசீர்வாதம் வாங்கிய போது, இரண்டு பேரும் சொன்ன அறிவுரை.

"இத பாரு வாசு, நீ இப்படியே கிளார்க்காக இருப்பதில் பிரயோசனம் கிடையாது.

ஆஃபீஸர் ரேங்கில் வேலை பார்க்கணும் குரூப் 1 எக்ஸாம் எழுதி மேல வரணும்.''

ஆச்சு 6 வருடம் ஆச்சு. இந்த ஊரில் கிளெர்க்காக வேலை பார்க்கிறேன். குரூப் 1 எக்ஸாம் இன்னும் இரண்டு பாக்கி எழுத வேண்டும். இரண்டு மாதத்தில் ரிசல்ட் தெரிந்து விடும்

அம்மாவிற்கு அடிக்கடி வயிறு வலி என்று சொன்னதால் மேற்கொண்டு ட்ரீட்மென்ட்க்கு சென்னையில் உள்ள அண்ணா வீட்டுக்கு அழைத்துபோயி, அங்கு பரிசோதனையில் கர்ப்ப பையில் புற்றுநோய் என்று கண்டறியப்பட்டு சிகிச்சை நடந்து கொண்டு இருப்பதாகவும் உதவிக்கு தான் அங்கிருப்பதாகவும் அப்பா கடிதம் எழுதி இருந்தார்.

மனசு தாங்காம கோயில் போய் சீக்கிரம் குணமாக வேண்டும் என்று அர்ச்சனை செய்து விட்டு வந்தேன்.

அம்மாவிற்கு மொத்தம் 10 குழந்தைகள். நான் எட்டாவது. இப்படி 10 குழந்தைகள் பெற்ற மகராசிக்கு கர்ப்பப்பையில் புற்றுநோய் வந்துள்ளது ஆச்சர்யம் இல்லை. .

பெங்களூருலிருந்து தங்கை கீதா, டெல்லியில் இருந்து அக்கா பத்மா 15நாள் தங்கி உதவி செய்து விட்டு ஆளுக்கு அம்மாவிடம் இருந்த 5 பவுன் சங்கிலியை கட்டாயமாக கேட்டு வாங்கிப் போனது பற்றி அம்மாவுக்கு வருத்தம் தான்.

அப்பாவும் அவ்வப்போது கவனித்து வந்ததும் எனக்கு தெரியும்.

அன்று 10மணி அளவில் மதியம் எக்ஸாம்க்கு தயார் செய்து கொண்டு இருந்தபோது அண்ணாவிடம் இருந்து கடிதம் .

"அம்மா உடம்பு மோசமாக உள்ளது. இங்கு நான் தனி ஆளா அம்மாவை கவனிக்க முடியல. நீ உடனே கிளம்பி வா.'

நாளை எக்ஸாம் முடிஞ்சுடும். நாளை ராத்திரி கிளம்பி வரேன் டிரங்க் கால் செய்தேன்.

எக்ஸாம் முடிந்தவுடன் மேலதிகாரியிடம் 15 நாள் லீவு வாங்கியபின், ரவி ரம்யா தூங்கிய பிறகு, வித்யாவிடம் சொல்லி விட்டு பஸ்சில் ஏறி சென்னை வந்தேன்.

அம்மாவிற்கு ஒன்னும் ஆகக் கூடாது. மன்னார்குடி பெருமாள் ஸ்ரீ ராஜகோபாலனை வேண்டிக் கொண்டேன்.

அம்மா எனக்காக செய்த தியாகச் செயல்களை நினைத்து, நினைத்து அழுகை வந்தது.

ஒனக்கு 2 வயசு இருக்கும் போது வயிறு வீங்கி கல்லீரல் பிரச்சனை. 1952களில் கும்பகோணம் வந்துதான், இந்த பிரச்சனைக்கு டாக்டரிடம் காண்பிக்க வேண்டும்.

களப்பாள் கிராமத்தில் இருந்து 8. கி மீ கோட்டூர் வரை நடந்து, அங்கிருந்து பஸ்சில் மன்னார்குடி வந்து மீண்டும் அங்கிருந்து பஸ் பிடித்து கும்பகோணம் வந்து டாக்டரிடம் காண்பித்து பின் ஒப்பிலியப்பன் கோயில் வந்து உன் உடம்பு தேவலை ஆகணும்னு பிரார்த்தனை பண்ணுவேன்.

தொடர்ந்து 6 மாதமும் வந்த நான் 6 வது மாதம் முடிவில் வெறுத்துப் போய் ஒப்பிலியப்பன் சன்னதி கொடிமரம் கிட்டே கைக் குழந்தையான உன்னை விட்டுட்டு. மாத்திரைகளை புஷ்கரணியில் தலை சுத்தி தூக்கி எரிஞ்சுட்டு 'ஒப்பிலியப்பா இனி எனக்கு இந்த குழந்தை வேண்டாம்ன்னு' சொல்லிட்டு, மனசை கல்லாக்கிவிட்டு திரும்பும் போது, கோயிலுக்குள் நுழைந்த பட்டர், "இனி இந்த குழந்தைக்கு ஒரு வியாதியும் வராது. திரும்ப குழந்தையை தூக்கிட்டு ஊர் போய் சேரு" என்று உரத்த குரலில் சொல்ல, உ ன்னை வாரி எடுத்து ஊர் வந்த தினத்தில் இருந்து இன்னிக்கு வரைக்கும் வியாதி போன இடம் தெரியல...'' என்று அம்மா சொன்ன போது மெய் சிலிர்த்து போனேன்.

அன்று முதல் ஒப்பிலியப்பன் தான் எல்லாமே.

"பாவம்மா நீ. 16 கி.மீ நடந்து பஸ் பிடிச்சு கும்பகோணம் வந்து டாக்டர்கிட்ட காமிச்சு இருக்கே. நான் என்ன கைமாறு செய்யப் போறேன்னு தெரியல...''

"அட போடா ! இதுக்கெல்லாம் கைமாறு அது இதுன்னு நீ நல்லா இருந்தாலே எனக்கு போறும்...''

அந்த நினைவுகளுடன் தூங்கிப் போனவன், அசோக் நகர். இறங்குங்க என்று கண்டக்டர் சொன்னதும், பஸ்சை விட்டு இறங்கி பூ பழம் பிஸ்கட் வாங்கிக் கொண்டு 17 D யில் ஏறி வீட்டை அடைந்த என்னை,

"வா வாசு ! ஈவினிங் வந்து பேசுறேன். ஆபீஸ்க்கு டயமாச்சு...''

அம்மா படுத்து இருந்த ரூம் போயி அம்மாவுக்கு பிடித்த வித்யா செஞ்சுக்கொடுத்த தேங்காய் பர்பி, பூ, பழங்கள் கொடுத்து, அம்மாவை நமஸ்காரம் செய்த போது அம்மா கண்களில் கண்ணீர்.

"அம்மா கவலைப்படாதே. நிச்சயம் உனக்கு குணமாயிடும்... இப்ப அட்வான்ஸ்ட் டிரீட்மென்ட் போய்கிட்டு இருக்கு...''

"ரவி, ரம்யா, வித்யா சௌக்கியமா?''

தன் உடம்பை விட அம்மாவின் கரிசனம் எங்களிடம் காட்டியது. என் மனதை நெகிழ வைத்தது.

ஈவினிங் ஆபீஸ் விட்டு அண்ணா வந்ததும், ”இத பாரு வாசு, தேனாம்பேட்டை காமதேனு சூப்பர் மார்க்கெட் பக்கம் உள்ள ஆஸ்பத்திரியில் டிரீட்மெண்ட். அம்மாவை ஆட்டோவில் அழைத்து போ சரியா…?’’

அம்மாவிற்கு காலையில் காபி, பின் 9மணி அளவில் டிபன், கொடுக்க வேண்டிய மருந்து மாத்திரைகள், 11 மணி அளவில் ஏதாவது ஜூஸ், 1மணிக்கு லஞ்ச், 4மணிக்கு டீ குடித்த பின் ஆஸ்பத்திரி திரும்பியவுடன் இரவு 7 மணிக்கு செரிமானம் ஆகும் அளவுக்கு லைட் டின்னர். பின் மாத்திரை எல்லாம் நான் பார்த்துக் கொண்டேன்… அண்ணாவுக்கும் மன்னிக்கும் ரிலாக்ஸ்.

1983களில் சென்னை சாலைகள் மிகவும் மோசம். ஆட்டோ மேடு பள்ளத்தில் இறங்கி போகும் போது அம்மா வலியால் துடிதுடித்துப் போவாள். ஒவ்வொரு நாளும் அந்திமக் காலத்தில் தன்னை கடாக்ஷிக்கும்படி பெரியாழ்வார் திருமொழி அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன் என்று முடியும் பாசுரத்தை சொல்லி வருவார்.

வாஷிங் மெஷின், மிக்ஸி, கிரைண்டர் பிரபலமாகாத நேரம். அண்ணா வீட்டில் இந்த மூன்று சாதனங்கள் இல்லாமல் இருந்தது. நல்ல வேளை டயனோரா கலர் டி.வி மட்டும் இருந்தது. அம்மாவின் பொழுதுப்போக்கு… வெள்ளி ஒளியும், ஒலியும், ஞாயிறு சினிமா. அதுவும் அதர பழைய படம் போட்டு பிரிண்ட் சரியில்லாமல் ”தடங்கலுக்கு வருந்துகிறோம்’ என்ற ஸ்லைடு போட்டு படத்தை போடுவார்கள் வெறுத்துப் போகும்.

அம்மா பள்ளிக்கூடம் போனது கிடையாது. ஆனால் வாழ்க்கை கல்வி, உலக அனுபவம், புத்தி கூர்மை, அப்பாவை விட கண்டிப்பு அதிகம்.

ஒருமுறை குச்சி ஐஸ் சாப்பிட வேண்டும் என்று நானும் என் தம்பியும் அழுது ஆர்ப்பாட்டம் பண்ணிய போது ஐஸ் உஷ்ணம் சாப்பிடக் கூடாது என்று மறுத்து விட்டார்.

மறுநாள் வகுப்பில் சயின்ஸ் வாத்தியார் பாடம் நடத்தும் போது ”ஐஸ் ஹீட்’ என்று சொன்ன போது தான் அம்மாவின் அறிவு பற்றி தெரிய வந்தது.

எல்லோரும் சொல்வதுண்டு அன்புக்கு அம்மா, அறிவுக்கு அப்பா என்று. எங்களை பொறுத்தவரை இரண்டுமே அம்மா தான்.

………………

அம்மாவின் புடவைகள் தோய்க்காமல் மூலையில் இருந்தது. புடவையில், மலமும் ரத்தமும் சிந்தி இருந்தது.

”ஏன் மன்னி… அம்மா துணிகளை துவைக்க வேலைக்காரி கிடையாதா? ஒங்க துணி, குழந்தைகள் டிரஸ் தோய்க்கும் போது அம்மா துணியையும் சேர்த்து தோய்க்க வேண்டியதுதானே?’’

”இதோ பாரு வாசு, வியாதி உள்ளவங்க துணியை துவைக்க மாட்டேன்னு வேலைக்காரி சொல்லிட்டா. அம்மாவும் நானே தோச்சுக்கிறேன்னு சொன்ன பிறகு, நான் என்ன செய்யட்டும்...?’’ பேச்சில் குரோதமும் வன்மமும் எனக்கு தெரிந்தது.

”சரி மன்னி, இனிமேல் அம்மா துணிகளை நானே தோய்ச்சு காய வைக்கிறேன்.’’

அன்று மதியம் பக்கத்தில் உள்ள கடையில் அம்மாவுக்காக தனியாக மைசூர் சாண்டல் சோப், ரின் சோப், பக்கெட், டவல் டெட்டால், வாங்கி திரும்பிய போது வேலைக்கார அம்மா எதிர்பட்டாள்.

”நான் கூட 500 ரூபாய் சேர்த்துக் கொடுங்க, அம்மா துணிகளையும் தோச்சி தரேன்னு சொன்னேன் சார். ஒங்க அண்ணி தான், ஏற்கனவே மருந்து, டிரீட்மென்ட், சாப்பாடு, அவங்களுக்கு தெண்டம் அழுதுகிட்டு இருக்கோம், இதுல துணி துவைக்க வேற காசு செலவு பண்ணனுமா? எல்லாம் அவங்களே தோச்சுப்பாங்கன்னு சொல்லிட்டாங்க சார்!. என்னை தப்பா எடுத்துக்காதீங்க. சார்!’’

”ஏன் மன்னிக்கு புத்தி இப்படிப் போகுது?’’

ஒரு நாள் மன்னியிடம், ”அம்மா இட்லி சாப்பிடணுமாம். அரிசி உளுந்து ஊற வையுங்கோ...’’

”இத பாரு வாசு! இங்கே கிரைண்டர் கிடையாது. சின்ன கல் உரல் தான். அதிலே அரைக்க என்னால் முடியாது. வேணும்னா ஹோட்டல்ல வாங்கிக் கொடு.’’ விருட்டென்று பேசி விட்டு கிச்சன் பக்கம் போய் விட்டாள்.

“இதப் பாரு மன்னி... அம்மா காது பட இப்படி பேசாதே. அம்மா அந்தக் காலத்து மனுஷி. ஆசாரம் அனுஷ்டானம் பாக்கிறவா. எப்ப பார்த்தாலும்”கோபாலா கோபாலா” சீக்கிரம் என்னை கொண்டு போயிடுன்னு அந்திம காலத்தில் சரணாகதி அடைஞ்சவக்கிட்ட அனுசரணையா பேசாம இப்படியா வெடுக்குனு பேசறது? ”சாபத்தை வாங்கிக் கட்டிக்காதே.’’ அட்வைஸ் செய்தேன்.

”நான் இருக்கிற வரைக்கும் தினமும் அரைச்சு இட்லி செய்யறேன் சரியா.’

அம்மா துணிகளுக்கு தினமும் வாஷிங் சோப் போட்டு வெந்நீரில் நனைத்து மொட்டை மாடி வெயிலில் காயவைத்து மடித்து வைத்ததை பார்த்த அம்மா என்னிடம், நீ அசிங்கம் பாக்காம என் துணி மணிகளை தோச்சுவைக்கிறே. ஆனா உன் அண்ணா கடமைக்கு காலை ஒரு தரம் இரவு ஒரு தரம், என்னை பாத்துட்டு அவன் கைகளை டெட்டால் போட்டு வாஷ் பண்றான். நீ எங்கே அவன் எங்கே?

”ஏம்மா நீ அசிங்கம் பாக்காம எங்களை வளர்க்கலையா? தொற்று வந்துடும்னு நினைச்சு அண்ணா செஞ்சு இருக்கலாம் விட்டு தள்ளுமா...?’’

ஒரு மதியம் அம்மாவிற்கு பிடித்த சவ்சவ் கூட்டு செஞ்சு சாப்பாடு போட்டுக் கொண்டு இருக்கும் போது குடுகுடுப்பைகாரன் என்னைப் பார்த்து, ”ஜக்கம்மா சொல்றா ஜக்கம்மா

சொல்றா... நீ பெரிய பதவியில் சீக்கிரம் இருக்கப் போறே. நீ ஒங்க அம்மாவுக்கு செய்யற பணிவிடைகள் அந்த புண்ணியம் ஒன்னை காப்பாத்த போகுது. ஜக்கம்மா சொல்றா...' '

நான் அம்மாவுக்கு செய்யும் பணிவிடை இவனுக்கு எப்படி தெரியும்?ஆச்சர்யமாக இருந்தது.

அவனுக்கு 100 ரூபாய் பணம் கொடுத்து அனுப்பினேன்.

ஒரு மாசம் ஆச்சு. குழந்தைகள் ஏங்கிப் போகும். நான் கிளம்பறேன்னு சொன்ன போது, அம்மா கண்களில் கண்ணீர்.

என் நெற்றியில் முத்தமிட்டு "எக்ஸாம்ல நீ நிச்சயம் பாஸ் பண்ணுவே என் ஆசிர்வாதம் உனக்கு நிச்சயம் உண்டு...' '

ஊர் வந்த மறுவாரம் அப்பாவிடமிருந்து கடிதம்.

டிரீட்மென்ட் எடுக்கும் ஆஸ்பத்திரியில் "நெஞ்சில் ஒரு ஆலயம்" படம் மாதிரி ஒவ்வொருவராக செத்துப் போறாங்க. எனக்கு இங்கு இருக்கப் பிடிக்கல. நான் மன்னார்குடிக்கே போறேன். கோபாலன் கிட்டே போகணும் என்று அம்மா சொன்னதால் அண்ணா கடந்த புதன் விட்டுட்டு போயிருக்கிறான்.

ஞாயிறு நான் வித்யா குழந்தைகள் மன்னார்குடி சென்று பார்த்த போது அம்மா உடம்பு கவலை அளிக்கும்படி இருந்தது.

"ஏதாவது மெர்சி கில்லிங் பண்ணலாமா' அப்பா சொன்னார்.

"இல்லைப்பா அது பாவம்.' '

சாவு இயற்கையாக இருக்கணும். ஆனால் இவ்வளவு ரணம் இருக்கக் கூடாது. மனம் விம்மியது.

அம்மா பாயில் படுக்க முடியல . வலி தாங்காமல் அழுகை. தட்டாமாலை சுற்றினாள். முதுகில் பாயின் வரிகள். நான் ரூபாய் 500க்கு ஒரு பெட் வாங்கி வந்து படுக்க வைத்தேன்.

இரவு பூரா "கோபாலா கோபாலா"'ஒங்கிட்ட என்னை சேத்துக்கோ' என்று புலம்பல்.

அம்மாவுக்கு ஆறுதல் சொன்னேன்...

திங்கள் 12 மணிக்கு அம்மாவுக்கு சாதம் கொடுக்க தயாராக இருந்த போது " ஸார் தந்தி.'

"குரூப் 1 எக்ஸாம் பாஸ்' என்று ஆஃபீசிலிருந்து தகவல். அம்மா நீ எதிர் பார்த்த டெபுடி கலெக்டர் போஸ்டிங் கிடைச்சிருக்கு. அம்மாவை எழுப்பிய போது அம்மா மூச்சு நின்று இருந்தது.

"ஐயோ அம்மா! நீ ஆசைப்பட்ட செய்தியை கேக்காம போயிட்டியே? சாப்பாடும் சாப்பிடாமல் போயிட்டியே?

காலண்டரில் திதியை பார்த்த போது அஷ்டமி திதி ரோஹிணி நட்சத்திரம் கோபாலன் பிறந்த நாள் .

எப்போதும் ”கோபாலா கோபாலா’ என்று சரணாகதி அடைந்த அம்மாவிற்கு மோட்சம்தான். இனி மறுபிறவி கிடையாது. இதை விட பாக்கியம் என்ன வேணும்?

## 5. பிணைப்பால் தொடரும் உறவுகள்

முதல் நாள் இரவு அழுது அழுது, தூக்கம் வராமல், லேட்டாக கண் அசந்த சுமங்கலி, எழுந்த போது காலை மணி 10 ஆகியிருந்தது. உடம்பு வேறு அசதியாக இருந்தது.

வாசலில் உள்ள பாலை எடுக்க, கதவை திறக்க போனவளுக்கு,

காலிங் பெல் அடிக்கவே, திறந்த போது,

வாசலில், பக்கத்து தெரு பங்கஜம் மாமி.

மாமி உள்ளே வந்ததும் கட்டிப்பிடித்து அழ ஆரம்பித்தாள் சுமங்கலி.

"யு எஸ்லிருந்து நேற்றுதான் வந்தேன். எங்காத்து மாமா எல்லாத்தையும் சொன்னார்.

மனசு கேக்கலை. உடனே ஒன்னை பாக்கணும்ன்னு தோணிச்சு.''

"ஆச்சு மாமி ஒரு மாசம் ஆச்சு. பதட்டமும் பயமும் இன்னும் போகல.

நொடிக்கு ஒரு தடவை சுமங்கலி சுமங்கலின்னு கூப்பிடுவாரே மாமி. இப்போ அமங்கலியா இருக்கேனே! பாழாய் போன இந்த கொரோனா, என் ஆத்துக்காரரே பலி வாங்கிடுத்தே.

திடீரென ஜுரம்ன்னு சொன்னார். ஹாஸ்பிடல் அழைத்து போனபோது இவருக்கு கொரோனா பாசிட்டிவ். அட்மிட் பண்ணனும். ஆனா பெட் இல்லை. நாளைக்கோ இல்லை, அடுத்த நாள் ரெடி ஆகும். இன்டிமேட் பண்றோம் அதுவரை தனி ரூமில் உங்களை தனிமைப் படுத்தி கொள்ளுங்கோ என்று சொல்லீட்டா..

வழக்கமாய் காண்பிக்கும் ஹாஸ்பிடல் என்பதால் வேறு எங்கும் போகல.

செத்து போவதற்கு முதல் நாள், இரவு 10 மணிக்கு பெட் கிடைச்சுடுச்சு. நாளை ஹாஸ்பிடல் வரச் சொல்லி தகவல் வந்துடுத்துன்னு சொன்னவர். பத்து நிமிடம் கழித்து, என்ன நினைத்தாரோ, பத்து வருஷம் நான் காட்டின வீராப்பு போறும். பையன் ஸ்ரீராமுக்கு தகவல் கொடு. அவனை பாக்கணும் போல இருக்குன்னு,சொல்லிட்டு தூங்கப் போனார்.

பத்து மணிக்கு மேல் ஸ்ரீராம்க்கு போன் பண்ணும் போது,ஸ்விட்ச் ஆப்ன்னு வந்தது. சரி தூங்கிட்டான்னு நினைச்சு. காலையில் பேசிக்கலாம் என்று நானும் தூங்கப் போயிட்டேன்.

ராத்திரி 3 மணிக்கு பாத்ரூம் போனவர். வரலையே என்று பார்க்கப் போன போதுதான், அவர் மூச்சு திணறல் ஏற்பட்டு மாரடைப்பில் செத்துப் போயிட்டாருன்னு தெரிஞ்சுது மாமி.

அவர பாத்த உடனே மயக்கம் ஆயிட்டேன். 10 நிமிஷம் கழித்து எழுந்து மணியை பார்த்தபோது மணி 4... என்ன பண்றதுன்னு தெரியாம தவிச்சேன்.

பையன் வேற போன் எடுக்கலே. இது வரை பேசாமல் இருந்த நான் அவன் மனைவி

பூஜாவிற்கு போன்ல பேசும் போது, “ஐய்யோ ஆன்டி, இவரும் 10 நாளா ஐ சி யு விலே இருக்கார். கொரோனா வைரஸ் சீரியஸ் ஆக இருக்கு. நாலு நாள் முன்பு, நீங்க கவலை படுவீங்கன்னு,ஒங்கக்கிட்ட சொல்ல வேண்டாம்னு சொல்லிட்டார்”.

”ஆனா இப்போ அவருக்கு சுய நினைவு இல்லை டிரிட்மெண்ட் போயிட்டு இருக்கு. எனக்கு பயமா இருக்கு’’. குரலில் விசும்பல் அதிகமாக கேட்டது.

”ஐய்யோ பெருமாளே! இதென்ன சோதனை. பையனை பார்க்கணும்னு சொன்ன அப்பா, செத்து கிடக்காரு.’’

அப்பாவை பார்க்க பையன் வருவான்னு நினைச்சா அவன் ஐ. சி யு விலே.

அந்த நேரத்திலே ஒங்க ஆத்துக்காரருக்கு போன் பண்ணினேன்.

அவர்தான் உடனே வந்து எல்லா சொந்தக்காரங்களுக்கும் தகவல் சொன்னார்.

கொரோனாவினால் செத்துப் போனாதாலே கார்பரேஷனுக்கு தகவல் சொல்லி, அவாளுக்கு கட்ட வேண்டிய பணத்தை கொடுத்து, அவா வந்து கவச உடையுடன் உள்ளே வந்து பாடியை ட்ரெஸ்ஸிங் பண்ணி, வாக்கரசி கூட போட முடியலே மாமி.

சுமங்கலி சொல்லும் போது மாமிக்கும் துக்கம் தொண்டையை அடைக்கவே, அழுது விட்டனர் இரண்டு பேரும்

கொரோனா லாக்டவுன் எந்த சொந்தகாரர்களும் வர முடியாத சூழ்நிலை.

பையன் நிச்சயம் பொழைச்சு காரியம் செய்ய வருவான்னு நினைச்சு அவன் பெயர் போட்டு ஈமக்கிரியை பத்திரிகை அடின்னு ஒங்க மாமா சொன்னதினாலே சொந்தக்காரங்களுக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

பத்திரிகை அனுப்பி நாலுநாள் இருக்கும். பூஜா போன் பண்ணி, அழுது கொண்டே, ஒங்க பையன் நம்ம எல்லோரையும் அனாதை ஆக்கிட்டு போயிட்டாருன்னு. சொன்னப்ப, வீடே ஒரே அழுகை. துக்கதுக்கு அளவே கிடையாதா?

கருவேப்பிலை மாதிரி ஒரே பையன் ஆறுதலா இருப்பான்னு நினைச்சேன் மாமி. இப்ப அவனும் போயிட்டான்.

இப்படி அனாதையாக ஆக்கிட்டாரே ”பெருமாள்.

இன்னும் உயிரே வச்சுருக்கேனே மாமி

அழுது அழுது கண்ணில் நீர் வற்றியது சுமங்கலிக்கு.

”போதும் சுமங்கலி. துக்கம் கேட்க வந்த எனக்கே தாங்க முடியல. நீஅன்னிக்கு எப்படிதான் மனோதைரியத்துடன் எல்லாத்தையும் செஞ்சாயோ? அதை நினைக்கும் போது எனக்கு வார்த்தை இல்லை.’’

நாள் கிழமை, பண்டிகை டயத்திலே நமஸ்காரம் பண்ணும் போதெல்லாம், தீர்க்க சுமங்கலி பவ என்று ஆசிர்வாதம் பண்ணிட்டு, இதன் அர்த்தம் என்னன்னு தெரியுமா?

தீர்க்க சுமங்கலி பவ...! என்ற ஆசிக்கு மனைவி கணவனிடம் 5 மாங்கல்யம் பெற வேண்டும் என்று அர்த்தம். திருமணத்தில் ஒன்று, 60 வயது ஷஷ்டியப்த பூர்த்தியில் ஒன்று, 70 வயது பீமரத சாந்தியில் ஒன்று, 80 வயது சதாபிஷேகத்தில் ஒன்று, 96 வயது கனகாபிஷேகத்தில் ஒன்று.

பாரு சுமங்கலி இப்ப நீ மூன்று திருமாங்கல்யம் போட்டுண்டு இருக்கே. இன்னும் இரண்டு தாலி கட்டின, பிறகு, எனக்கு முன்னாடி தீர்க்க சுமங்கலியாய் நீ ஆச்சர்யான் திருவடி சேருவேன்னு சொல்லிட்டு இவர் போயீட்டாரே மாமி.

”எல்லாவற்றையும் வைத்துக்கொண்டு, எல்லாத் துயரையும் அனுபவித்தபடி துறவியாய் வாழ்ந்தாள் யசோதரா. புத்தரின் மனைவின்னு படிச்சுருக்கேன்.’’

”நானும் கிட்டத்தட்ட ஒரு மாசமா அப்படித்தான் மாமி இருக்கேன்.’’

”நீ சொல்வது உண்மையான வார்த்தை’’

”பெண்களின் தியாகங்கள் அளப்பரியது...’’

ஆனால் உலகம் ஒருபோதும் அதை ஒப்புக்கொள்வதில்லை....

ஜோசியர் சொன்னார். உங்க ஆத்துக்காரர், பிள்ளை இரண்டு பேருக்கும் ஜாதகத்தில் மாரக திசை. அதான் அவா போயிட்டான்னு மேலும் ஒங்க குடும்பத்தில் பித்ருதோஷம் இருக்கு பித்ரு கர்மாக்களை ஒழுங்கா பண்ணாம விட்டதுக்கு ராமேஸ்வரம் போய் பரிகாரம் பண்ணனும்னு சொன்னார் .

ஆனா வைஷ்ணவ சம்பிரதாயப்படி, ராமேஸ்வர யாத்ரை, பரிகார சடங்கு எதுவுமே பண்ணக்கூடாதுன்னு இவர் ஏற்கனவே சொல்லியிருக்கார்.’

”என்ன பண்ணறதுன்னே தெரியலை மாமி...’’

”ஒன்னை மாதிரியே எனக்கு தெரிந்த ஒரு மாமிக்கு’’ பல பிரச்சனைகள். பெரியவாளை போய் பார்த்தபோது பெரியவா கேட்ட முதல் கேள்வி.

”நீங்க தென்கலையா?’’

”ஆமாம்’’

”உப்புச்சாறு, சாணிச்சாறு, சடைச்சாறு....ங்கற மூணும் தென்கலைக்கு கெடையாது...’’

”ஆமாமா, எங்க அம்மா கூட உப்புச்சார், சாணிசார், சடைசார்ன்னு சொல்லுவா’’

”அதேதான். ராமேஸ்வர சமுத்ர ஸ்நானம், உப்புச்சாறு, பஞ்சகவ்ய பிராசனம் சாணிச்சாறு, கங்காஸ்நானம் சடைச்சாறு, ஏன்னா, பரமேஸ்வரனோட சடையில் இருந்துதானே கங்கை

வரது! அதுனால, சம்பிரதாய விரோதமா போகவேணாம். அதுக்கு பதிலா, நித்யம் சாளக்ராமம் [பெருமாள்] திருவாராதனம் பண்ணி, திருமஞ்சன தீர்த்தம் சாப்பிடணும்.

பிராயச்சித்தம் பண்ணினாப்ல ஆகும். பண்ணுவியா?''

ராமேஸ்வரம் போகவேண்டாம்.

"பெருமாளே வந்து சொன்னா மாதிரி இருக்கு.''

காமத்தை வென்ற காமேஸ்வரனே நம்மை மாதிரி அல்பங்களுக்காக இறங்கி வந்து, நாவினிக்க "நாராயண நாராயண" என்று சொல்லி ஆசிர்வதிக்கும்போது, எல்லா சம்பிரதாயங்களும் அவனுள்ளே அடக்கம்தானே!

"பெரியவா அந்த மாமிக்கு சொன்ன பதில் தான் உனக்கும் சொல்றேன். நீயும் ப்ராயச்சித்தம் தேடு இனிமே எல்லாம் நல்லபடி நடக்கும். அப்ப நான் கிளம்பறேன். இனிமே அடிக்கடி வரேன்'' கிளம்பி போயிருந்தாள் பங்கஜம் மாமி.

15 வருடம் முன்பு பையன் என்ஜினீயரிங் படிப்புக்காக கிராமத்தில் இருந்து சென்னை வந்த வைதீக வாத்தியார் நாராயணன் குடும்பத்துக்கு, தன் வீட்டில் மாடி போர்ஷனை வாடகைக்கு விட்டவர் தான் பங்கஜம் மாமியும்.சாம்பு மாமாவும்.அன்று முதல் இரண்டு குடும்பமும் மிக நெருக்கம்.

நாராயண வாத்தியார் மிகவும் ஆசாரம், அனுஷ்டானம் நிறைந்தவர்.

சாஸ்திர சம்பிரதாயத்துக்கு மாறாக யார் நடந்தாலும் கோபப்படுவார்.

நாராயணன் வாத்தியார் கணீர் குரல். வேத மந்திர உச்சரிப்பு எல்லோரையும் ஈர்க்கும்.

அரங்கேற்றம் படத்தில் வரும் எஸ்.வி. சுப்பையா மாதிரி யாராவது சொல்லிக்கொடுத்த மந்திரத்தை சரியாக சொல்ல வில்லை என்றால் அந்த சமயமே கோபப்படுவார்.

அதே சமயம், தட்சணை கொடுத்தத்தை வாங்கிக் கொள்வார். மற்ற வைதீக வாத்தியார் மாதிரி தட்சணை இவ்வளவு கொடு என்று நிர்பந்திக்க மாட்டார்.

இந்த ஒரு குணத்தினால் வெகு சீக்கிரத்தில் நல்ல பெயர் சம்பாதித்து வைத்து இருந்தார்.

சீக்கிரமாகவே பங்கஜம் மாமி தெரு பக்கத்தில் சொந்த வீடு கட்டி கொள்ளும் அளவிற்கு வசதியும் வாய்ப்பும் வந்தது. .

ஸ்ரீராமும் என்ஜினீயரிங் படிப்பு முடிந்து புனேயில் வேலை கிடைக்கவே கிளம்பி போய் இருந்தான்.

இரண்டு மாதத்துக்கு ஒரு முறை லீவ் எடுத்து கொண்டு இங்கு வருவது வழக்கமா இருந்தது.

குதூகலமாக போய்க் கொண்டிருந்த அந்த குடும்பத்தில் ஸ்ரீராம் திடுமென கூட வேலை பார்த்த பூஜா மராத்தி இனத்தை சேர்ந்த பெண் மீது காதல் வயப்பட்டு,

கல்யாணம் செய்து கொண்டு ஆசிர்வாதம் வாங்க வந்த போது தான், நாராயண வாத்தியாரினால் ஜீரணிக்க முடிய வில்லை.

”எந்த ஜாதியோ என்ன குலம் கோத்திரமோ? நான் உங்க இரண்டு பேரையும் ஏத்துக்க மாட்டேன்.

லேட்டாக பிறந்த ஸ்ரீராம் மேல் எவ்வளவு பிரியமும் மரியாதையும் வைச்சு இருந்தேன்.

இவன் செஞ்ச காரியத்தினால் எனக்கு எவ்வளவு அவமானம். சாஸ்திர சம்பிரதாயம் பத்தி வாய் கிழிய பேசின வாத்தியார் குடும்பத்தில் நடந்த கூத்தை பாத்திங்களா என்று கேலி பேசவச்சுட்டியே.

இனி நீ எனக்கு பையன் இல்லைன்னு நினைச்சுக்கிட்டு சொச்ச காலத்தை போக்கிடக்கிறேன்.

என் கண் முன்னாடி நிக்காதே. எங்கேயாவவது போ...’’ என்று கதவை மூடினார்.

பெத்தமனம் பித்து என்பது போல சுமங்கலிதான் ஆத்துக்காரரருக்கு தெரியாமல் போனில் பேசும் வழக்கத்தை கொண்டு இருந்தார்.

இந்த சம்பவத்தினால் ஊரில் மதிப்பும் மரியாதையும் குறைய ஆரம்பித்தது. போகும் இடமெல்லாம் கேலி கிண்டல் மனதளவில் நொடிந்து போயிருந்தார்.

அங்கே ஒண்ணு இங்கே ஒண்ணுன்னு மாசத்துக்கு வர்ற வைதீக காரியங்கள் மூலம் வருகிற சம்பாத்தியம் வச்சு ஜீவனம் போய் கொண்டிருந்தது.

அப்பேர்பட்ட ஸ்ரீராம்க்கு 6 வயதில் ஒரு அழகான பெண் குழந்தை உள்ளது என்றும் சென்னைக்கு டிரான்ஸ்பர் ஆகி 3 மாதம் ஆனது என்றும் ஒரு 3 பெட்ரூம் பிளாட் விலைக்கு வாங்கி செட்டில் ஆன விஷயம் கேள்விப்பட்டு, “ஸ்ரீராமை வர சொல்லுங்கோ’ என்று சுமங்கலி சொல்லியும்,” என் தன் மானத்தை விட முடியாது. நான் வரவழைக்க மாட்டேன். நீயும் போக முடியாதுன்னு” கண்டிப்புடன் எச்சரிக்கை விடவும் அடங்கிப்போனாள் சுமங்கலி. கிட்டவந்தும் நேரில் பார்க்க முடியாத சூழ்நிலை.

காலம் ஒருநாள் மாறும். மீண்டும் குடும்பம் சேரும் என்று நம்பிக்கை கொண்டு இருந்தவளுக்கு, அன்று ஆத்துக்காரரும் ஸ்ரீராமை வர சொல்லு என்று சொன்னதும் சந்தோசபட்டாள்.

ஆனால் அந்த சந்தோஷம் அன்று ராத்திரி கூட தங்கவில்லையே.

சுமங்கலிக்கு எவ்வளவு பெரிய இடி.

அடுத்த வாரம் பங்கஜம் மாமியும் அவர் ஆத்துக்காரரும் வந்த போது வரவேற்றாள் சுமங்கலி.

”அன்னிக்கே கேக்கணும்ன்னு நினைச்சேன். ஒன் கூட பிறந்தவர்கள் யாரும் நேரில் வந்து பார்த்தார்களா?’’

"இல்லை மாமி எல்லாம் போனில் விசாரித்ததுடன் சரி.''

அடங்கிப் கிராமத்தில் இருந்து வயதான அம்மா அப்பா வந்து நீ இங்கேயே இருந்தால் பைத்தியம் பிடிச்சுடும்ன்னு சொல்லி, ஊருக்கு அழைச்சிட்டு போய் ஒரு வாரம் கூட ஆகவில்லை. அப்பா அம்மாவுடன் கூட இருக்கும் தம்பி பொண்டாட்டி ஜாடை மாடையாக என்னைக் குத்திக் காட்டி பேசியது பிடிக்கவில்லை. அதான் உடனே வந்துட்டேன்.''

"உன் தங்கைகள் ?''

"இதுவரைக்கும் வந்து பார்க்கக்கூட இல்லை. ஆறுதல் வார்த்தையும் இல்லை.''

"ஆனா உன் மாட்டு பெண் பூஜா உன்னைப் பார்த்து நிறைய தடவை கூப்பிட வந்தபோது என் பையன் போனபிறகு நீ யாரு? உனக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? நீ இது சம்பந்தமா பேசிண்டு இங்கே வராதேன்னு மூஞ்சிலே அடிச்ச மாதிரி சொல்லியிருக்கே?''

அவள் பிளாட்க்கு கூப்பிட்டபோது, ஆசாரம் அனுஷ்டானம் சாஸ்திரம் சம்பிரதாயத்துக்கு விரோதம். நான் உன் கூட வரமாட்டேன். உன் கையால் சாப்பிடமாட்டேன்னு சொன்னியாம்.

பாவம் அந்தபெண். ஒன்னை பாத்துட்டு, என்னையும் மாமாவையும் பாக்க வந்தாள்.

மராத்திப் பெண். கோதுமை நிறம். குழந்தை தங்கவிக்கிரகம் மாதிரி அப்படி ஒரு அழகு.

"ஆண்டி நான் சமைச்சு சாப்பிட இஷ்டமில்லைன்னு சொன்னாங்க, அவங்க சமைக்கட்டும். எப்படியாவது என்னோட இருக்கட்டும். எனக்கு ஆறுதலா, பக்கபலமா இருக்கும். ஹெல்ப் பண்ணுங்கோ.

நான் ஸ்ரீராமை கல்யாணம் செஞ்சதினால் என் குடும்பமும் என்னை ஒதுக்கி வச்சுருக்கு ஸ்ரீராம் இறந்த செய்தியை கூட நான் இன்னும் சொல்லல...''

பூஜாவை பார்க்க பரிதாபமாக இருந்தது.

இந்த சின்ன வயதில் அமங்கலி கோலம்.

"சரி பூஜா. நீ கிளம்பு நான் பேசி சம்மதிக்க வைக்கிறேன். நீ கவலைப்படாதே. எல்லாம் நல்லபடி நடக்கும்.''

"மிகவும் வற்புறுத்தி அவள் பிளாடுக்கு கூப்பிடவே மறுநாளே போய் பார்த்தபோது அது வீடா தெரியல. ஒரு கோயில்மாதிரி இருந்துச்சு. அவ்வளவு நேர்த்தி பூஜை அறை அவ்வளவு சுத்தம். திவ்ய பிரபந்தம் பாசுரம் சேவிச்சுட்டு, எனக்கு மஞ்சள் குங்குமம் புடவை வைச்சு கொடுத்து, நமஸ்காரம் பண்ணிட்டு, குடிக்க ஹார்லிக்ஸ் கொடுத்தா.

இந்தக் கால பெண் மாதிரி இல்லை. நல்ல சம்பளத்துடன் வேலையும் பாத்துண்டு வீட்டையும் சுத்தமா வச்சுகிறது சான்சே இல்லை.

கலப்புத் திருமணம் செய்து கொள்கிறவர்கள் பரந்த மனப்பான்மை உடையவர்களாக இருப்பார்கள். தம்பதிகள் இருவரும் ஒருவர் மற்றவரின் கலாச்சாரங்களையும்,

பழக்கவழக்கங்களையும் தெரிந்து கொள்வதில் ஆர்வமாக இருக்கின்றனர்.... என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அது பூஜா விஷயத்தில் உண்மையா தெரிஞ்சுது.

ஒரே இனத்திற்குள்ளாக திருமணம் செய்து கொள்ளும் நபர்களுக்கு பிறக்கின்ற குழந்தைகள் அறிவு குறைபாடு உள்ளவர்களாகவும், பரம்பரை நோய்கள் வர வாய்ப்பு இருப்பதாகவும். அதே சமயம் கலப்புத் திருமணம் செய்த தம்பதிகளுக்கு பிறந்த குழந்தைகள் நல்ல ஆரோக்கியமான உடலையும், சிறந்த அறிவாற்றலையும் பெற்றுக்கொள்வதாகவும் பலமுறை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் தெரிய வந்திருக்கின்றன."

ஸ்ரீராம் நல்ல காரியம்தான் செஞ்சு இருக்கான்.

நீ சாஸ்திரம் சம்பிரதாய வழக்கம்ன்னு சொல்றயே, நீ சாதாரண மனுஷி. ஆழ்வார்கள் 12 பேரும் வெவ்வேறு ஜாதி... அவர்கள் பாசுரங்களை சேவிக்கலயா?

ஏன் ?ஆளவந்தார் சிஷ்யர்களில் மாறநேரி நம்பி தாழ்ந்த குலம். அவர் ராஜா பிளவு நோயினால் அவதிப்பட்ட போதுதான் உயர்ந்த ஜாதியில் பிறந்தாலும், நம்பியை குளிப்பாட்டி உணவு ஊட்டி விட்டார் பெரிய நம்பின்னு கேள்விப்பட்டு இருப்பே.

அவர்களை விடவா நீ உயர்வு? வயது 65 ஆச்சு .உனக்கு பாதுகாப்பு கிடையாது. உடம்பு சரியில்லை என்றால் யார் கவனிப்பா?

உன் மருமகள் இள வயசு. கையில் குழந்தை வேறு.

கழுகுகள் வட்டமிடும் இந்த உலகில் அவள் கற்பை எப்படி காப்பாத்தி கொள்வாள்?

அவ நினைச்சா உன்னை பத்தி கவலைப்படாமல், ஸ்ரீராமே போயிட்டான். இரண்டு குடும்பமும் ஏத்துக்கலை. நம்ம பாதுகாப்புக்கு ஏன்வேற கல்யாணம் பண்ணி கொள்ளக்கூடாதுன்னு நினைச்சு இருக்கலாம். ஆனா பூஜா அப்படிப்பட்ட பெண் கிடையாது. ஸ்ரீராம் மேலயும் ஒங்க குடும்பம் மேலயும் பக்தி மரியாதை.

ஓங்க ஆத்துக்காரரர் மாதிரி வறட்டு கவுரவம், வீண் பிடிவாதம், ஈகோ பிரச்சினை இதெல்லாம் விட்டு விட்டு பூஜாவுடன் சேர்ந்து இரு. இனிமே அவ தான் உனக்கு. அந்த குழந்தை உன் பையனின் வாரிசு.

"கிட்டத்தட்ட 50 நாள் ஆகியும் உன்னை பத்தி கவலை படாத உன் உடன் பிறப்பால், ஏற்பட்ட உறவுகளை தூக்கி எறி...'

பங்கஜமும், சாம்பு மாமாவும் சொல்லச் சொல்ல சுமங்கலிக்கு தன் ஆத்துக்காரர் செய்த தவறை, தானும் இனி செய்யக்கூடாது என்ற முடிவுக்கு வந்தாள்.

சாம்பு மாமாவும் மாமியும் தன் மேல் அக்கறை கொண்டு இவ்வளவு தூரம் பேச வேண்டிய அவசியம் என்ன?

"மாமா, மாமி நீங்க சொன்ன வார்த்தை ஒவ்வொன்றும் எனக்கு சாட்டை அடி.

பிறப்பால் தொடரும் உறவுகள் இல்லாமல் பிணைப்பால் தொடரும் உறவுகளே இனி புனிதமானவை என்று மாமா சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை என்பதை இந்த 50 நாளில் உணர்ந்துகொண்டேன்...''

போனை எடுத்தாள், ''பூஜா! அம்மா ரெடியா இருக்கேன். என்னை வந்து கூட்டிகிட்டு போ.''

தங்களது முயற்சி இவ்வளவு சீக்கிரம் வெற்றி கண்டதை நினைத்து நெகிழ்ச்சி ஆனார்கள் சாம்பு மாமாவும் பங்கஜமும்....

# 6. இருட்டில் ஒரு வெளிச்சம்

"ஆலயம் செய்வோம் அங்கு அனுமதி இல்லை.

நீயும் அந்த கூட்டம்தான் இதில் அதிசயமில்லை'

கண்ணதாசன்.

அந்த கிராமத்தின் மேற்கே,கம்பீரமாக வீற்று இருந்த, ஸ்ரீ ரெங்கநாதர் சமேத ஸ்ரீ ரெங்கநாயகி கோயில்,

கும்பாபிஷேகம் 30ஆண்டுகளுக்கு பிறகு, நடந்து முடிந்த, அடுத்த வாரம், கிராம தலைவர் முன்னிலையில், திருப்பணி கமிட்டி உறுப்பினர்கள், ஊர் மக்கள் எல்லோரையும் அழைத்து, தன் வீட்டில் கூட்டத்துக்கு, ஏற்பாடு செய்து இருந்தார், கோயில் பரம்பரை டிரஸ்டியான ராமபத்ரன்..

"மிகச் சிறப்பாக, கோயில் கும்பாபிஷேகம் உங்கள் எல்லோருடைய முயற்சியினால் நடந்தேறியது. அதற்கு முதலில், என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.''

மண்டலாபிஷேகம் வரை, மண்டகப்படி செய்ய ஒத்து கொண்டவர்கள் லிஸ்ட், என்கிட்ட இருக்கு.

இப்ப இந்தக் கூட்டம், மண்டலாபிஷேகம் அன்று, செய்ய வேண்டிய ஏற்பாடுகள் பத்தி விவாதிக்கத் தான்.

கும்பாபிஷேகம் அன்னிக்கு, எந்த கலை நிகழ்ச்சியும் ஏற்பாடு பண்ணல. மண்டலாபிஷேகம் நிறைவு அன்று, ஸ்வாமி புறப்பாடு முடிஞ்ச உடன், ஆடலும், பாடலும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யுங்க.'

கிராம நற்பணி இளைஞர் மன்ற தலைவருடன் மற்ற இளைஞர்களும் சேர்ந்து சொன்ன போது, அதை மறுத்து பேசினார் மஹாலிங்கம் அய்யர். ஓய்வு பெற்ற ஆசிரியர்.

"ஆடலும் பாடலும் நிகழ்ச்சி ஏற்பாடு பண்ணினா, அது கலாட்டாவில் முடியும் அப்புறம் போலீஸ் அது இதுன்னு நம்ம ஊர் பேரு கெட்டுடும்.''

இன்னும் சில பேர் ஆள் ஆளுக்கு, வாய்க்கு வந்த நிகழ்ச்சிக்களை, ஏற்பாடு செய்யச் சொன்னார்கள்.

முடிவா ராமபத்ரன் எழுந்து, மன்னிக்கனும், நீங்கள் எதிர்பார்க்கும் நிகழ்ச்சி நடத்த நிறைய செலவாகும். நிதிநிலைமை சொல்லும் படி இல்லை. நீங்க வசூல் செய்துகொடுத்த பணம் கும்பாபிஷேக செலவுக்கே, பத்தல. மத்த செலவுக்கு பணம் நான் போட்டு சமாளிச்சேன்...''

சொற்பொழிவாளர் ஏற்பாடு பண்ணி, உபன்யாசம் நடத்தலாம். செலவும், சிம்பிளா முடிஞ்சுடும் என்ன சொல்றீங்க? போஸ்டல் சீனு சார் நீங்க உபன்யாசகர் ஏற்பாடு

பண்ணிடுங்க…

ராமபத்ரன் பேச்சுக்கு, மறுத்துபேச, அந்த கூட்டத்தில் யாராலும் முடியாது. அவருடைய பலம் ஊர் மக்களுக்கு தெரியும்.

மண்டாலாபிஷேக நிறைவு தினம் அன்று, யார்யாருக்கு என்ன பொறுப்பு என்று வரையறுக்கபட்ட பின், கூட்டம் நிறைவு பெற்றது.

அந்த அக்ரஹாரத்தில் மொத்தம் 40 வீடுகள். கூடிய வரை அவர்கள் உறவுக்காரர்களாக இருந்தார்கள்.

இந்தக் கோயிலின், பரம்பரை டிரஸ்டி. வைணவம் வளர்த்த ஆளவந்தார் சிஷ்யர்களில், ஒருவரான பெரிய நம்பி வம்சாவளியை சேர்ந்தவர், என்ற பெருமையை பெற்ற ராமபத்ரன் வீடு அக்ரஹாரத்தின் நடுவில்.

வயது 50… தஞ்சை மண்ணக்கு உரித்தான கும்பகோணம் வெற்றிலை, பன்னீர் புகையிலை, கை சீவல் போட்டு காவி பல் தெரிய சிரிப்பார். அதில் உள் வன்மம் இருக்கும். கொஞ்சம் சபல பேர்வழியும் கூட.

ஆனால் மனைவி ஆண்டாள் இவர் குணத்தை போல் இல்லாமல் எல்லோருக்கும் உதவும் மனுஷி.

போஸ்டல் சீனு உயர் அதிகாரியாக பல இடங்களில் பணி புரிந்து, ரிடயர்மென்ட்க்கு பிறகு, தன் சொந்த கிராமத்தில் செட்டில் ஆகி, உள்ளூர் குழந்தைகளுக்கு, இலவச டியூசன், மற்றும் உள்ளூர் பிரச்சனைகளுக்கு தீர்வு, செய்வதை, வழக்கமாக கொண்டு இருந்தார்.

அவர் மனைவியும் அவர் பெண் பாரதியும் ஊருக்கு உபகாரி.

எப்போதும் சிரித்த முகம் எல்லோரிடமும் கனிவான பேச்சு. எதையும் ஒளிவு மறைவின்றி கேட்கும் துணிச்சல், துணிவு.

எந்த சப்ஜெக்ட் கேட்டாலும் பதில் அளிக்க கூடிய திறமை.

இனிய சொல். இசை பயிற்சியை மேலும் பண்படுத்தி இருந்தது.

தியாகராஜர் கீர்த்தனைகள் அத்துப்படி..

எல்லா ராகங்கள், பிடித்து இருந்தாலும், தனக்கு, மனதோடு நெருக்கமான, ஹிந்தோளம் ராகத்தில் அமைந்துள்ள, “ஸமாஸ வர ரமணா” என்ற தியாகராயர் கீர்த்தனை மிகவும் பிடித்த ஒன்று.

தமிழ் இலக்கியம் மீது ஆசை. திவ்யப்ரபந்தம் பாசுரங்கள் மீது ஈடுபாடு. சைவ சமய நூல்கள், நாயன்மார்கள் பற்றிய தேடுதல் ஆர்வம் மனித நேயம் உரத்த சிந்தனை. சமூக பார்வை அத்துடன் வங்கி ஒன்றில் உயர் அதிகாரி.

சராசரி பெண்ணாக, தான் இருப்பதில் அர்த்தம் இல்லை, என்பதை நன்கு உணர்ந்தவள்.

"பாரதி, இன்னிக்கு மண்டலா பிஷேகம் பூர்த்தி. நிறைய வேலை இருக்கு. லீவு போட முடியுமா? நீ இருந்தா கொஞ்சம் உதவியா இருக்கும்.''

"ஸாரிம்மா லீவு போடமுடியாது. 2 மணி நேரம், பர்மிசன் போட்டு, சீக்கிரம் வந்துடுறேன்.''

............

ராமசாமி கோயிலின் வெளி பிரகாரத்தின் மூலையில், குளத்துக்கு போகும் பாதையில், முடங்கி இருந்தான். கடந்த ஒரு மாதமாக, உடம்பு சரியில்லாமல், அரசாங்க ஆஸ்பத்திரியில், சிகிச்சை முடிந்து, நேற்று இரவு தான் திரும்பி இருந்தான்.

ஒரு மாத சிகிச்சைக்குப்பின் உடம்பு நாராக போயிருந்தது. பலவீனமாக காணப்பட்டான்.

அவன், உடல் தெம்புடன் இருந்தபோது, எல்லோருடய வீட்டிலும் எல்லாவிதமான வேலைகள் செய்தவன்.

செய்த வேலைக்கு வெறும் சாப்பாடு மட்டும் போட்டு விட்டு கூலி கொடுக்காமல் ஏமாற்றியவர்கள் நிறைய பேர்.

மனைவி, மகன் இறந்து போன பின்பு, இந்த வெளி பிரகாரம் தான் அவனுக்கு எல்லாமே.. பாரதியின் அம்மாவும், ஆண்டாள் இருவர் மட்டுமே,தினமும் சாப்பாடு போடுவார்கள்.

கடந்த ஒரு மாதமாக, காய்ச்சலினால் சரியான சாப்பாடு இல்லாமல் இருந்த ராமசாமிக்கு அன்று மனம் சந்தோசமாக காணப்பட்டது.

இன்று கோயிலில் விசேஷம். பிரசாதம் கிடைக்கும்..

சன்னதி தெரு முழுவதும் விழாக் கோலம். இளைஞர்கள் வண்ணக் கொடி, வாழை, மாவிலை தோரணம் கட்டுவதில் ஈடுபட்டு கொண்டு இருந்தார்கள்.

ஆனாலும், எந்த கலை நிகழ்ச்சியும் இல்லாதது வருத்தத்தை கொடுத்தது.

சிறப்பு பூஜைகள் காலையில் முடிந்திருந்தது.

மாலை வளர்ந்து வரும் அந்த சொற்பொழிவாளர் மதத்தில் புரட்சி செய்த ராமானுஜர் பற்றி பேச தயார் ஆனார்.

இது மாதிரி சொற்பொழிவு கேட்க ஆர்வமான பாரதி. முன்வரிசையில் உக்காந்து கொண்டாள்.

நிறைய ஆண்களும், பெண்களும், அமர்ந்து இருந்தனர்.

மாமி, இன்னொரு மாமியிடம், "போச்சு. எங்க மாமா தொந்திரவு தாங்காம, நான் வந்தேன். இன்னிக்கு அவராலே ரோஜா, கல்யாணவீடு, நாயகி, கண்மணி, சித்தி 2 சீரியல் பார்க்க முடியாம போயிடுத்து.'' புலம்பி கொண்டு இருந்தாள்.

"ஆமாம்... ஆமாம்...'' எனக்கும் கூட இந்த உபன்யாசம் கேக்க பிடிக்காது. ஏதோ கோயிலுக்கு டொனேஷன் கொடுத்து இருக்கோம். பிரசாதம் வாங்கின கையோட, ஆத்துக்கு

போக வேண்டியது தான். உடம்பு வேறே முடியலே...''

பாரதிக்கு அவர்கள் மீது கோபம் வந்தது. நல்ல விஷயத்தை கேக்க ஆர்வம் இல்லாதவர்களை பற்றி என்ன செய்வது?

பாழாப்போன டீ.வி சீரியலுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்களே?

உபன்யாசகர் மிக அழகாக, ஸ்ரீ ராமானுஜர் பற்றியும், அவர் செய்த சீர்திருத்தங்கள் பற்றியும் சொல்ல ஆரம்பித்தார்.

அந்த மஹான் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களை, "திருகுலத்தார்' என்று பெயரிட்டு அழைத்ததையும், தான் சிறுவயதாக இருக்கும் போது, சேரி மக்களுக்கு பூணூல் போட்ட செயலுக்கு ஊர் கட்டுபாடு விதித்ததையும், ஊர் மக்கள் தன்னை, பகையாய் நினைத்தபோது பகவான் அப்படி நினைக்கவில்லை என்பதையும்,

திருக்கோட்டியூரில் தன் குரு நம்பியிடமிருந்து பெற்ற, திருமந்திரம் உபதேசத்தை, சத்தியத்தை மீறி, கோயில் உச்சிக்கு சென்று, ஊர் மக்களிடம் சொன்னதால், தன் மீது கோபம் கொண்ட போது, தான் ஒருவன் மட்டும் உங்கள் உபதேச மந்திரத்தைக் கேட்டு, சொர்க்கம் போவதைக் காட்டிலும், ஊர் மக்கள் எல்லோருக்கும், அந்த பாக்கியம் கிட்டட்டும், அதனால் எல்லோருக்கும் சொர்க்கம் எவ்வளவு உத்தமம், என்று சொன்னதும், திருக்கோஷ்டியூர் நம்பி,

“பிறர் பால் மனம் இறங்கும் தன்மை' தனக்கு தெரியாமல் போனதை வருந்தி, இனி இது"எம்பெருமான் தரிசனம்' என்று பெருமிதம் கொண்டதையும், சொல்லி கோஷ்டி சேவிக்க நேரமானதால், இத்துடன் முடித்துக் கொள்கிறேன் என்று அழகாய் முடித்து இருந்தார்.

கோஷ்டி சேவித்து முடிந்தவுடன், பாரதி

"குறையொன்றுமில்லை கோவிந்தா' மனம் உருகி பாடி முடித்தாள்.

ராகவபட்டர், பெருமாளுக்கு கற்பூர ஆரத்தி காண்பித்து விட்டு, தீர்த்தமும், சடாரியும், துளசியையும் ஒவ்வொருவராக கொடுத்து கொண்டு இருந்த வேளையில், அந்த சம்பவம் எதிர்பாராமல் நடந்தது.

"இவனைப் பிடிச்சு வெளிய தள்ளு ! யாரு இவனை உள்ளே விட்டது?'

ராமபத்ரன் சத்தம் போட்டுக் கொண்டே, ராமசாமி கழுத்தை பிடிச்சு, தள்ளிவிட, ஏற்கனவே பசி மயக்கத்தில் இருந்த அவன், மண்டபத்தின் கருங்கல் தூண் அருகே விழ, கை கால்கள் சிராய்ப்பு, காயம், மண்டையில் அடி.

எல்லோரும் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தார்களே தவிர, யாரும் தடுக்கவில்லை. ராமசாமியிடம் நெருங்கி அவனை காப்பாத்தவும் இல்லை.

“ஐயோ அம்மா” என்ற அலறல் சத்தம் கேட்க, பதறிப் போன பாரதி, தன் கையிலிருந்த வாட்டர் பாட்டிலிலிருந்து, ராமசாமிக்கு தண்ணீர் கொடுத்து விட்டு, பக்கத்தில் இருந்த இளைஞர் மூலம், தன் வீட்டில் இருந்து முதல் உதவி பெட்டியை எடுத்து வர சொல்லி,

முதுலுதவி செய்தபின். ஆசுவாசப்படுத்தி உபன்யாசம் செய்த மேடையில், மற்ற இளைஞர்கள் உதவியுடன், படுக்க வைத்து விட்டு, வேகவேகமா உள்ளே வந்தவள் டிரஸ்டியிடம்,

"ஏன் மாமா? ராமசாமியை தள்ளி விட்டீங்க? எனக்கு தெரிஞ்சாகணும். இவ்வளவு கூட்டம் இருந்தும் ஏன் அவரை கண்டிக்கலே?''

"பாரதி! இதுல என்ன தெரியணும்? அவன் தாழ்ந்த குலம் . அவனை உள்ளே விட முடியுமா?''

"ஆமாம்... ஆமாம்...'' டிரஸ்டி செஞ்சது கரெக்ட் தான். ராகவ பட்டரும், பட்டு சாஸ்திரிகள். மஹாலிங்கம் ஐயரும் எல்லோரும் ஒரு மித்த குரலில், ஒத்து ஓதினார்கள்.

இப்படி சொன்னதும் பாரதிக்கு இன்னும் கோபம் வந்தது.

"முதலில் தாழ்ந்த மனிதன் என்கிற உணர்வு உங்கக்கிட்டு இருந்து விலகணும்.

சாதியையும்,ஆசாரத்தையும் பிரதானமாக கருதிய, எட்டாம் நூற்றாண்டு காலத்திலேயே, சாதி பாராமல் தனக்கு வழிபட வேண்டுமென்று,ரெங்கநாத பெருமாளே சொன்னதாக, தொண்டரடிப் பொடி ஆழ்வார் இப்படி சொல்லியிருக்கிறார்.

இழிகுலத்தவர்களேனும் எப்படி யார்களாகில் தொழுமின்!கொள்மின்!!

மேலும் தான் சொன்ன உபதேசம், வெறும் வார்த்தையாக இருக்கக் கூடாது, என்று கருதிய பெருமாள், தன் உபதேசத்திற்கு, உயர்வு கொடுப்பதற்காக, தாழ்ந்த குலத்தில் பிறந்த, திருப்பாணாழ்வாரை லோகசாரங்கர் என்ற அந்தணர் தோள் மேல் தாங்கி, தன்னிடம் வரவழைத்தது குலத்தை விட பக்திதான் சிறந்தது என்று நிரூபிக்கவே.

பன்னிரண்டு ஆழ்வார்கள் எல்லோரும் ஒரே சாதியா?''

ராகவபட்டரினால் எதுவும் பேச முடியவில்லை. தன் தலையை தொங்கப் போட்டுக் கொண்டார்.

"மஹாலிங்கம் சார், இப்படி வாங்க... நான் உங்கள் மாணவி. இதே ஊரில்உள்ள ஆரம்ப பள்ளிக்கூடத்தில், நீங்கள் எனக்கு மனதில் பதியும் வண்ணம்,சொல்லிக்கொடுத்த, பாரதி பாட்டு

"சாதிகள் இல்லையடி பாப்பா குல தாழ்ச்சி, உயர்ச்சி சொல்லல் பாவம்'

என்ன செய்ய முடியும்.? போதனைகள் எல்லாம் சும்மா ஒரு பொழுதுபோக்கு என்பது தானே உங்கள் எண்ணம்.?

பட்டு சாஸ்திரிகளே நீங்க சாஸ்திரம் சம்பிரதாயம் சடங்கு இவைகளில் கரை கண்டவர். நீங்க சொல்லுங்க?

அந்தணர்கள் ஆனாலும், வேறு எந்த குலத்தை சேர்ந்தவர்கள் ஆனாலும், ஒவ்வொரு

சைவ கோயிலில் இருக்கும், அறுபத்தி மூவர் நாயன்மார்களை, வணங்காமல் வருவதில்லை. அந்த மூர்த்திகளுக்கு ஆராதனை நிகழாம இல்லை

நான் தெரியாமல் தான் கேக்கிறேன். எல்லா நாயன்மார்களும் ஒரே சாதியா?' '

பட்டு சாஸ்திரிகள் தம்மை விட இவளுக்கு எல்லா விஷயமும் தெரிஞ்சு இருப்பதை நினைத்து ஆச்சரியமானார்.

இவளிடம் கொஞ்சம் எச்சரிக்கையாகதான் இருக்க வேண்டும் என்று மனதில் நினைத்தார்.

"சிவ பெருமானே தனக்கு அனுதினமும் அபிஷேகம், ஆராதனை செய்து வழிபட்ட குருக்களை விட, காளத்தி வேடனை தானே, அதிகமாக விரும்பினார் ..

அப்படித்தானே பாலு குருக்கள் ?

இங்கு கூடி இருக்கும் எல்லா பிராமணர்களிடமும் கேட்கிறேன். நீங்கள் தினமும் ஜெபிக்கும் காயத்ரி மந்திரம் கூட ஒரு சத்திரியர் சொன்னது தானே.

ஆனா நாம வழக்கமா சொல்லிக்கிட்டு இருக்கிறது யாருங்க இந்த காலத்திலே சாதியை எல்லாம் பாக்கிறது அப்படின்னு சொல்லிட்டு சாதி வேற்றுமை பாத்துகிட்டு தான் இருக்கோம்.

இதே ராமசாமி கூலிகூட வாங்காமல் இந்த கோயிலுக்கு எத்தனை தடவை வேலை செஞ்சுருக்கார்...

ஆனால் அவருக்கு கோயிலில் நுழைய, சாமி தரிசனம் செய்ய அனுமதி இல்லை?' '

"என்ன எல்லோருக்கும் நீ புத்திமதி சொல்றயா? சீனு... உங்க பொண்ணை கொஞ்சம் அடக்கி வாசிக்க சொல்லுங்க. அப்பறம் நான் நானாக இருக்க மாட்டேன். இந்த கோயிலுக்கு பரம்பரையா எங்க குடும்பம் டிரஸ்டியாக இருந்துட்டு வருது.

யாரும், யாரையும் கேக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆமாம் சொல்லிட்டேன் என் இஷ்டம் தான்...' '

கோபமாக கத்திக் கொண்டே இருந்த ராமபத்ரனை நோக்கி, பொறுமை இழந்த ஆண்டாள் அவர் பக்கம் வந்து,

"தாழ்ந்த குலம் தாழ்ந்த குலம்ன்னு சொல்லிக்கிட்டு இருக்கிற ராமசாமி தான் 2 வருஷம் முன்பு, நீங்க ஆக்ஸிடெண்ட்டில் அட்மிட் ஆகி, நிறைய ரத்தம் போயிருந்த போது, மனசு தாங்காம ஆஸ்பத்திரிக்கு ஓடோடி வந்தவன், அரிதான குரூப்பான ஓ + கொடுத்து, உங்களை பிழைக்க வைச்சான்".

நான் ரத்தம் கொடுத்தேன்னு சாமிக்கு தெரிஞ்சா, வேதனை படுவாரு".

"யார்கிட்டேயும் சொல்லாதீங்கன்னு, என்கிட்ட சத்தியம் வாங்கிக்கிட்டான்".

"இந்த ரகசியம் எனக்கும் பாரதிக்கும் மட்டும் தான் தெரியும்.."

ராமபத்ரன் ஆண்டாள் சொன்னதைக் கேட்டதும், அதிர்ச்சி அடைந்தார். உடல் கூனிக் குறுகியது.

ஆண்டாள் தொடர்ந்து, ”தன் ஆச்சார்யர் ஆளவந்தார் மீது உள்ள பக்தியினால், ஆளவந்தார்க்கு ஏற்பட்ட ராஜபிளவு நோயை, ஆளவந்தார் மறுத்தும், தன் மீது ஏற்றிக் கொண்டார். தாழ்ந்த குலத்தில் பிறந்த மாறனேரி நம்பி.

கடைசி காலத்தில், பெரிய நம்பி தினமும் ராஜபிளவு நோய் உள்ள மாறனேரி நம்பியை குளிப்பாட்டி, ஆடை மாற்றி அவர் துணிகளை துவைத்து காய வைத்து, சாப்பாடு ஊட்டி விட்டாராம்.

அவர் இறந்து போன பின், ஒரு வைஷ்ணவனுக்கு செய்யும் அந்திமகிரியையை மனம் உவர்ந்து செய்தார்.

“பெரியநம்பி வம்சத்தில் வந்த நீங்க இன்னிக்கு செஞ்ச செயல் அருவறுப்பு தரும் செயல்.”

யாராக இருந்தாலும் அவரது பிறப்பை விட, மேன்மையும், அவர் செய்த காரியமும் தான் உயர்வை காட்டும்.’’

1000ஆண்டுகளுக்கு முன்பு, அவதரித்த பெரிய நம்பி, ஸ்ரீ ராமானுஜர் மாறனேரி நம்பி இன்னும் எண்ணற்ற ஆச்சார்யா சீடர்கள் தங்கள் மேன்மை மூலமும் செயல் மூலமும் உயர்வை உலகிற்கு நிரூபித்தனர். அதனால் தான் அவர்களை இன்னும் போற்றுகிறோம்.

இந்த நூற்றாண்டில், ராமசாமி தான் தாழ்ந்த குலமானாலும், எவ்வளவு தடவை ஒவ்வொருவர் வீட்டில் உள்ள, செப்டிக் டேங்கில் இறங்கி, மனித மலத்தை எடுத்து, சுத்தபடுத்தி இருக்கிறார்.

தன் மேன்மை மூலம் ஒங்க உயிரை, ரத்தம் கொடுத்து காப்பாத்தி இருக்கார.’’

பாரதியின் பேச்சில் நியாயம் இருந்ததை உணர்ந்ததால் எல்லோரும் அமைதியாக இருந்தார்கள்.

”பாரதி என்னை மன்னிச்சுடு. இவ்வளவு நாள் மானுட வேற்றுமை பார்த்து இருட்டில் வாழ்ந்த என்னை என் ஆசான் பெரியநம்பி செய்த செயலை உணர்த்தி என்னை வெளிச்சதுக்கு கொண்டு வந்து விட்டாய்.’’

நான் செய்த செயலுக்கு ராமசாமியிடம் மன்னிப்பு கேட்டாத்தான் என் மனசு புனிதமா ஆகும். ராகவபட்டரே. ஒரு வாழை மட்டையில் பிரசாதம் கொடுங்க அப்புறமா மத்தவங்களுக்கு விநியோகம் பண்ணலாம்.

ராகவபட்டர் நடுங்கி கொண்டே தட்டில் கொண்டு வந்த பிரசாதத்தை, எடுத்துக் கொண்டு ராமசாமியிடம் கொடுக்க பாரதியுடன், தான் விரைந்தபோது ராமசாமி அங்கு காணவில்லை.

.

அவனுக்குத் தெரியும். பாரதி மாதிரி சீர்திருத்த கருத்துக்களை உரக்கச் சொன்னாலும்,

இந்த உலகில், இன்னும் “எவ்வளவு காலத்துக்கு மானுடம் இருக்கும் வரை, வேற்றுமை இருக்குமோ” என்ற கேள்விக்கு பதில் தெரியாமல், கோயிலை விட்டு, ஏன் ஊரின் எல்லையை விட்டு, ரொம்ப தூரம் போயிருந்தான்.

# 7. இதுவும் கடந்து போகும்

25, வருடத்திற்குப் பிறகு, அஞ்சல் முதுநிலை கண்காணிப்பாளராக, பொறுப்பு ஏற்க, இந்த ஊரில் கால் வைக்கிறேன். ஊர் பெரிய மாற்றம் இல்லை. ஆபீஸ் பக்கம் இருந்த பேருந்து நிலையம், 3 கி.மி தள்ளி ஊரின் நடுவில், மாற்றம் செய்யப்பட்டு இருந்தது.

ஆபீஸ் எதிர்புரம் இருந்த, ஆனந்த பவன் ஹோட்டல் இடிக்க பட்டு, சூப்பர் மார்க்கெட் ஆக மாறி இருந்தது. ஆனால் கடையை ஒட்டி இருந்த, நாயர் டீ கடை (90% ஹெட் போஸ்ட் ஆபீஸ் ஸ்டாப்களும், டிவிஷன் ஆபீஸ் ஸ்டாப்களும் அக்கௌன்ட் வைத்து இருக்கும் கடை மட்டுமல்ல, (ஆபத்பாண்டவர் அவசர கடன் உதவி கொடுப்பவர்) கொஞ்சம் மாடர்ன் ஆக மாறி இருந்தது.

டிவிஷன் ஆபீஸ், ஹெட் போஸ்ட் ஆபீஸ் ஒரே காம்பௌண்ட். இடையில் சின்னதாக இருந்த வேப்ப மரம் பெரிதாக மாறி இருந்தது. அங்கிருந்த கிணறு மூடி இருந்தது. வேறு ஒன்றும் மாற்றம் இல்லை.

ஆபீஸ் ஜாயின் பண்ணிய இரண்டாம் நாள், மரியாதை நிமித்தம், என்னை பார்க்க, டிவிஷனில் உள்ள, இரண்டு ஹெட் போஸ்ட் மாஸ்டர்கள், சப். டிவிஷன் துணைகண்காணிப்பாளர்கள், ஆபீஸ் சூப்பர் வைசர், டிவிஷன் ஆபீஸ் ஸ்டாப்ஸ் மற்றும் ப்ராஞ்சு செகரேட்டரி, டிவிஷன் செகரட்டரி. பூங்கொத்து பழங்களுடன் வந்து இருந்தார்கள்.

ஒவ்வொருவரையும், ஆபீஸ் சூப்பர்வைசர் அறிமுகப்படுத்திய பின், கடைசியில் “இவர் சண்முகநாதன் ஏ. பி. எம் அக்கௌன்ட்ஸ், ஹெட் போஸ்ட் ஆபீஸ் அத்துடன் ஒரு யூனியன் பெயரைச் சொல்லி அதன் டிவிஷன் செகரட்டரி.” சண்முகநாதனை நான் பார்த்த பார்வையில், அவர் என்னை நேருக்கு நேர் பார்ப்பதில் கூச்சமும் அதனால் ஏற்பட்ட தயக்கமும் நன்கு தெரிந்தது.

ஆஃபீஸ் சூப்பர்வைசர் முன்பு நானும் ஏற்கனவே தெரிந்தவர் மாதிரி காட்டிக் கொள்ளவில்லை..

நான் 25 வருடம் முன்பு, பக்கத்து ஊரில் பி கிளாஸ் போஸ்ட் மாஸ்டர். இவர் ஹெட் ஆஃபீஸ் அக்கௌன்டன்ட். இப்போ ஏ.பி.எம். அதே யூனியன் செகரட்டரி.

இன்னும் அதே நிலையில் இருக்கும், இந்த மனிதன், என் ஆரம்ப அலுவலக வாழ்க் கை தொடக்கதில், பாதிப்பை ஏற்படுத்திய சண்முகநாதன்.

அறிமுகம் முடிந்த பின் அவரவர்கள் கிளம்பி போயிருந்தார்கள்.

என் நினைவுகள் பின்னோக்கி சென்றது. அன்று காலை 8 மணி. சுப்பிரமணி கிளார்க் ஆபீஸ் வந்த போது, சார் நேத்திக்கு, யூனியன் மீட்டிங் போன போது, ஒங்க போஸ்ட் மாஸ்டர் டெலிபிரிண்டர் ட்ரைனிங்க்கு செலக்ட் ஆகலைன்னு, செகரட்டரி சொன்னார். ரீசன் கேட்ட போது தெரியாதுன்னு சொல்லிட்டாரு. என்றார்.

"என் மனசு கேக்கல. நீங்க செலக்ட் ஆகி விடுவேன். சென்னையில் 6 மாதம் ட்ரைனிங்கின் போது கிடைக்கும் டி . ஏ. ஹெச். ஆர். ஏ., சி. சி. ஏ . இதன் மூலம் கிடைக்கற பணத்தை கொண்டு அப்பாவுக்கு மெடிக்கல் டிரீட்மென்ட் பண்ணலாம்னு சொல்லிக்கிட்டு இருந்தீங்க'

"கிளார்க் சொன்னது சரி தான். சென்னைக்கு டெலிப்ரின்டர் ட்ரைனிங் 6 மாசம் போனால்கூடுதல் சம்பளம் கிடைக்கும். அந்த பணத்தைக் கொண்டு அப்பா மருத்துவ செலவை சமாளிக்கலாம் என்று நினைத்த எனக்கு பெருத்த ஏமாற்றம்தான்.

ஒரு மாதம் முன்பு இரண்டு ஹெட் போஸ்ட் ஆபீஸ்க்கு டெலிப்ரின்டர் ஸ்டாப் தலா ஒரு வேகன்சி. வயது 30க்குள் இருக்க வேண்டும். விருப்பப்பட்டவர்கள் அப்ளை பண்ணலாம் என்று சர்குலர் வந்திருந்தது.

சர்க்குலர் பார்த்தவுடன் க்ராடஷன் லிஸ்டில், டிவிஷன் சீனியாரிட்டி பார்த்து விட்டு, தான் அந்த 30வயதுக்குள் இருக்கும் சீனியாரிட்டியில் முதல் இடம், என்பதை கன்பார்ம் செய்து கொண்டு, அப்ளை செய்த, கையோடு யூனியன் செகரட்டரியிடம் சொன்னதும், அவரும்," நீங்க தான் சீனியர், எனவே நிச்சயம் கிடைக்கும். "டோன்ட் ஒரி.," நான் எஸ்.பி கிட்ட பேசறேன். " என்று சொன்னதும் ஞாபகதிற்கு வந்தது.

"சார்! நீங்க டிவிஷன் ஆபீஸ் போயி, நேர்ல பாத்துட்டு வந்துடுங்க. அப்படியே போயி யூனியன் செகரட்டரியைப் பாத்து, என்ன ஆச்சு கேளுங்க.?''

"ஆமாம். மணி சார்! நீங்க சொல்றது சரி. மணி 10 ஆயிடுச்சு. டிவிசன் ஆபீஸ். நான் போயீ எஸ்.பி, யூனியன் செகரட்டரி இரண்டு பேரையும் பாத்துட்டு 1 மணிக்குள் வந்துடுறேன்.

"நான் வேலை பார்க்கும் இடத்திலிருந்து 6 கிமீ தொலைவில் உள்ள இடம். 10 நிமிடத்தில் போய் விடலாம்.

என்னைப் பார்த்ததும் யூனியன் செகரட்டரி நழுவப் பார்த்தார். இருந்தாலும் அவரிடம் சேதி கேட்டபோது," ஆமாம் வாசு. நீ கேள்விப் பட்டது உண்மை தான். ஒன்னுடைய அப்ளிகேஷன் ரிஜெக்ட் பண்ணிட்டார். "

"சரி வாங்க எஸ். பி யை பார்க்கப் போவோம்....''

"எஸ் பி. கேம்ப் போயிருக்கார்னு கேள்விப்பட்டேன்.''

பக்கத்தில் இருந்த டிவிசன் ஆபீஸ் ஆபீஸ் சூப்பர்வைசர் " "சார் சாயந்தரம் வருவார். நீங்க ஈவினிங் வந்து பாருங்க...'"' என்றார் மனசு மிகவும் வலித்தது

மீண்டும் 5 மணிக்கு கிளம்பி டிவிசன்ஆபீஸ் போய் சேர்ந்த போது. செகரட்டரி மீண்டும் என்னை பார்த்துவிட்டு, எங்கேயோ நழுவிப் போக, நான் மட்டும் தனியாக ஸ்டெனோ விடம் பெர்மிஷன் கேட்ட பிறகு, அவர், "சார் பிஸி 5 நிமிடம் வெயிட் பண்ணுங்க...'' என்றார்.

5 நிமிடம் 50 நிமிடங்கள் ஆனது. இன்னும் என்னை கூப்பிடவில்லை.

மணி 6 .30 ஆகிவிட்டது. எஸ். பி கூப்பிடுகிறார் என்றவுடன், தயங்கி, என் விஷயம் பற்றி சொன்னபோது எஸ். பி சொன்ன செய்தி என்னை அதிர்ச்சி ஆக்கியது

”இதப் பாருங்க மிஸ்டர், திஸ் இஸ் ப்யூர்லி ஆன் மை ஓன் டிஸ்கிரிசன். நோ படி கேன் இன்டெர்பெயர்.

ஒங்க பி. எப், சி. ஆர் பாத்தேன். நீங்க 6 மாசத்துக்கு முன்னாடி சென்ஸ்யுர் வாங்கி இருக்கீங்க. அந்த பனிஷ்மென்ட் கரண்ட்ல வேறே இருக்கு. சோ யுவர் அப்ப்ளிகேஷன் ரிஜெக்டட்’’

நானும் சமீபத்தில் போஸ்டல் இன்ஸ்பெக்டர் எக்ஸாம் எழுதியிருந்ததால் தைரியமாக,

”சார்! சென்ஸூர் இஸ் நாட் எ பனிஷ்மென்ட். இட் இஸ் ஜஸ்ட் வார்னிங் தான். மேலும், சென்ஸூர் வாங்கி 6 மாசம் மேல ஆச்சு சார் என்றேன்.

”அப்ளிகேஷன்ல சொன்ன மாதிரி மாக்ஸிமம் 30வயசு சார். !அடுத்த சான்ஸ்க்கு வழி இல்லை சார் . ப்ளீஸ் கன்சிடர் பண்ணுங்க சார்.’’ என் குரலில் கெஞ்சல் இருந்தது.

ஆனால் என் கெஞ்சல் அவர் காதில் விழுந்த மாதிரி தெரியாமல் வேறு வேலையில் கவனம் செலுத்தினார்.

”நான் தானே சார் சீனியாரிட்டில முதல்ல இருக்கேன். என்னை ரிஜெக்ட் பண்ணிட்டு ஜூனியரை செலக்ட் பண்ணி இருக்கீங்க? இது நியாயமா படல சார்.?’’ என் குரலில் வேகம் தெரிந்தது இப்போது.

நான் இப்படி சொன்னதும், எஸ். பி க்கு கோபம் தலைக்கு ஏறியிருக்க வேண்டும்.

”மிஸ்டர் இங்க பாருங்க! நியாயமா அநியாயமா என்று சொல்ல நீ யாரு?

ஆர் யூ கிவ்விங் நியூ ரூல்ஸ், ரெகுலேஷன்ஸ். டூ மீ?

”ஒரு எஸ். பிக்கிட்ட இன் சப் ஆர் டி நேஷன் ஆக நடந்ததற்கு, ஒங்க மேல சார்ஜ் ஷீட் போட்டு, இரண்டு வருஷம் இன்க்ரிமென்ட் கட் பண்ண முடியும். கெட் அவுட் பிரம் மை சாம்பர். ’’

வாதங்கள் வார்த்தைகளாக வெடித்தன.

அதற்குள் சத்தம் கேட்டு என்னை வெளியில் அழைத்து வந்தார் ஸ்டெனோ. அவர் ரூம்க்கு அழைத்து போய் மெல்லிய குரலில்,

”விவரம் தெரியல வாசு உங்களுக்கு.!

செகரட்டரி சண்முகநாதன் தன் மச்சினனை லாஸ்ட் நிமிஷம், செலக்ட் பண்ண வச்சு, உங்களை ரிஜெக்ட் பண்ணியிருக்காரு ...

”ஏதோ நெக்ஸஸ் இரண்டு பேர் கிட்ட இருக்கு. இனி பேசி பிரயோசனமில்லை. நீங்க கிளம்புங்க...’’

டிவிஷன் ஆபீஸ் வெளியில், காதை நீட்டிக் கொண்டு, ஒட்டு கேட்டுக் கொண்டிருந்த சண்முகநாதன், ஒன்னும் தெரியாத மாதிரி என்னை விசாரித்த போது, எங்கிருந்து தான் எனக்கு ஆத்திரம் வந்ததோ தெரியலலை.

"தூ... தூ... நீ எல்லாம் ஒரு செகரட்டரி. உன் சுய நலத்துக்காக என்னை பலிக்கடா ஆக்கிட்டு எஸ். பி யை கையில போட்டுக்கிட்டு, ஒன்னுடைய மச்சினனை ட்ரைனிங் அனுப்ப எல்லா வேலையையும் செஞ்சு இருக்கே.

செகரட்டரின்னா, நியாயமா செயல்படணும். நீ அந்த யோக்கியதையை இழந்துடே....''

வீட்டுக்கு வந்து என் மனைவியிடம் சொன்ன போது, "நீதி நேர்மை ஒங்க டிபார்ட்மென்ட்ல இருக்கும்னு நினைச்சேன்.

ஒங்க டிபார்ட்மென்டும் விதி விலக்கு இல்லன்னு இப்போ.தெரிஞ்சு போச்சு...''

தோல்வியை சந்திச்ச, நீங்க மனம் தளராமா புத்தரின் கொள்கையான இதுவும் கடந்து போகும், "இதுவும் கடந்து போகும்னு சொல்லுங்க.

எத்தனையோ மனிதர்களை மாற்றிய உன்னத மான தேவ மந்திரம். இது.

கடவுள் எல்லாத்தையும் பாத்துகிட்டு இருக்காரு. அதையே நினைக்காம நிம்மதியா போய் தூங்குங்க...''

வாழ்க்கை சில சமயம் நாம் விரும்புவதை தருவதில்லை. காரணம் நீ அதற்கு தகுதியானவன் அல்ல என்று கடவுள் நினைத்து அதை விட சிறந்த ஒன்றுக்கு தகுதி யானவனாக இருக்கக்கூடும் நினைத்து இருக்கலாம்."

"கடவுளுக்கு தெரியும். எப்படி எந்தசூழ்நிலையில் வசதியையும் பணத்தையும் கொடுக்க வேண்டுமென்று.'

நாளைக்கு சண்டே, ஊருக்கு போயி அப்பா அம்மாவை பாத்துட்டு வாங்க. இங்கே நடந்ததை பத்தி ஏதும் பேசாதீங்க. வருத்தப்படு வாங்க.

சனிக்கிழமை வேலை முடிந்தவுடன் ஊருக்கு கிளம்பி போயிருந்தேன்.

ஏப்ரல் 1 ம் தேதி திங்கள் கிழமை மதியம் 11 மணி. ஆபீஸ் சூப்பர்வைசர் போனில் அழைத்தார்.

"கங்கிரா சி லேஷன்ஸ்' வாசுதேவன். ஆல் இந்தியா, போஸ்டல் இன்ஸ்பெக்டர் எக்ஸாம்ல, நீங்க ஆல் இந்தியா பர்ஸ்ட் ரேங்க்.

"இப்போ தான் பேக்ஸ் வந்தது. எஸ். பி சொல்லச் சொன்னார். தமிழ்நாட்டிலே 20 பேர் பாஸ் பண்ணி இருக்காங்க.'

"சார் நிஜமா சார்? இன்னிக்கு ஏப்ரல் 1 ம் தேதி ஏப்ரல் பூல் பண்ணலியே? தோழமை உணர்வில் கேட்டேன் சார். டோன்ட் மிஸ்டேக் மீ !''

"நோ... நோ... வாசுதேவன். இன்பாகட் சீப் போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் தனிப்பட்ட முறையில் ஒங்களுக்கு வாழ்த்துகள் சொல்லி இருக்கிற பேக்ஸ்ம் வந்து இருக்கு.

அடுத்த வாரமே நீங்க மைசூர் ட்ரைனிங் போக வேண்டி இருக்கும்.

'ஸ்பெஷல் மெசன்ஜர் மூலம் ஒங்க ரிசல்ட், சீப் பி. ம். ஜி க்ரீட்டிங்ஸ்,

ட்ரைனிங் ஆர்டர் எல்லாம் அனுப்பறேன். ஆல் தி பெஸ்ட் வாசுதேவன்.''

"சந்தோசமா இருக்கு சார். தேங்க்ஸ் சார்''

செய்தி கேட்டதும் ஆபீஸ் ஸ்டாப் எல்லோரும் வாழ்த்துகள் சொன்னார்கள்.

இரண்டு நாளாக வருத்தமாக இருந்த சுப்பிரமணி, சேதியை சொன்னதும்,

"ஒரு கதவு மூடினா என்ன சார்? இன்னொரு கதவு திறந்திடுச்சு. ஒங்க நேர்மைக்கும், அறிவுக்கும் ஆண்டவன் கொடுத்த பரிசு சார்.

ஒங்களுக்கு டெலிப்ரின்டர் ட்ரைனிங் கிடைக்கலையேன்னு. வருத்தப்பட்டேன். ஆனா இப்ப இரட்டை சந்தோசம் சார். ஆஃபீஸர் ஆயிட்டிங்க. இது போதும் சார்'' அவர் பேச்சு என்னை நெகிழ்ச்சி ஆக்கியது. வித்யா சொன்ன மாதிரி கடவுள் எனக்கு பெரிய வெகுமதி கொடுத்து இருக்கார்.

அதற்குள் டிவிஷன் முழுவதும், செய்தி பரவி எல்லோரும் வாழ்த்து தெரிவித்தார்கள்.

நான் மறுவாரம் மைசூர் கிளம்பி போகும் வரை, சண்முகநாதன் மட்டும் வாழ்த்து கூறவில்லை.

அக்கவுண்டன்ட் வந்து "சார் இந்த பைலை கொஞ்சம் பாருங்க சார்.அர்ஜெண்ட். ரீஜினல் ஆஃபீஸ்க்கு அனுப்பணும் என்று சொன்னதும் சகஜ நிலைக்கு வந்தேன்.

பைலை பாக்கும் போது அது சண்முகநாதன் பைல் ஆக இருந்தது.

ஏதோ ஒரு தவறு பண்ணி பண்ணி சார்ஜ் சீட்கொடுத்திருந்த பைலை எனக்கு முன் வேலை பார்த்த கண்காணிப்பாளர் கையெழுத்து போடாமல் திடீரென மாற்றல் ஆனதால் நான் பார்க்க நேர்ந்தது.

ஒரு வினாடி என் மனது ஏதாவது பனிஷ்மெண்ட் செய்ய வேண்டும், என்று எண்ணிய காரணம் அந்த அளவுக்கு குற்றத்தின் வீரியம் அதில் இருந்தது.

மறு கணம் யோசித்தேன்.

பிறகு எனக்கும் சண்முகநாதனுக்கும் என்ன வித்தியாசம்? பழி வாங்கும் எண்ணம் கூடாது. கீழ்கண்டவாறு நோட் போட்டேன்.

"தன்னுடைய அலட்சியத்தினாலும் கவனக்குறைவினாலும் இலாகாவிற்கு நஷ்டம் ஏற்படுத்திய சண்முகநாதன் செயலை மன்னித்து விடுகிறேன். ஒரு வாரத்தில் அவர் இலாகாவிற்கு கட்ட வேண்டியபணத்தை வட்டியுடன் கட்டிவிட வேண்டும் .அப்படி செய்தால்

அவர் மீது இலாகா நடவடிக்கை எடுப்பது தவிர்க்கப்படும் என்று பைலில் அறிவுறுத்தி பைலை திருப்பி அனுப்பினேன்.

# 8. அப்பா

மாவூர் போஸ்ட் ஆபீஸ் இன்ஸ்பெக்ஷன் ரெகார்ட்கள் குப்பையாக இருந்தது. கேஷ் சரி பார்த்து கரெக்ட் ஆக இருந்தவுடன், ஸார் சாப்பாடு ஏற்பாடு பண்ணட்டுமா?" என்று போஸ்ட் மாஸ்டர் கேட்டதும் எனக்கு கோபம் வந்தது.

"சாரி ஸார். இதற்கு முன் அப்படி பழக்கம்..." என்றார்.

இன்ஸ்பெக்ட் செய்யும் அதிகாரிகள் டெய்லி அலவன்ஸ் வாங்கினாலும் இப்படி அல்பமாக இருக்கிறார்கள்?

நாளைக்கு யூனியனுக்கும், அதிகாரிக்கும் ஒரு பிரச்சனை வந்துவிட்டால், யூனியன் செக்ரேட்டரி, சாப்பாடு விஷயத்தை, பெரிது பண்ணி, நோட்டீஸ் போர்டு, போஸ்டர் மூலம் தெரியப்படுத்தி அதிகாரி மானத்தை வாங்குவான்.

நல்ல வேளை நான், எப்போதும் கையில் ஒரு டிபன் பாக்ஸ். ஒரு காபி கூட குடிக்க மாட்டேன்.

வேலையில் மும்மரமாக இருந்த போது சார்ஜில் இருந்த செல் சிணுங்கவே எடுத்துப் பேசினேன்.

கும்பகோணதிலிருந்து வித்யா.

"ஏங்க ஸ்ரீரங்கத்தில் இருக்கிற ஒங்க அப்பா கிணத்துல விழுந்திட்டாராம். நிலைமை மோசமா இருக்காம். மன்னி தகவல். சொன்னார்.

"நீங்க உடனே கிளம்புங்க . எனக்கு பதட்டமா இருக்கு".

நீ ஸ்கூல் போயீ ரவி, ரம்யாவை அழைச்சிட்டு வந்துடு. ஹெச் எம் கிட்டே லீவு சொல்லிடு. . நானும் உடனே கிளம்பறேன்."

நாகப்பட்டிணத்தில் உள்ள என் மேல் அதிகாரிக்கு தகவல் கொடுத்துவிட்டு இரண்டு நாள் லீவு சொல்லிவிட்டு கும்பகோணம் கிளம்பி வருவதற்கு, மணி 3 ஆகிவிட்டது.

ஏற்கனவே வாங்கி வைத்து இருந்த பொருள்களை பையில் திணித்துக் கொண்டு, ரவியையும் ரம்யாவையும் கூட அழைத்துக் கொண்டு நானும் வித்யாவும் கிளம்பினோம்.

பஸ்ஸில் வரும் போதே அப்பாவுக்கு ஒன்னும் ஆகியிருக்க கூடாது.

மன்னார்குடி பெருமாள் ஸ்ரீ ராஜகோபாலனை வேண்டிக் கொண்டே வந்தேன்.

தொடர்ச்சியாக 25வருஷம் ஒவ்வொரு பங்குனி உத்சவத்தின் போதும் காத்தாலே இரவு 10கி.மீ திருப்ப்பாற்கடல மண்டபம் வரைக்கும் திவ்யபிரபந்த கோஷ்டி அத்யாபகர்களுடன்

பிரபந்தத்தை சேவித்து வந்தவர், ஒவ்வொரு நாளும் எங்களுக்கு பிரசாதம் கொண்டு வந்தவர்
.

“எப்படியாவது காப்பாத்து கோபாலா.”

ஸ்ரீரங்கம் பஸ் ஸ்டாண்ட் இறங்கியதும் கண்ணில் பட்டது மாலை முரசு தலைப்பு செய்தி போஸ்டர்.

ஸ்ரீரங்கம் ”85 அடி கிணற்றில் விழுந்து, பிழைத்த85வயது வாலிபர்’. சீரியஸ் விஷயத்திலும் ஒரு நகைச்சுவை.

நல்ல வேளை அப்பா பிழைத்துவிட்டார்.

”தேங்க்ஸ் கோபாலா’ ’ என்று மனதில் நினைத்துக் கொண்டு வேக வேகமாக, கீழ் உத்திர வீதியில் வீட்டை அடைந்தோம்.

”என்ன நடந்தது?’ ’ அண்ணாவிடம் விசாரித்தேன்.

அண்ணா வழக்கம்போல், வீட்டின் முன்பகுதியில் ஏதோ வேலையில் இருக்க, மன்னியும், கோபியும் டீ.வி சீரியல் பார்த்து கொண்டு இருக்கும் போது, 12 மணி அளவில் பாத்ரூம் போன அப்பா, பாத்ரூம் போய்விட்டு, கிணற்று மேடையில் 2 நிமிஷம் உக்காந்து இருந்தவர், பசி மயக்கம் காரணமாக, கீழே விழ, நல்ல வேளை, அந்த மயக்கத்தில் கூட, நிதானமா கிணற்றின் உள்பக்கம் கயிறை பிடிக்க, அது சர சரவென்று உள்ளே போக, கிணற்றில் தண்ணீர் முழங்கால் அளவிற்கு இருந்ததால், “ராஜம் ராஜம், கோபி கோபி” கூப்பிட பக்கத்தில் உள்ளவர்கள் உதவி செய்ய உயிர் தப்பித்தார். ஆசுவாசப்படுத்தி, லோக்கல் டாக்டரை கூட்டி வந்து, ஏதோ இன்ஜெக்ஷன் போட்டு விட்டு போய் இருக்கிறார்.

நான் போய் பார்த்த போது கொஞ்சம் மயக்கமாக தான் இருந்தார். கயிறை பிடித்து இறங்கியதால் கையில் சில இடங்களில் சிராய்ப்பு, கொஞ்ச நேரம்கழித்து, கண்விழித்த போது, என்னை அடையாளம் கண்ட போது “குழந்தை மாதிரி” எனக்கு என்ன வாங்கிண்டு வந்தே?

”ரவி ரம்யா சௌக்கியமா? ஒன் ஆம்படையா வித்யா சௌக்கியமா?’ ’ என் கண்களில் நீர் தாரை தாரையாக கொட்டியது.

எப்பேர்ப்பட்ட மனுஷன்? இந்த சூழ்நிலையிலும் தன் உடம்பை விட பிறரை பற்றி விசாரிக்கிறார்?

உனக்கு ஹார்லிக்ஸ் சால்ட் பிஸ்கட் வாங்கிண்டு வந்திருக்கேன். டீஷர்ட் வேஷ்டி வாங்கியிருக்கேன். பிஸ்கட் இரண்டு கொடுத்தேன்.

”தாத்தா தாத்தா என்ன ஆச்சு தாத்தா?’ ’

ரவியும் ரம்யாவும், தாத்தா பக்கத்துல, உக்காந்து கேட்க, பொக்கை வாய் மூலம் சிரித்தார்.

என்னை பொறுத்தவரை அப்பாவும் ஒரு குழந்தையாக தெரிந்தார்.

இரவு அப்பாவுக்கு, இரண்டு இட்லி, ஊட்டி விட்டு, என் சாப்பாடு முடிந்த பிறகு, மீண்டும் அப்பாவுக்கு, சுகர் மாத்திரை ஹார்லிக்ஸ் கொடுத்து திரும்பிய போது, அண்ணா கூப்பிட்டார்.

நீ அப்பாவை ஒரு மாசம் வைச்சுண்டு பாத்துக்கோ. இங்க மன்னியும் பேஷன்டு. கவனிக்க முடியாது.''

”அண்ணா நீ சொந்த வீடு பிரச்சனை இல்லை. நான் வாடகை வீடு. ஒரே ஒரு ரூம் மட்டும் தான். ஹவுஸ் ஓனர் கொஞ்சம் முசுடு.''

இரண்டாவது, சின்ன சின்ன குழந்தைகள், குளிப்பாட்டி, டிரஸ் போட்டு ஸ்கூல் அனுப்பவே சிரமம்.

எல்லோரும் ஒரே ரூமில் எப்படி அப்பாவையும் கவனிக்க முடியும்?''

ஸ்ரீரங்கத்தில் அண்ணாவின் வீடும் அகலம் 15அடி நீளம் 1200 அடி பெரிய வீடு. தனியாக நடைப்பயிற்சி பார்க்கில் நடக்க வேண்டாம். இந்த வீட்டு வாசலில் இருந்து கொல்லை புறம் வரைக்கும் ஒரு நாளைக்கு நிறைய தடவை நடந்தால்இளைச்சுடலாம் .

மன்னி பேச்சைக் கேட்டுத் தான், அண்ணா இப்படி பேசுகிறார் என்பது எனக்கு தெரியாமல் இல்லை.

”வர்ற திங்கள் முதல் 15நாள் லீவு போட்டு நான் கவனிச்சுக்கிறேன்.

வித்யா, குழந்தைகளை கும்பகோணம் அனுப்பிவிடுகிறேன். படிப்பு கெடும்.

அப்பா நார்மல் ஆன பிறகு அழைச்சுண்டு போறேன்...''

ஞாயிறு மதியம் வரை வித்யாவே எல்லா வேலைகளையும் செய்தாள்.

4மணிக்கு, வித்யா குழந்தைகளை, பஸ் ஏத்தி விட்டு திரும்பினேன்.

ஞாயிறு இரவு 8மணி. திடீர்னு அப்பாவுக்கு தூக்கி தூக்கிபோட்டது. ஜுரம் வேறு. இனி தாமதிப்பதில் பிரயோஜனம் இல்லை, என்று பிரைவேட் ஹாஸ்பிடலில் நானும் அண்ணாவும் சேர்த்து விட்டோம்.

“அப்பா ஏதாச்சும் சாப்பிடக் கேட்டா கேன்டீன் பக்கம் போயீ வாங்கிக் கொடு.”பிளாஸ்க் இருக்கா? நான் காலையில் வரேன்.''

இரவு முழுவதும் கண்கொட்டாமல் விழித்து கொண்டு இருந்தேன். ட்ரிப் ஏறிக் கொண்டு இருந்தது. தூக்கம் வர மறுத்தது நர்ஸை கூப்பிட்டு ட்ரிப் மாத்தச் சொன்னேன்.. அப்பா 85 வயது. இப்பவும் நாலு உத்திரவீதியில் சைக்கிள்ல போறார்.

ஏன் அப்பாவிற்கு இப்படிப்பட்ட நிலைமை? எவ்வளவு தியாகம் செஞ்சு இருப்பார்?

ஆரம்பக் காலத்தில் தன் தம்பியை, எஸ். எஸ். எல். சி படிக்க வைத்து, டீச்சர் ட்ரைனிங் அனுப்பி, வேலை வாங்கி கொடுத்தவர். அவரிடம் கை மாத்தா வாங்கின, ரூபாய் 500/க்கு

விடுதலை பத்திரம், எழுதி கொடுத்து, தனக்கு உண்டான வீட்டு பங்கை, விட்டு கொடுத்தாரே அதனாலயா?

சொந்தக்காரங்க ஆத்தில், சிரார்த்தம் பண்ணி வையுங்கோ, என்று கேக்கும் போது, வாத்தியார் ஸ்வாமியாகவும், பித்ருஸ்வாமியாகவும் இருந்து, ரூபாய் 1 மட்டும் வாங்கி எவ்வளவு பேருக்கு உதவி செஞ்சு இருக்கார் அதனாலயா?

அனாதையாகயிருந்த ஷட்டகர் பெண்ணுக்கும் கல்யாணம் முடித்து வைத்தாரே அந்த நல்ல செயலுக்கா ?

முகம் சுளிக்காம, வலிப்பு நோய் வந்து இருந்த அக்கா ராஜியை, ஒவ்வொரு முறையும், வலிப்பு வந்து நின்ன பிறகு, அவள் துணி மணிகளை மாத்தி,மாத்திரை கொடுத்து, ஆசுவாசபடுத்தி வைப்பாரே. அவள் இறக்கும் வரை அந்த சேவையை தொடர்ந்து செய்தாரே அதனாலயா?

ஒவ்வொரு நாளும் விஷ்ணு ஸஹர்சன நாமம் மட்டுமே ஜெபிக்கும் இவருக்கா இந்த நிலைமை?

கடவுள் ஏன் கல்லானார் மனம் கல்லாய் போன மனிதர்களாலே?

ஆனால் அப்பாவுக்கு, இது பொருந்தாதே? நைச்ய குணமும், பிறர் பால் இரங்கும் மனமும், பணிவு, தன்னடக்கம். அடியேன் என்ற வார்த்தைக்கு உண்மையா இருந்த மனுஷனுக்கு இப்படி பட்ட நிலைமையா?

சாவு இயற்கையா இருக்கலாம். ஆனால் ரணம் பட வேண்டுமா?

பின் ஏன் கடவுள் இவருக்கு சோதனை கொடுக்கிறார்? விடை தெரியாத வினாவாக தெரிந்தது என்க்கு!

வேலை கிடைத்து, முதல் மாதம் சம்பள கவர் கொடுத்து சேவித்த பின், நீ இப்படியே போஸ்ட் ஆபீஸ் கிளெர்க் ஆகவோ, போஸ்ட் மாஸ்டர் ஆகவோ இருக்கக் கூடாது.

“டிபார்ட்மெண்ட் பரிட்சை எழுதி ஆஃபீஸர் ஆகணும்னு வாழ்த்திய கையோடு, வா பந்தலடி உடுப்பி ஹோட்டல் அழிச்சிண்டு போ. நான் குலாப் ஜாமுன் சாப்பிட்டதே இல்லை”.

குழந்தை மாதிரி கெஞ்சினார். உடனே வாங்கிக் கொடுத்தேன்.

அவர் ஆசிர்வாதம் அடுத்த 5வது வருஷம் போஸ்டல் இன்ஸ்பெக்டர் பரிட்சையில் பாஸாகி, அடுத்த 3 வருடம் ஆச்சு இப்போ அஸிஸ்டண்ட் சூப்பரின்ட்டெண்ட்.

ஒரு முறை ரவியின் பர்த்டே பார்ட்டிக்கு, சூப்பரின்டென்டை அழைத்து இருந்தேன். ”இவர் மாதிரி நீயும் டிபார்ட்மெண்ட் ஜீப்பில் வரணும்’’ என்றார்.

வந்த அதிகாரி அப்பாவிடம், ”வாசு செம இன்டெலிஜெண்ட் சீக்கிரம் அவர் எஸ். பியாக வருவார். ஜீப்பில் வருவார். நீங்க பாக்கத்தான் போறீங்க!’’

அப்பா பெருமிதமாக என்னை பார்த்தார்.

இரண்டு நாள் ஆச்சு அப்பா நிலைமை. கொஞ்சம் பெட்டராக தெரிந்தது.

"அவருக்கு ஹாஸ்பிடல் மருந்து வாசனை பிடிக்கல டாக்டர்".

"இன்னிக்கு டிஸ்சார்ஜ் பண்ணிடலாம்.''

வீட்டுக்கு வந்து ஒரு வாரம் நன்றாகத் தான் காணப்பட்டார். பிளட் பிரஷர், சுகர் நார்மல். வாய்க்கு ருசியா கேட்டதெல்லாம் நானே செஞ்சு ஊட்டி விட்டேன்.

முதல் வாரம் நன்றாக இருந்தவருக்கு மறுவாரம் பிரச்சனை ஆரம்பம் ஆனது. "எனக்கு கட்டில் வேண்டாம் தரையில் பாய் போடு...'' பிடிவாதம் பண்ணினார்.

படுக்கையில் இருக்கும் போது, தட்டா மாலை நாலு பக்கமும் சுற்றி, சுற்றி ஏகப்பட்ட பிதற்றல். 1960, 70களில் நடந்த நிகழ்ச்சியை பற்றிப் பேசினார்.

களப்பாள் கிராமத்தில் முதலியாரிடம் வேலை பார்த்த போது, கூலி தகராறு ஏற்பட்டு, கலவரம் ஆன போதுதான், முதலியாருக்கு தெரியாம வயல்கள் ஊடே மறைந்து மறைந்து பெருக வாழந்தான் போய் மலபார் போலீஸ் கூட்டி வந்து நிலைமையை சமாளித்த விதம் அதுக்கு முதலியார் "அய்யங்கார் ஒங்க சமயோசித புத்தியை பாராட்டாமல் இருக்க முடியாது' என்று சொல்லிட்டு கூடுதல் சம்பளமும் கொடுத்தது பற்றி சொல்ல, அப்பா நீங்கள் தான் ரியல் ஹீரோ என்று சொன்னதும் சந்தோசம் தாங்கவில்லை. அந்த காலத்தில் ஒரு தனி மனிதனாக போராடி விவசாயிகளுக்கும் நியாயமான கூலி வாங்கிக் கொடுத்து இரு சாராரிடமும் நல்ல பேர்.

பெருமாள் என்னை கூப்பிடுகிறார் என்பார். மறு வினாடி ரம்யா கல்யாணத்தை பாத்துட்டுதான் சாவேன் என்பார்.

"நான் ரொம்ப நாளைக்கு இருக்க மாட்டேன்.

ஆமாம். இன்னிக்கு என்ன திதி?''

"சப்தமி திதி"

விரல் விட்டு எண்ணிக் கொண்டார்..

"வாசு நான் சொன்னதை நிறைவேற்று வாயா?''

அப்பா என்ன சொல்ல வருகிறார் என்பது எனக்கு தெரியும்.

"நிச்சயமா அப்பா''

அடுத்த இரண்டு மூணு நாளும் அப்பாவின் மரண அவஸ்தையை பார்க்க என்னால் முடிய வில்லை.

சாப்பாடு ஊட்டி, குளிப்பாட்டி டிரஸ் மாத்தி, ஒவ்வொரு முறையும் பெட் பான் மாத்தி என் கண்களில் கண்ணீர்.

நினைவு போவதும் வருவதுமாக இருந்தது. பேச்சு அதிகமா இல்லை. நாம் பேசுவது புரிந்ததா? தெரியல!

மதியம் 12 மணி மன்னியிடம், சாப்பாடு ஊட்டணும் ரெடியாச்சா? என்று கேட்டுக் கொண்டு இருந்த போது.

"சித்தப்பா உனக்கு ஸ்பீட் போஸ்ட் வந்து இருக்காம். போஸ்ட் மேன் கூப்பிடறார்.''

வாசலில் போஸ்ட்மேனிடம், கவர் வாங்கி படித்த போது, என் முகம் பிரகாசம் ஆனதைக் கண்டு கோபி, "என்ன சித்தப்பா?'' என்று கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல் கொல்லை பக்கம் அப்பாவிடம் ஓடினேன்.

"அப்பா அப்பா ! நீ எதிர் பார்த்த விஷயம் நடந்துருக்கு... நான் எஸ்.பி எக்ஸாம் பாஸ் பண்ணிட்டேன்''

அடுத்த வாரம் கும்பகோணம் டிவிஷன் ஆபீஸில எஸ்.பி போஸ்டிங் ஜீப் உண்டு.

அப்பா காதுல வாங்கினாரா? "அப்பா அப்பா" என்று உடம்பை அசைக்க, மார்ல காது வைச்சு பாக்கிறேன். மூச்சு நின்று போய் இருந்தது.

"ஐயோ அப்பா, ஐயோ அப்பா நீ ஆசைபட்ட சேதி கேக்காம போயிட்டாயே. அழுது, அழுது கண்களில் நீர் வற்றி போனது.

"காலண்டர்ல திதியை பார்க்கிறேன்''.

ஏகாதசி.

ஸ்ரீரங்கம் என்னும் பூலோக வைகுண்டத்தில் உடலை நீத்தவன் மீண்டும் பிறப்பதில்லை என்கிறார் ஆதி சங்கரர்.

அவர் செய்த நல்ல காரியங்களுக்கு, இதை விட பாக்கியம் அவருக்கு வேறு என்னவாக இருக்க முடியும்?

# 9. கொஞ்சம் கல்வி நிறைய காசு

அந்நிய ஆங்கில மொழியில், பாடங்கள் சொல்லி கொடுப்பதால், நமது குழந்தைகளுக்கு மூளை சலவை,அளவுக்கு மீறியநிர்பந்தம், ஏற்படுகிறது. எல்லாவற்றையும் மனப்பாடம் செய்பவர்களாகவும் சுயமாக சிந்திக்கவோ தகுதியற்றவர்களாகவும் சொந்தநாட்டிலேயே அயலார் போல் ஆகின்றனர்.

தேச பிதா காந்தி “ய ங் இந்தியா” இதழ் 1921

அந்த கிராமத்தின் பள்ளிக்கூடத்திலிருந்து, வீடு திரும்பிய, தலைமை ஆசிரியர் மகாலிங்கம், வீட்டில் தன் பேரன் இல்லாமல் போகவே, மன சஞ்சலம் அடைந்தார்.

“தாத்தா ! தாத்தா!! என்று ஓடி வந்து மடியில் ஒக்காந்து,”எனக்கு இன்னிக்கு என்ன சாப்பிட வாங்கி வந்தீங்க?” என்று கேட்கும் பேரன், இல்லாமல் போனால், மன சஞ்சலம் ஆகத் தானே செய்யும்.

தன் சஞ்சலத்துக்கு பதில் சொல்வது போல்,கையில் கொண்டுவந்த காபி யை கொடுத்த ராஜம், ”அதை ஏன் கேக்குறீங்க? நீங்க ஸ்கூல் போன கையோடு, மாலதி அண்ணன் கிட்டே இருந்து போன் வந்தது.

பேரன் பாலுவை டவுன்ல ஆங்கில வழிக் கல்வி முறையில் சேக்க போறாங்களாம்..”

“நம்ம கதிரேசு மருமக இரண்டு பேரும், பாலுவை கூட்டிட்டு போயிருக்காங்க!”

”ஏன் நம்ம ஊர் பள்ளிக்கூடம் இல்லையா ?’ ’

”என்னக் கேட்டா .? நம்ம கதிரேசுக்கு, படிப்பு ஏறலன்னு சொல்லி, விவசாயம் பாக்க வைச்சு, அவனுக்கு ஒங்க தங்கச்சி பொண்ணு மாலதியையும் கட்டி வைச்சுட்டிங்க’

ஆனா மாலதி, தன் புருஷன் மாதிரி, தன் பையன் முட்டாளாக இருக்கக் கூடாதுன்னு நினைச்சு, பெரிய ஸ்கூல்ல சேக்க பிரியப்படுது.

நல்லது, கெட்டது, நியாயம் அநியாயம்,அலசி பார்க்க தெரியாது. முயற்சிக்கவும் மாட்டாள். நினைத்த காரியத்தை சாதிச்சு காட்டணும்ன்னு நினைக்கிற பிடிவாதம்”.

35 வருடமாக ஆசிரியர் பணியில், இருக்கும் மகாலிங்கம், கடந்த 3வருடமாக, தலைமை ஆசிரியராக, தன் சொந்த கிராமத்து பள்ளிக்கூடத்தில், பெற்றோர் ஆசிரியர் கழகத்துடன் நல் உறவை ஏற்படுத்தி கொண்டு, தன் பள்ளிக்கூடத்துக்கு தேவையான, எல்லா வசதிகளையும் செய்து வந்துள்ளார். நல்லாசிரியர் விருதும் பெற்றவர்.

அப்பேர்பட்ட, பள்ளியில் தன் பேரன் படிக்காமல், 10 கி. மீ தள்ளி உள்ள, நகரத்து பள்ளி ஒன்றில், ஆங்கில கல்வி முறைக்கு, மாலதி ஏற்பாடு செய்து இருப்பது, அவரு மன வருதத்தை கொடுத்திருந்தது.

தன் பையன் கதிரேசுக்கு மரியாதை கிடையாது என்று தெரியும்.அவனுக்கு இதில் இஷ்டம் இருந்திருக்காது என்றும் தெரியும்.

மறுநாள் மிகவும் உற்சாகமாக மாலதி, “மாமா… பாலுவுக்கு அட்மிஷன் கிடைச்சுடுச்சு”

ஆனா, அவங்க கேட்ட கேள்வி இருக்கே… அப்பப்பா யார் டிகிரி படிச்சு இருக்கீங்க? யார் டியூஷன் நடத்துவீங்க ?

எல்லாத்துக்கும் நான் தான்னு சொல்லி, என் டிகிரி சர்ட்டிபிகேட்டே காமிச்ச பிறகு தான், அட்மிஷன் கொடுத்தாங்க.

1ம் வகுப்பிலிருந்து பிளஸ் 2 வரைக்கும்.தரமான கல்வி கிடைக்கும். எங்களுக்கு பெரிய கவலைவிட்டது”. பெருமையாக சொல்லி முடித்தாள் மாலதி.

”என்ன மாலதி? பாலுவை நம்ம பள்ளிக்கூடத்தில் படிக்கவைக்காம, தினமும் காலை 10கிமீ அனுப்பி சோர்வாகி, பாடமும் புரியாம, சாயந்திரம் டியூசன் அது இதுன்னு சொல்லி, இரவு 7 மணிக்கு திரும்பவும் 10 கி மீ வந்து,சாப்பிடாம அப்படியே தூங்கி போவான்.

அந்த பிஞ்சு உடம்பு என்னத்துக்கு ஆகும் ?

யோசிச்சுப் பாத்தீங்களா? நீயும் கதிரேசும் ?’ ’

”மாமா நீங்க இப்படி கேட்பீங்கன்னு தெரியும். நாங்க ஏன் பாலுவை வேன்ல அனுப்பனும்?

அண்ணன் கிட்ட சொல்லி ஒரு வீடு பாக்கச் சொல்லியிருக்கேன் . எங்களுக்கு பாலு படிப்பு தான் முக்கியம்.’ ’

“ஏண்டா கதிரேசா! பாலுவை விட்டுட்டு நாங்க எப்படிடா இருக்க முடியும்?”

கதிரேசன் ஏதோ சொல்ல, வாய் எடுத்தபோது, அவனை தன் கண்களால் சுட்டெரிப்பது போல மாலதி பார்க்கவும்’ கதிரேசு ஏதும் பேசாமல் நழுவி போனான்.

அடுத்த இரண்டு நாள் வீடு அமைதியாக காணப்பட்டது.

அன்று ஞாயிற்றுக்கிழமை ஆட்டோவில் இறங்கினார் மாலதியின் அப்பா மூர்த்தி.

”மாலதி, மாலதி… குரலில் கடுமை தெரிய கூப்பிட்டு வந்தவர்,மாலதி வந்ததும்,

”என்ன நினைச்சுக்கிட்டு இருக்கே நீ?

நடந்த விஷயத்தை உன் அண்ணன் சேகர் சொன்னதும் உன் மேல் கோபம் வந்துச்சு?

”என்னப்பா சொல்றீங்க? ஒங்க மாப்பிள்ளைதான் படிக்கலே, பாலுவாவது. நல்ல ஸ்கூல்ல படிச்சு, நல்ல அறிவும், ஆங்கில புலமையும், புகழும் சம்பதிக்கணும்ன்னு ஆசை அதான் இந்த முடிவு எடுத்தேன்’.

“நாங்க எல்லாம் தமிழ் வழியில்தானே படிச்சோம்”

நல்லா தானே இருக்கோம்.

“அப்பா! ஒங்க காலம் வேறே. இன்னிக்கு நம் நாடு இருக்கிற நிலைமையில் ஆங்கிலம் தெரிய வேண்டாமா? ஆங்கிலம் தெரியாமாப் போனால், அறிவற்றவர்களாகி போய் விட மாட்டோமா?அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சி எப்படி சாத்தியமாகும்?”

“மாலதி,மொழிக்கல்வி வேறு; மொழி வழி கல்வி வேறு; ஆங்கிலம் கற்க வேண்டாம்ன்னு சொல்லலே. ஆங்கிலத்தை தவிர, மற்ற பாடங்களை, தமிழ் மொழியில் கற்றால்தான் எளிமையாக புரியும்.”

”நாங்க படிச்ச காலத்துல ஆங்கிலமே ஐந்தாம் வகுப்பு முதல்தான் ஆரம்பம்’!

அன்றைய அரசு அவ்வாறு நடைமுறைப்படுத்தியதுக்கு காரணமே, இரண்டாவது மொழி ஆங்கிலம், கற்கும் முன், தனது தாய்மொழியில், நல்ல பயிற்சி இருக்க வேண்டும் என்பதற்காகதான்!!

”மேலும் இயற்கையாகவே தனது தாய்மொழியை, இலக்கண பிழையின்றி பேசும் குழந்தைகள்,

பத்து வயதுக்குப் பின், இரண்டாவது மொழியை, கற்றுக் கொண்டால் தான் நன்கு புரியும்.”

”நீ சொல்லிக்கிட்டு இருக்கியே, ஆங்கிலம் கத்துகிட்டாத் தான் நாம் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியில், வெற்றி பெறுவோம்னு; அது சுத்த ஹம்பக், ஜப்பான், ஜெர்மனி, சீனா போன்ற நாடுகளில் ஆங்கில வழி கல்வி கிடையாது .அவர்கள் தாய் மொழியில் தான் எல்லாமே…’’

தன் பங்குக்கு மகாலிங்கம் சொல்லவும்,

“மாமா அந்த நாடுகள் ஒரு மொழி கொள்கையை பாலோ பண்றாங்கா ! இந்தியாவில அப்படி இல்லையே?”

இன்றைய கல்வியென்பது இரண்டு கட்டத்திற்குள் தான் நிற்கின்றது.

“விற்கதயாராக இருப்பவர்கள். அதை வாங்கத் தகுதியிருப்பவர்கள்”.

நீ சொல்லும் சிறப்பான கல்வி என்பதற்கு என்ன வரையறை தெரியுமா?.

பள்ளியின் பெயர் பிரபலமாக இருக்க வேண்டும். பள்ளியில் தமிழைத் தவிர மற்ற அத்தனை மொழிகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் அப்படித்தானே?”

“அதை நினைச்சு தா னே அந்த ஸ்கூல்ல அட்மிஷன் வாங்கியிருக்கே?” மூர்த்தி இப்படி சொன்னதும்,

”ஆமாம்பா ! அதில் என்ன தப்பு? பக்கத்து வீட்டு முரளி அந்த ஸ்கூலில்,படிச்சுட்டு வரத் தினாலே, என்னம்மா இங்கிலீஷ் பேசறான். மம்மி, மம்மி, டாடி, டாடின்னு சொல்றது எவ்வளவு அழகா இருக்கு’’.

”நீ சொல்ற முரளியை நானும் கவனிச்சேன். தாய் பால் ஊட்டி வளர்த்த அம்மாவை, மம்மிமம்மின்னு சொல்றான். மம்மின்னா என்ன அர்த்தம் தெரியுமா?

எகிப்து நாட்டின் பிரமிடுகள் இடையே பதப்படுத்தப்பட்ட புதைந்த பிணங்களின் பெயர் தான் மம்மி.

”ஒன்னை மாதிரி அம்மாக்கள் எல்லாம், பதப்படுத்தப்பட்ட புதையுண்ட பிணங்களா?’’

மூர்த்தி இப்படி சொன்னதும் எல்லோரும் சிரிக்க மாலதி கோபமானாள்.

அந்த இறுக்கமான சூழ்நிலையை மாற்ற எண்ணிய மகாலிங்கம்,

”நீ சொல்ற ஸ்கூல்ல சிறப்பான கல்வி என்பது அறிவின் அடிப்படையில் அல்ல. மாலதி அதிகமான மதிப்பெண்கள் வாங்குவது அல்லது வாங்க வைக்க உதவும் ஸ்கூல்.அதான் இவ்வளவு மரியாதை’’.

”மூர்த்தி இன்னொரு விஷயம் தெரியுமா?’’

“இது மாதிரி ஸ்கூல்ல, எந்த குழந்தையாவது தமிழ்மொழியில் பேசினால், கையில் பிரம்பு அடி கொடுப்பது; அல்லது வேறு விதமான தண்டனை கொடுப்பது; ஆங்கிலம் படிச்சாத் தான் வாழ்க்கையில் முன்னேற முடியும்னு, குழந்தைகிட்ட மட்டுமல்ல, பெற்றோர்களையும் மூளை சலவை பண்ணும் ஸ்கூல் எப்படி நல்ல ஸ்கூலாக இருக்கும்?”

”ப்ராஜெக்ட் என்று தினமும் எதையாவது சொல்லி,அவர்கள் கூகுளை அலசி,சார்டில் ஒரு பூ தொட்டி பூ செடியை பெற்றோர்களே வரைந்து கொடுத்து, அதை கொடுத்தால் அந்த குழந்தையால் அந்த உணர்வை உணர முடியுமா?’

நேரடியாக ஒரு தொட்டியில் அல்லது மண்ணில் செடி நடச் சொல்லி, தினமும் தண்ணீர் பாய்ச்சி அதில் மொட்டு விடுவதை பார்ப்பது தான் உண்மையான கல்வி.

கேள்வி, பதில் என்பது தேடுதலில் இருந்தே தொடங்கப் படவேண்டும். ஆனால் இங்கே பதில் என்பது வாங்கும் மதிப்பெண்களுக்காக என்கிற ரீதியில் மாற்றப்பட்ட பிறகு அறிவு கூர்மை குறித்துக் கவலைப்படுபவர் யார்? சொல்லு மூர்த்தி?

”சரியா சொன்னிங்க மச்சான் !’’

”இந்த கல்விக்காகத் தான் தங்கள் தகுதிக்கு மீறி, தரமில்லாத பள்ளியில் சேர்த்து, கையோடு காலையும் சுட்டுக் கொண்டு தடுமாறிக் கொண்டு வருகிறார்கள்..’

”வருடந்தோறும் கல்வி வியாபாரிகள் வளர்ந்து கொண்டே தான் இருக்காங்க.’’

இருபது வருடத்திற்கு முன்னால், ஒரு சிறிய ஓட்டு வீட்டுக்குள் தொடங்கிய கல்விக்கூடங்கள், இன்று பல ஏக்கர் பரப்பளவில், பெரிய நிறுவனமாக வளர்ந்து,வருடந்தோறும் கோடிகளை அள்ளி குவிக்க முடிகிறது என்றால், இதற்கு காரணம் உன்னை மாதிரி பெற்றோர்கள் தான்”.

"ஒவ்வொருவரும்,தங்கள் குழந்தைகள், நல்ல சம்பளம் வரக்கூடிய வேலையில், தான் அமர வேண்டும், என்று நினைக்கின்றார்களே தவிர மறந்தும் கூட, ஒரு குறிப்பிட்ட தொழில் சார்ந்த விசயத்தில், ஈடுபட்டு மேலே வரவேண்டும் என்று நினைப்பதில்லை.''

வாதங்கள் கடுமையான வார்த்தைகளாக,வெடிக்கும் சூழ்நிலையை கண்ட ராஜம், "எல்லோரும் சாப்பிட வாங்க. நேரமாயிடுச்சு; இவ்வளவு தூரம், அப்பாவும், மாமாவும் எடுத்து சொல்லியிருக்கீங்க; மாலதிக்கு,கொஞ்சம் டயம் கொடுங்க; யோசிக்கட்டும்."

"கதிரேசு போய் வாழை இலை நறுக்கிட்டு வா; மாலதி எல்லோருக்கும் பரிமாறு' சாப்பிட்டு கொண்டு இருக்கும் போதே டிவியில் ஒரு செய்தி ஓடியது.

ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா மனித உரிமை கவுன்சில் பொதுக் கூட்டத்தில் பேச, மதுரை அரசு பள்ளியில், தாய் மொழி தமிழ் வழி மொழியில் பயின்ற மாணவி அழைக்கபட்டுள்ளார்.

தமிழ் பயின்றால் ஐ.நா வே அழைக்கும் என்பதற்கு இந்த மாணவி ஒரு சிறந்த உதாரணம். செய்தி வாசிப்பாளர் வாசித்து முடித்ததும்,

எல்லோரும் கை தட்டி, சந்தோஷத்தை வெளிப்படுத்தினார்கள் . மாலதியை தவிர.

........................................

எல்லோரும் தூங்க போயிருந்தாலும், மாலதிக்கு தூக்கம் வராமல், அங்கும் இங்கும் நடந்து கொண்டு இருந்தாள்.

அப்பாவின் பேச்சும், மாமாவின் பேச்சும், நியாயமான ஒன் றாய் காணப்பட்டாலும், முடிவு எடுக்க சிரமப்பட்டாள்.

நல்லாசிரியர் விருது பெற்ற மாமாவின் பள்ளிக்கூடத்துக்கு, எவ்வளவு நல்ல பெயர்.

வகுப்பில் சேரும் எல்லா மாணவருக்கும், தரமான கல்வி கொடுத்ததும், தேர்வில் தோல்வி அடையக் கூடாது, எப்படி கற்று கொடுத்தால் புரியும், என்பதை உணர்ந்து, அந்த முறையை கையாண்ட விதமும். தனி டியூசன் என்ற பேச்சுக்கு இடம் கொடுக்காமல், ஒரு மாறுதலுக்காக, எல்லா பாடங்களையும் நாடகமாக நடித்து, ஆடி பாடி கற்பித்தது வகுப்புகள் எல்லாவற்றையும் கலகலபாக்கி, பாடம் நடத்தியது நினைவுக்கு வந்தது .

இதை தவிர்த்து இன்றைய சூழ்நிலையில், உடற்பயிற்சி சுகாதாரம், சுற்றுப்புற சூழல் தொழில் கல்வி, ஒழுக்கமான நடவடிக்கை போன்றவற்றை சொல்லி கொடுத்து சிறந்த பள்ளியாக மாற்ற வில்லையா? எல்லாமே இலவசமாக வேறு.

தமிழ் நாட்டில் தமிழ் படிக்க வேண்டும் என்று கட்டாயம் இல்லை. எது எத்தைகைய அவமானம் ? வெக்க கேடு ?

ஆனால் நானோ பீஸ் நோட் புக்ஸ் இந்தி டியூசன் யூனிபார்ம் டொனேஷன் அது இது என்று ஒரு லட்சம் ஒரு வருடத்துக்கே செலவு செய்தால் ?

மறுநாள் காலை என்னை “மன்னிச்சுடங்க அப்பா!” மாமா நீங்களும் தான்”.

“ஒரே இரவில் என் முடிவை மாத்திகிட்டேன்னு சொன்னா, உங்களுக்கு ஆச்சர்யமாக தான் இருக்கும்.”

”சில முடிவுகள் பிளாஷ் மாதிரி தான்.

டிவியில் மதுரை அரசு பள்ளியில் தமிழ் படித்து ஐ. நா சபை வரைக்கும் செல்லும் மாணவி, உங்க,இரண்டு பேருடைய நியாயமான வாதங்கள் இரண்டும்தான் என் முடிவை மாத்தி விட்டது”.

“நீ புத்திசாலி பொண்ணும்மா!! .எங்கே தமிழ் ஆசிரியர் குடும்பத்தில் வாக்கப்பட்டு, அவர் எண்ணத்துக்கு மாறாக நட ந்து விடுவயோ? என்று பயந்தேன்.”

”நீ மாறியது சந்தோசம். நிறைய பெற்றோர்கள் ஆங்கில கல்வி கட்டண கல்வி முறையில் இருந்து மாற வேண்டும்.

கட்டண கல்வி கூடங்கள் தவிர்த்து, எளிமையான தமிழ் வழி மொழி பள்ளிக்கூடத்தை, தேர்வு செய்ய, இனி ஒரு விதி செய்வோம், என்று சபதம் எடுத்தால் நம் நாடு நிச்சயமாக முன்னேறும்”.

மாலதி தலையாட்ட குது கலமானது அந்தக் குடும்பம்.

# 10. வேலை

பிரபலமான அந்தக் கட்டிடத்தின், ஏழாவது மாடியில் உள்ள, அந்த சாப்ட்வேர் கம்பெனியின் ரிசப்ஷன் ஹால். ஹெச். ஆரின் நேர்முகத் தேர்வுக்கு, காத்திருந்தான் செந்தில்.

அவனை போலவே, நிறைய பேர்கள், காத்து இருந்தனர். வந்து இருந்தவர்கள் எல்லோரும், தன்னை விட வயது குறைந்தவர்களாக, காணப்பட்டார்கள்.

செந்தில் மனதில், இவர்கள் எல்லோரும் ஸ்மார்ட் ஆகவும், பேசும் ஆங்கிலத்தை பார்த்தப் பின்பு தனக்கு இந்த வேலை கிடைக்குமா? என்று தேவையில்லாத மனக் கவலை அவன் மனதை வாட்டியது.

இருந்தாலும் தன்னுடைய குவாலிஃபிகேன் அனுபவம் பார்த்து, வேலை கிடைக்கலாம், என்று உள் மனது சொல்லியது. ஆனாலும் தன் ப்ரொபைல் பார்க்கும் போது, அதில் உள்ள கேப் பற்றி, தான் சொல்லியிருந்தாலும், ஹெச். ஆரும், கம்பெனி எம். டி யும், கன்சிடர் பண்ண வேண்டுமே? என்ற கவலையும் மனதை அரித்தது.

இது வரை நிறைய கம்பெனிகள் ஏறி இறங்கியாச்சு. எல்லோரும் ப்ரொபைல் பார்த்த பிறகு, சொல்லும் ஒரே டயலாக்.

"இங்கே பாருங்க செந்தில், யூ ஹாவ் ஓவர் குவாலிஃபிகேஷன். எங்க கம்பெனிக்கு செட் ஆகாது.''

இன்னும் சில இடங்களில், "ஒங்க ப்ரொபைல் பார்க்கும் போது எம்பிளாய்மென்ட் கேப் நிறைய இருக்கு.''

"வி வாண்ட் ஒன்லி பெர்சன்ஸ் வித்தவுட் எனி கேப் சாரி.''

இன்னும் சில கம்பெனிகளில், "ப்ரொபைல் நல்லா இருக்கு. இப்பவே உங்க வயசு அதிகமா இருக்கு. உங்களை எப்படி மத்த கேண்டிடேட்டுகளுடன், ஒர்க் பண்ண வைப்பது? இது எம்ப்ரசிங்கா எங்களுக்கு இருக்கும் ஸோ ஸாரி.''

இன்னும் சில இடத்தில், "நீங்க யூ. எஸ் இல் எம். எஸ் . இந்த கம்பெனிக்கு அப்ளை பண்ணி இருக்கிங்க. இங்க சரியா வராது. இதை விட பெட்டர் கம்பெனி ட்ரை பண்ணுங்க…''

வேலை கொடுக்க வேண்டாம், என்று நினைப்பவர்கள், எப்படி எல்லாம், புதுப்புது காரணம், சொல்கிறார்கள் என்று நினைத்து கொண்டான் செந்தில்.

சில இடங்களில், தன்னை விட தகுதி குறைந்தவர்கள், அரசியல் செல்வாக்கு, பெரிய மனிதர்கள் சிபாரிசு, மூலம், வேலையில் சேர்ந்து இருக்கும் போது, தன் அப்பா மீது கோபம் வரும். அவனுடைய அம்மா, கூட ஒங்க பழைய நண்பரின் எம் டி மூலம் சிபாரிசு பண்ணச்

சொல்லி, எதாவது வேலை வாங்கித் தரக் கூடாதா? என்று பலமுறை வாதம் பண்ணியது உண்டு.

”சிபாரிசு என்கிற வார்த்தை தனக்கு பிடிக்காது. அவன் தன் சொந்த காலில் நின்னு, ஜெயிக்க பழகிக் கொள்ளணுமே தவிர, பிறர் மூலமா வேலைக்கு முயற்சிக்கக் கூடாது.’’ என்று அப்பா வாதிப்பார்.

ஊர் உலகத்துல, இப்படித் தானே நடக்குது” என்று அம்மா வாதிட்ட போது கூட அப்பா தன் கொள்கையில் உறுதியாக இருந்தார்.

இனி அப்பாவிடம் இது பற்றி பேச வேண்டாம், என்று அம்மாவிடம், சொல்லியிருந்தாலும், அவ்வப்போது தன்னைப் பற்றிய கவலையினால், அம்மா அப்பாவிடம் சண்டை போடுவார்.

அப்படி சண்டை போடும் போதெல்லாம், தான் சமாதானம் பண்ணி வைப்பது, வாடிக்கையாகிப் போனது, செந்திலுக்கு.

நன்றாக போய்க் கொண்டிருந்த தன் வாழ்க்கையில், அந்த சம்பவம் மட்டும் நடக்காமல் இருந்தால், தானும் அயல் நாட்டில், கை நிறைய சம்பளம், வசதியான வாழ்க்கை, என இருந்திருக்கலாம். ஆனால் விதி யாரை விட்டது?

அஞ்சு வருடம் முன்பு, நடந்தவை மனதில் நிழல் ஆடியது.

அயல் நாட்டில் எம். எஸ் முடித்த கையோடு வேலையில் அமர்ந்தவன் தான் செந்தில். தன் அறிவை இன்னும் மேம்படுத்திக் கொள்ள சாப்ட்வேரில் உள்ள லேட்டஸ்ட் டெக்னாலஜி படிப்பையும் தொடர்ந்து கற்றுக் கொண்டு இருந்தான்.

வேலை, அதோடு டெக்னிக்கல் படிப்பு, மிகவும் கடினமான சூழ்நிலையில், முடித்த போது அவன் அடைந்த சந்தோசம், அடுத்த மாதமே, நொறுங்கிப் போகும் அளவிற்கு ஆகும், என்று நினைக்க வில்லை.

அப்பாவிடமிருந்து வந்த செய்தி. அம்மாவிற்கு இடது கை கால் முடக்கு வாதம் வந்து, சீரியஸ் கண்டிஷனில் இருப்பதாகவும், தன்னை உடனே பார்க்க வேண்டும் என்று பிரியப்படுவதாகவும், உடனே கிளம்பி வரச் சொல்லியிருந்தார்.

அலுவலகத்தில், அம்மாவின் சீரியஸ் கண்டிஷன் பற்றி, சொல்லி முதலில் லீவு எடுத்துக் கொண்டு வந்தவன், திரும்பி போக முடியாத சூழ்நிலை வந்தவுடன், வேலையை ராஜினாமா பண்ணுவதாக, மெயில் கொடுத்து இருந்தான்.

ஒரே மகனான, செந்தில் அன்று வந்தவன் தான், அம்மாவை கவனிக்கும் முழு பொறுப்பையும் தானே, ஏற்று கொண்டான். அம்மாவுக்கு, மருந்து மாத்திரைகள், வேளா வேளைக்கு கொடுப்பது, காலையில் காபியிலிருந்து, இரவு டிபன் வரை கொடுத்து, அம்மாவை தூங்க வைப்பது வரை, ஒரு செவிலி தாய் கவனிப்பது போல், முகம் சுளிக்காமல் பார்த்து கொண்டவன் தான் செந்தில்.

ஆச்சு, ஒரு வருடம் ஆச்சு. அங்கே இங்கே நகராமல், அம்மாவை கவனித்து, அம்மா ஓரளவுக்கு குணமாக, தான் வேலை தேடி இன்டெர்வியூ அட்டென்ட் பண்ணலாம், அப்பா அம்மாவை பாத்துப்பாரு, என்று நினைத்த செந்திலுக்கு,

அடுத்த அடி அப்பா, கீழே விழுந்து, காலை உடைத்து கொண்டது தான்.

அவருக்கு மூட்டு வலி ஆபரேஷன் செய்ய, தினமும் ஹாஸ்பிடல் போய், கவனித்துக் கொண்டது போன்ற வற்றால், அவனுக்கு ஒரு வித சலிப்பு வந்தது உண்மைதான் .

இன்பங்கள் ஜோடியாக வருவதில்லை துன்பமோ தனித்து வருவதில்லை என்கிற பழமொழி எப்போவோ படித்தது அவன் நினைவுக்கு வந்தது.

அப்பாவோ ஆரம்பப் பள்ளி ஆசிரியர். ஓய்விற்கு பிறகு, கிடைத்த பென்ஷன், பணமும் சொற்ப அளவு தான்.

தன் சம்பாத்தியம் மூலம் கட்டிய இந்த மச்சு வீடு தான் இப்போதைக்கு மிச்சம் .

அந்நிய நாட்டில் தான் சம்பாதித்து அப்பாவின் கடனை அடைத்தது போக, இந்த வீடு கட்டியது போக, கொஞ்சம் தான் பணம் மீதி இருந்தது. அதுவும் அம்மாவின் மருத்துவச் செலவுக்கும், அப்பாவின் மருத்துவச் செலவிற்கும் கரைந்து விட்டது.

இனி இந்த சூழ்நிலையில், மறுபடியும் அந்நிய நாட்டுக்கு போய், வேலை பார்ப்பது சிரமம் என்பதோடு, வயதான பெற்றோர்களை தனியாக விட்டு விட்டுப் போக இஷ்டம் இல்லாததால், இங்கேயே சரியான வேலை தேட, தான் முயற்சி செய்தும் கிடைக்காமல் போக, எந்த வேலை கிடைக்கும் என்று யோசித்து, தன் படிப்புக்கு தகுந்த வேலை, கிடைக்க்கும் வரை, சின்ன சின்ன வேலைகள் செய்து வந்தான் செந்தில்.

அம்மாவின் உடம்பும், அப்பாவின் உடம்பும் கொஞ்சம் குணமான பிறகு, தான் படித்த புரொபஸர் மூலம், அவர் சிபாரிசு மூலம் ஒரு பொறியியல் கல்லூரியில் விரிவுரையாளர் போஸ்ட் கிடைத்து.

தன் அறிவினாலும், தன் அணுகுமுறையினாலும் வகுப்பில் உள்ள 56.மாணவர்கள் ஒவொருவர் மீதும் சிறப்பு கவனம் செலுத்தி, வகுப்பில் உள்ள 56 பேரையும் பாஸ் பண்ண வைத்தவனை, ஹெச். ஓ. டி பொறாமை கொண்டு, மேனேஜ்மென்ட்டில் ஏடா கூடமாக சொல்லி, வேலையை விட்டு கிளப்பி விட்டார்.

என்ன உலகம் இது? காழ்ப்பு உணர்ச்சி யை காண்பித்து, பிறர் முன்னேறுவதை தடுக்கும் உலகம், என்பதை அப்போது தான் புரிந்து கொண்டான் செந்தில்.

குடும்பத்தையும், பெற்றோர்கள் இருவரையும் கவனிக்க அவன் தன் படிப்பு தகுதிக்கு, குறைவான வேலை கிடைத்த போதெல்லாம், செய்ய தவறவில்லை.

இருந்தாலும் நேரம் கிடைக்கும் போதெல்லாம், சாப்ட்வேர் தொழிலில் லேட்டஸ்ட் ட்ரெண்ட்டான ஆர்டிபிசியல் இன்டெலிஜென்ஸ், பிளாக் டவுன், சைபர் செக்யூரிட்டி

டெக்னாலஜி, பைத்தான், கிளவுட் கம்ப்யூட்டிங் போன்றவற்றை கற்றுக் கொண்டு, சாப்ட்வேர் செர்டிபிகேஷன் கையில் வைத்து இருந்தான்.

சாப்ட்வேர் தொழில் தவிர்த்து, வேறு எதிலும், அவன் கவனம் செலுத்த விரும்ப வில்லை. அதில் உள்ள ஆர்வம், அவனை இன்னும் மேம்பட வைத்தது.

அம்மாவுக்கு விடாது தொடர்ந்து கொடுத்த பிசியோ தெரபி மூலமும், அம்மா, அப்பாவின் பிரார்த்தனையும், அப்பா மறுபடியும் நடக்க ஆரம்பித்ததும், அம்மாவை பழைய நிலைக்கு கொண்டு வந்த, செந்திலுக்கு இப்போது புது தெம்பு வந்து இருந்தது.

இந்த 5 வருடம், எம்பிளாய்மென்ட் கேப் என்பது, அவன் ப்ரொபைலில் ஒரு கரும்புள்ளி என்று நினைத்தான். ஆனாலும் ஏன் அந்த கேப் ஏற்பட்டது, என்று ஒவ்வொரு இன்டெர்வியூலும் கேட்டு விட்டு, ரிஜெக்ட் செய்தார்களே தவிர, அவன் விளக்கத்தை எந்த கம்பெனியும் கேக்க விரும்பவில்லை.

வாழ்க்கை இனி எப்படி போகும்? திரும்பவும் தான் பழையபடி வேலைக்குப் போய் சம்பாதிக்க முடியுமா?

இப்படிப் பட்ட சூழ்நிலையில் மிகவும் பிரபலமான இந்த சாப்ட்வேர் கம்பெனிக்கு ப்ரொபைல் அனுப்பி இருந்தான்.

இன்டெர்வியூக்கு கூப்பிடப்பட்டு இதோ ஹெச். ஆர் இன்டெர்வியூக்கு காத்து இருக்கிறான். இந்த இன்டெர்வியூவிலும் செலக்ஷன் ஆகாது போனால்.?

நம்பிக்கை இழக்க வேண்டாம். லேட்டஸ்ட் டெக்னாலஜி தான் கற்றுக் கொண்டது, வீண் போகாது. அதை வைத்து கிளாஸ் எடுப்போம். வீட்டில் ட்யூசன் எடுக்கலாம் என்று மனதில் எண்ண அலைகள் வந்து போனது.

”மிஸ்டர் செந்தில் ஹெச். ஆர் காலிங் யூ.’’

ரிசப்ஷனிஸ்ட் கூப்பிட்டதும், சகஜ நிலைக்கு திரும்பி உள்ளே போனான்.

ஹெச்.ஆர் சதிஷ் பார்க்க ஸ்மார்ட் ஆக இருந்தான்.

”வெல் செந்தில் ப்ளீஸ் பீ சீட்டெட். ஒங்க ப்ரொபைல் இன்டெரெஸ்ட்டிங் ஆக இருக்கு. டெக்னிகல் நாலெட்ஜ் இருக்கு.’’

எல்லா ரவுண்ட்ஸ் இன்டெர்வியூ கிளியர் பண்ணிய செந்திலை பாராட்டிய ஹெச். ஆர் எம்பிளாய்மென்ட் கேப் பற்றி பேசவே,

“போச்சு. போச்சு. இனி அவ்வளவு தான்”

”பெட்டர் லக் நெக்ஸ்ட் டைம். ஸோ ஸாரி யூ கேன் கோ’’ என்று சொல்லி தன்னை அனுப்பி விடுவார்கள். என்று நினைத்தான்.

ஆனால் தான் சிறிதும் எதிர் பார்க்கவில்லை. ஹெச். ஆர் சதிஷ் மிகவும் கனிவான

முறையில், தன்னிடம் விளக்கம் கேட்பார் என்று நடந்தவற்றை சொன்னதும் ஹெச். ஆர் மனது இரக்கபட்டு இருக்க வேண்டும்.

“ஒரு 10 நிமிடம் வெயிட் பண்ணுங்க.”

உள்ளே கம்பெனி எம். டி சேம்பேரில், அவரிடம் சதிஷ் பேசிக்கொண்டு இருந்ததை, கண்ணாடி வழியாக பார்க்க நேர்ந்தது செந்திலுக்கு, இருவரும் ஏதோ வாக்குவாதம் செய்வது போல் தென்பட்டது.

10 நிமிஷம் கழித்து வெளியே வந்தான் சதிஷ்..

”என்ன சம்பளம் எதிர்பார்க்கிறீங்க?’ ’ செந்தில்.

இப்படி ஹெச்.ஆர் கேட்டதும் செந்திலுக்கு தான் காதில் கேட்டதை நம்ப முடியவில்லை.

”சார் ! என்ன கேட்டிங்க?’ ’

”ரிலாக்ஸ் செந்தில். டூ யூ ஹாவ் எனி கொஸ்டின்ஸ் டு ஆஸ்க் மீ?’ ’

அதற்குள் சதிஷ் முந்திக் கொண்டு பேச ஆரம்பித்தான்.

”நீங்க என்ன சொல்ல வரிங்கன்னு எனக்குத் தெரியும். செந்தில் யாரும் விருப்பப்பட்டு எம்பிளாய்மென்ட் கேப், தன் கேரியரில் இருப்பதை விரும்ப மாட்டார்கள். ஆனால் அப்படி ஒருவருக்கு நடந்துள்ளது என்றால், அந்த தவிர்க்க முடியாத காரணம், என்ன என்பதை பார்க்க வேண்டும்.

உங்களுக்கு உள்ள திறமை நாளைக்கு மாறுமா? எதுவும் மாறாது. இன்னும் சொல்லப் போனால், உங்கள் அறிவும், திறமையும், இன்னும் அதிகரிக்கும்.

நான் நினைப்பது இது தான், நீங்கள் எம்பிளாய்மென்ட் கேப்க்கு, சொல்லி இருக்கும் காரணம், எனக்கு நியாயமா படும்போது, நான் ஏன் திரும்ப ஞாபகப்படுத்தி, உங்கள் வேதனையை, அதிக படுத்த வேண்டும்?

உங்க ப்ரொபைலில் எம்பிளாய்மென்ட் கேப்க்கு, சரியான விளக்கமும், ஆதாரங்களும், காமிச்சு இருக்கீங்க. உங்க விளக்கத்தை ஜஸ்டிபை பண்ணி இருக்கீங்க. அதில் உள்ள உங்க நேர்மை எனக்கு தெரிஞ்சது.

நீங்க மட்டுமல்ல, பேரோ ஆப் லேபர் ஸ்டாட்டிஸ்டிக்ஸ்படி, மெஜாரிட்டி ஓர்க்கர்ஸ் இன்னும் சொல்லப் போனால், 90 சதவீதம் எம்பிளாய்மென்ட் கேப் இல், இருக்காங்கன்னு சொல்லுது.

ஒருவருடைய டாலேண்ட்டை நிர்ணயம் பண்ணுவது, அவனுடைய அறிவும், புத்திசாலித்தனமும் தானே தவிர, எம்பிளாய்மென்ட் கேப் கிடையாது.

எங்க எம். டி கூட ஒங்க எம்பிளாய்மென்ட் கேப்பை சுட்டிக் காட்டி ரிஜெக்ட் பண்ணச் சொன்னார்.

இது மாதிரியான சூழ்நிலை தனக்கு வந்துள்ளது என்று நீங்க கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை.

நான் தான் ஒங்க லேட்டஸ்ட் டெக்னிக்கல் ஸ்கில் பற்றி, அவர்கிட்ட விளக்கமாக சொன்னேன். கடைசியில், அவர் ஓ.கே சொல்லிட்டாரு...''

செந்திலுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. உணர்ச்சி பூர்வமாக.

"சார்! நான் இது வரைக்கும் போய் வந்த இன்டெர்வியூ எல்லாவற்றிலும், என் திறமையை பார்க்காமல்,எம்பிளாய்மென்ட் கேப் ஒன்றை மட்டும் சுட்டிக் காட்டி, என்னை ரிஜெக்ட் செய்தார்கள்.

விரக்தியின் எல்லைக்கு, சில சமயம் போயி இருக்கிறேன். மன உளைச்சல் அடைஞ்சிருக்கேன்,

ஆனால் நீங்க மட்டும் தான், ஒரு மனிதன், தன்னுடைய அன்பான அணுகுமுறை மூலம் , தன் பதவியில், பிறருக்கு நல்லது செய்ய முடியும், என்று காமிச்சிட்டீங்க.

தேங்க்ஸ் சார். . எனக்கு வார்த்தை வரல சார் இது ஒரு மாதிரி யான எமோஷனல் இன்டெலிஜென்ஸ் சார்...''

"ரிலாக்ஸ் செந்தில். கடைசி வரைக்கும் ஒங்க பேக்கேஜ் பத்தி சொல்லவே இல்லையே? நான் அப்பாய்ன்மெண்ட் ஆர்டர் கொடுக்க வேண்டாமா?'' என்று சதிஷ் சொல்லியதும்,

செந்தில் முகத்தில் சந்தோசம் மிளிர இருவருக்கும் இடையில் சிரிப்பு அலைகள் மிதந்தன.

அதே சமயம் இதே மாதிரி சூழ்நிலை தனக்கு வந்து, தான் சிரமப்பட்டதும், இனி இது மாதிரி சூழ்நிலையை அனுபவித்தவர்களுக்கு, தான் உதவி செய்வது தான் தனக்கு ஆத்மதிருப்தி என்று நினைத்துக் கொண்டு சேம்பேர் விட்டு வெளியே வந்தான் சதிஷ்.

## 11. வீழ்வேன் என்று நினைத்தாயோ ?

வாசு வந்து,அந்த செய்தியை சொன்னதும், அக்ரஹார மக்கள் கூட்டம் கூட ஆரம்பித்திருந்தது.

”என்னது சோமு கனபாடிகள் போயிட்டாரா?’’

”ஆமாம்,இன்னிக்கு காலையில் அம்மா, காபியும் டிபனும், கொடுத்துட்டு வரச் சொன்னா, நான் போய் அவரை கூப்பிட்டு பார்த்த போது, குரல் ஏதும் வரல.

என்கிட்டே ஒரு சாவி இருக்கிறதால, திறந்து உள்ளே போய் பார்த்த பிறகு தான், தெரிஞ்சுது பாத்ரூம்ல மயக்கமாகி பிராணனை விட்டு இருக்கார்.

நாலு நாள் முன்பு ஜுரம்ன்னு சொன்னார். டவுன்ல தனியார் ஆஸ்பத்திரிக்கு, நான் தான் அழைச்சிட்டு போனேன்.

டெஸ்ட் எடுத்தப் பிறகு டாக்டர் இவருக்கு கொரோனா பாசிட்டிவ். வீட்டிலேயே 10 நாள் தன்னை தனிமைப்படுத்திக் கொண்டால் போதும். பயப்படும்படி இல்லை.

நான் கொடுத்துள்ள மாத்திரைகளை மூன்று வேளையும் ஒரு வாரத்துக்கு சாப்பிடுங்க. இரண்டு மணிக்கு ஒரு தடவை ஜுரம்,ஆக்ஸிஜன் செக் பண்ணுங்க. ஏதாவது பிரச்சினை வந்தா அட்மிட் பண்ணிக்கலாம். இவர் சீக்கிரம் குணமாயிடுவார். இவர் சொல்லிக் கொடுத்த வேதம் நிச்சயம் காப்பாத்தும்னு வாழ்த்தி அனுப்பினர் .

நான்ஆக்ஸிமீட்டர்,தெர்மோ மீட்டர் இரண்டையும் வாங்கி கொடுத்துட்டு வந்தேன்.

நேத்தி ராத்திரி 3மணிக்கு மேல் ஆக்ஸிஜன் 90க்கு கீழ் காமிச்சு இருக்கிறதை நோட் பண்ணி இருக்கார். என்னை கூப்பிட்டு இருக்கார். நாலஞ்சு மிஸ்ட் கால் இருக்கு. தூக்கத்தில் நான் கவனிக்க மறந்துட்டேன். இப்பதான் பார்த்தேன்.

”ஆமாம்... ஆமாம்... மனுஷன் எவ்வளவு கம்பீரமா வாழ்ந்தவர்...’’ என்றார் கிச்சாமி.

”10 வருஷம் முன்பு ஒரே பையன் பாரதியை வீட்டை விட்டு விரட்டினது போறாதுன்னு என் பையன் செத்துட்டான் என்று சொல்லி தலை மூழ்கினவர் ஆச்சே’’ நக்கலா சொன்னார் சாம்பு சாஸ்திரிகள் .

”ஆத்துகாரி, பிள்ளை போன சோகத்திலே இவருக்கும் தன் கம்பீர நடை, குரல், செயல் எல்லாம் தளர்ந்து போய் மனுஷன் இப்போ போயிட்டார்.’’ பாலு குருக்கள் புலம்பினார்.

தன் வீட்டிலிருந்து வெளியே வந்த பெரிய பண்ணை,கோயில் தர்மகர்த்தா ராஜாமணி இதையெல்லாம் கேட்டபிறகு,

”எல்லாம் சரி. இப்போ இவர் கொரோனாவினால் செத்து போயிருக்கார். யார் இவரை சுடு காட்டுக்கு எடுத்துட்டுப் போவாங்க? யாரு மத்த காரியம் செய்யப் போறா?’’

"சொந்தக்காரங்க யாரும் கிடையாது. இப்போ பாரதி இருக்கானோ இல்லை... செத்துட்டானோ?''

இப்படி ராஜாமணி மாமா சொன்னதும் கோபமான வாசு,

"ஏன் மாமா ?பாரதி மனசை புண் படுத்தி, சோமு மாமா மூளையை குழப்பி, பாரதியை ஊரை விட்டு அனுப்பியது நீங்க மட்டுமல்ல, மொத்த அக்ரஹார ஜனங்களும் சேர்ந்துதான்..''

"என்ன வாய் அதிகம் நீளுது. அவனை ஊரை விட்டு அனுப்ப நீயும் ஒரு காரணம்னு எனக்கு தெரியாதா?

ஒங்க அப்பா செத்த பிறகு இப்போ நீ பாத்துக்கிட்டு இருக்கிற கோயில் பூஜை 'நான் போட்ட பிச்சை தெரிஞ்சுக்கோ.?"

வாசு அடங்கிப் போனான்.

"சரி சரி. போய் குளிச்சுட்டு கோயிலை மூடிட்டு வா

"பாலு குருக்கள் நீங்களும் போய் கோயில் நடையை சாத்திட்டு வாங்க, அடுத்த கட்டம் பத்தி யோசனை பண்ணுவோம்...

இருபது வருடங்கள் முன்பு...

சோமு கனபாடிகள், மனைவி மீனாக்ஷி, 7 வயது பையன் பாரதியோடு அந்த கிராமத்தின் வேத பாடசாலைக்கு வாத்தியார் வேலைக்கு வந்த போது சாட்சாத் அந்த சுந்தரேஸ்வரர், மீனாக்ஷி வந்ததாக ஊரே கொண்டாடியது.

பருத்த, உயரமான சரீரம். கணீர் குரல், கம்பீரமான பேச்சு. கண்டிப்பு இவையெல்லாம் சேர்ந்து பாடசாலையை நல்ல நிலைக்கு உயர்த்தியது. கிராமத்துக்கு காலடி வைத்த நாள் முதல் பாரதிக்கு,வாசுதான் எல்லாமே. வாசு வீட்டுக்கு இவன் போய் படிப்பதும், விளையாடுவதும், அதே மாதிரி பாரதி வீட்டுக்கு வாசு வருவதும் தொடர்ந்தது. பாரதிக்கு அது சந்தோஷத்தை கொடுத்தது.

நீண்டநாள் கழித்து மீனாட்சியின் சொந்த ஊரான எட்டயபுரத்தில் குழந்தை பிறந்ததால் பாரதி என்று பெயரிட்டு அவன் மேல் பாசத்தை கொட்டினார்கள் சோமு தம்பதியினர்.

வாசுவும், பாரதியும் வேத பாடசாலையில் மற்ற மாணவர்களுடன் சேர்ந்து 8 வருடம் கற்றுக்கொண்ட வேத விஷயங்கள் ஒரு பண்டிதன் அளவிற்கு இருவரையும் தயார் செய்தது. படிப்பிலும் இரண்டு பேரும் புலி.

நன்றாக போய் கொண்டு இருந்த சோமு கனபாடிகள் குடும்பத்தில் பாரதியின் விபரீத நடவடிக்கை மூலம் புயல் வீச ஆரம்பித்தது.

கொஞ்சம் கொஞ்சமாக பாரதியின் நடை, உடை, செயல் எல்லாமே, ஒரு பெண் எப்படி தன்னை அலங்கரித்து கொள்வாளோ அப்படி மாறி இருந்தது.

ஒரு நாள் மீனாட்சி, இதை கவனித்தபோது தனக்கு ஏற்பட்ட இந்த பாலின மாற்றத்தையும், தான் படும் அவஸ்தையையும் ஹார்மோன். பிரச்சனையையும் அவளிடம் சொல்லி அழுது வருத்தப்பட்டு உள்ளான் பாரதி.

இன்னொரு நாள் வாசுவை கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்ததை பார்த்த மீனாட்சிக்கு பயம் தொற்றிக் கொண்டது.

“கருவேப்பிலை மாதிரி ஒரே குழந்தை அதுவும் இப்படி அலி மாதிரியா? ஈஸ்வரா என்ன சோதனை?”

ஒரு நாள் சோமு கணபாடிகள் தானே நேரில் வாசுவிடம் பாரதி நடந்த விஷயத்தை பார்த்த பிறகு கோபத்தின் உச்சிக்கே போய்,

“என்னை தலை குனிய வைச்சுட்டே.என் கம்பீரம், செல்வாக்கு, கிடைச்ச பேரு எல்லாத்தையும் குழி தோண்டி புதைச்ச நீ இனி இங்கு இருக்கக் கூடாது.”

”எங்கேயோ தொலை. இல்லாட்டி ஆறு, குளம், ரயில்வே தண்டவாளம் இதில் போய் செத்து போ. என் கண்ணிலே படாதே…’’

“அப்பா நான் என்னப்பா செய்வேன்… திடீர்னு வந்த பாலியல் மாற்றத்துக்கு நான் என்னப்பா செய்ய முடியும்? நான் இங்கேயே வீட்டு மூலையில் இருக்கேன்ப்பா. உங்களை விட்டு நான் எங்கே போவேன்?” கெஞ்சினான். கதறினான்…

மொத்த அக்ரஹார ஜனங்களும், குறிப்பா ராஜாமணியும். சாம்பு சாஸ்திரிகளும் இவனால் நம்ம ஊர் பசங்க பேர் கெட்டுப் போயிடும்.

சாக இஷ்டமில்லன்னு நினைச்சா, வெளியூர்ல இருக்கிற அரவாணி கூட்டத்துலே சேர்ந்துக்கோ என்று நக்கல், ஏளனத்துடன் சொன்னது மட்டுமல்லாமல்

“கனபாடிகளே… ஒன்னு ஒங்க பையனை விரட்டி அடிங்கோ. இல்லாட்டி நீர் ஊரை காலி பண்ணி வெளியூர் போயிடுங்கோ. ராஜாமணி கண்டிப்புடன் சொன்னதும் அடுத்த வேளை ஜீவனத்துக்கு இந்த ஊரை விட்டு எங்கே போவது.உடம்பு வேறு தள்ளாமையா இருக்கு”

மீனாட்சி கதறிய போதும் 17 வயது பாரதியை விரட்டி விட்டு ,ஊர் மக்கள் முன்னிலையில் தன் தலையில் தண்ணீர் ஊற்றிக் கொண்டு, என் பையன் இறந்துட்டான்னு சொன்ன பிறகு தான், கூட்டம் கலைந்து சென்றது.

பாரதி போன சோகத்தில் அவனை நினைத்து, நினைத்து ஒரு நாள் உயிரை விட்டாள் மீனாட்சி. 10 வருடம் எந்த தொடர்பு இல்லாது இருந்த பாரதியை இரண்டு வருடங்களுக்கு முன்பு சென்னைக்கு ஏதோ வேலையாக போயிருந்த வாசு, எதிர்பாராமல் சந்திக்கும் சூழ்நிலை ஏற்பட்டது.

பாரதி அம்மா இறந்து போனது. தன் அப்பா திடீரென இறந்தது அதனால் கோயில் பூஜையை செய்யும் சூழ்நிலைக்கு தள்ளப்பட்டது, எல்லாவற்றையும் வாசு சொன்ன போது

மனம் கலங்கி அழுத பாரதியை, தேற்றினான் வாசு.

அன்று முதல் அவர்கள் நட்பு போனில் யாருக்கும் தெரியாமல் தொடர்ந்தது.

இனி தாமதிக்கக் கூடாது. பாரதிக்கு தகவல் கொடுத்து ஆகணும்.

வாசு குளிக்க குளம் போகும் வழியில் பாரதியை மொபைலில் கூப்பிட்டான்.

"பாரதி! ஒங்க அப்பா கொரோனாவுல செத்துப் போயிட்டாரு.! ஒங்க அப்பா முகத்தை பார்க்கணும்னு எவ்வளவு நாள் என்கிட்ட சொல்லி இருப்பே.... இப்ப எல்லாம் முடிஞ்சு போயுடுத்து. ஒங்க அப்பாவை வைச்சு இங்கே ஒரே பிரச்சினை.''

விஷயத்தை கேட்ட வாசு, "நான் வர எப்படியும் 4 மணி நேரமாவது ஆகும். எப்படியோ சமாளி. நான் உடனே கிளம்பறேன்.''

யோசிச்சு பார்த்தேன். நம்ம யாரும் போய் பார்க்கவும் முடியாது. கொரோனா நமக்கு வந்துடும் என்று ராஜாமணி சொல்ல..

"ஆமாம்... ஆமாம்... அனாதை பிணம்னு சொல்லி, ஆஸ்பத்திரிக்கு தகவல் சொல்லிடுங்கோ. அவா வந்து மத்த காரியங்களை செஞ்சுப்பா.'' விஷயம் தெரிந்த மாதிரி, சாம்பு சாஸ்திரிகள் சொல்ல,

"ஒய் சாம்பு... விஷயம் தெரிஞ்ச மாதிரி உளராதீர். முள்ளங்கி பத்தையா 25000 பணம் வேணும். இப்ப கொரோனாவினால் செத்து போனவாளா அடக்கம் செய்ய கொள்ளை அடிக்கிறங்கா. நான் விசாரிச்சுட்டேன். வேன், பிணத்துக்கு ட்ரெஸ்ஸிங், அவா போட்டுக்கிட்டு வரும் சேப்டி உடை, அடக்க செலவு எல்லாம் சேர்த்து கட்டினாதான் வருவாங்க".

அக்ராஹார ஜனங்கள் பணம் கொடுங்கோ. நான் கொஞ்சம் போட்டு ஏற்பாடு செஞ்சுடலாம்'' என்று சொன்ன உடனே அவரவர்கள் வீட்டின் உள்ளே சென்று கதவை தாழிட்டு கொண்டார்கள்.

வேதம் கத்துக் கொடுத்தவருக்கு அக்ரஹார மக்கள் கொடுக்கும் மரியாதையை எண்ணி வருத்தப்பட்டான் வாசு..

மொபைல் சிணுங்கியது.

"ஊர் எல்லையில் இருக்கேன் இன்னும் 5 நிமிடத்தில் வரேன்'' என்று குறுந்செய்தி வந்திருந்தது.

அடுத்த ஐந்தாவது நிமிடம் சொகுசு கார், வேன் அதிலிருந்து 3 பேர் இறங்கினார்கள்.

காரிலிருந்து இறங்கிய பாரதி,நேரே வாசுவிடம் வந்ததை கண்ட எல்லோருக்கும் ஆச்சரியம் .

"நான் தான் பாரதி.எங்க அப்பாவுக்கு காரியம் செய்யப் போறேன்.'

"நீ செத்துட்டேன்னு ஒங்க அப்பா ஒன்னை தலை மூழ்கிய மனுஷனுக்கு நீ

அதுவும் ஒரு பொண்ணா உருமாறி அரவாணியா எப்படி காரியம் செய்ய முடியும்? இந்து சாஸ்திரம் சம்பிரதாயம் இதை ஒத்துக்காது.

ஆம்பளை சட்டையை கழற்றி பூணுல் மாத்தி மந்திரம் சொல்வது போல் உன்னால் செய்ய முடியுமா?"

"சாம்பு சாஸ்திரிகளே, உங்க மாமி,ஒங்க ஆத்திலே அடுப்பை மெழுகி, கற்பூரம் காட்டி அப்புறம் அடுப்பை மூட்டி காபியில் ஆரம்பித்து சமையல் வேலை செய்கிறாளா?

காஃபி க்கு இண்டக்ஷன் அடுப்பு, சமையலுக்கு காஸ் அடுப்பு.

சாஸ்திரிகள் வேதம் படித்த நீங்கள்,எங்களை விட மாறுபட்டு சாஸ்திரம், சம்பிரதாயம் பார்க்க வேண்டாமோ? இப்ப அப்படி இருக்கேளா?

இதோ ராஜாமணி மாமாவின் அக்கா விதவை. சாஸ்திரம் படிச்சவர்,அவர் அக்காவை மூலையில் உக்காரவைச்சு முடியை வழிச்சு முக்காடு போட்டு, வெள்ளை புடவை கட்டச் சொல்லி கட்டாய படுத்தினாரரா?

வைரத் தோடு, வைர மூக்குத்தி கலர் புடவை கட்டிண்டு தானே இருக்கார்?

அவரும் பன்னீர் புகையிலை, வெத்திலை போட்டுண்டு காவி பல்லுடன் இருக்கார்.

பெரியவா பெரியவா மேல பக்தின்னு சொல்ற நீங்க அவர் லாகிரி வஸ்துக்கள் உபயோக படுத்தக்கூடாதுன்னு சொன்னதைக் கேட்டு இருக்கிறீர்களா?

பாலு குருக்கள் மாமி பட்ட பகலில் நைட்டியுடன்.

இந்த அக்ராஹாரா ஆம்பளைங்க எவ்வளவு பேர் 3 வேளையும் சந்தி பண்ணி இருக்கேள்?

சாஸ்திரம் சம்பிரதாயம்ன்னு நாம தான் சொல்லி தப்பிக்கிறோம்.

எல்லா மாற்றத்தையும் ஏற்க முடியும்? பையன் இல்லாமல் பெண் மட்டும் உள்ள பெண் அவளுடைய பெற்றோருக்கு இறுதி கடன் செய்ய உரிமை இல்லையா?"

"இதோ பாரு நீ என்ன வாதம் பண்ணினாலும் இந்த அக்ரஹாரத்துக்குன்னு ஒரு கட்டுப்பாடு இருக்கு. அதை மீற முடியாது.'' சாம்பு சாஸ்திரிகள் சொல்லிக்கொண்டிருந்தார்.

தொடர்ந்து பேசும் போது,

"ராஜாமணி மாமா சொன்ன மாதிரி 25000பணத்தை கொடுத்துட்டு வந்த வழியே போயிடு. இனி இங்கே வரக்கூடாது…''

“வேதம் கத்துக் கொடுத்த எங்க அப்பாவுக்கு அந்திமகிரியை செய்ய உங்களால் பணம் கொடுக்க முடியலே. சாஸ்திரம் ஊர்கட்டுப்பாடுன்னு வெட்டிப் பேச்சு வேறே?'' நான் பணம் ரூ 25000 கொடுத்து யாரோ ஏன் செய்யணும்? இப்படி சொல்ல ஒங்களுக்கு வெக்கம் இல்லை ?"

”வாசு கார்ல PPE kit (Personal Protection Equipment) கவச உடை, உயர்தர மாஸ்க் இருக்கு. எனக்கு ஒன்னு கொடு. நீ ஒன்னு போட்டுக்கோ.வந்த ஆட்களிடம் நீங்களும் கொண்டு வந்த கவச உடையையும், மாஸ்க்கையும் போட்டுக்கிட்டு கிருமி நாசினி பிணத்தை ட்ரெஸ்ஸிங் பண்ண வேண்டிய எல்லாத்தையும் எடுத்துக்கிட்டு வாங்க…’’

கவச உடையுடன் நேரே வீட்டுக்குப் போய் அப்பாவை வாசலில் முன் கிடத்தினார்கள் வாசுவும், பாரதியும். வீடு உள் மற்றும் வெளியில் இரண்டு முறை கிருமிநாசனி அடித்து வீட்டை சுத்தம் செய்தார்கள் வந்தவர்கள்.

வாக்கரசி இரண்டு பேரும் போட்டபின். அந்திமகிரியைக்கு உண்டான மந்திரத்தை சோமு கனபாடிகள் மாதிரியே கணீர் குரலில் பாரதி சொன்ன போது, அசந்து போனார்கள் ராஜாமணியும் சாம்பு சாஸ்திரியும், மற்றவர்களும்.

வந்தவர்கள் சோமு கனபாடிகள் உடம்புக்கு ட்ரெஸ்ஸிங் பண்ணும் போது விசும்பி அழுத பாரதியை தேற்றினான் வாசு.

தீச்சட்டியை கையில் எடுத்துக் கொண்டு முன்னே போக, கொண்டு வந்த வேன் மூலம் கனபாடிகள் உடம்பை சுடுகாட்டில், தீ மூட்டி விட்டு அங்கு சொல்ல வேண்டிய மந்திரத்தை சொல்லிவிட்டு குளித்து திரும்பிய பாரதியை பார்த்து.

”யூ ஆர் ரி ய லி கிரேட்’ என்றான் வாசு.

வீட்டுக்கு வந்து அம்மா, அப்பா போட்டோ எடுத்தபின் கதவை பூட்டிய பாரதி, நேரே ராஜாமணி, சாம்பு சாஸ்திரிகள்கிட்ட வந்து

”அன்னிக்கு 17 வயது .அந்த பருவம் தறிகெட்டு போகிற பருவம். அந்த வயதில் பிச்சை எடுத்து வயிறை கழுவினேன். சிவப்பு உடம்பு வேற. ஆள் ஆளுக்கு பாலியல் தொல்லை. நாயை விட கேவலமான பிழைப்பு. பாதுகாப்பிற்கு அரவாணி கூட்டத்தில் சேர்ந்த எனக்கு ஒரு நல்ல அரவாணியின் அரவணைப்பில் ப்ளஸ் 2 முடித்து சட்ட கல்லூரியில் படிப்பை முடிச்சு,2 வருஷம் ஜூனியர் ஆக இருந்து தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில் பதிவு பண்ணி இன்னிக்கு வக்கீல்.’

தமிழ்நாட்டில் மட்டுமல்ல. இந்தியாவிலேயே முதல் திருநங்கை வக்கீல் நான் தான்.’’

இதோ பாருங்க. தன் பெயர் பொறிக்கப்பட்ட அடையாள அட்டையை காண்பித்த பாரதி தொடர்ந்து, ஆனால், ”நான் இந்த இலக்கை அடைய 10 வருஷம் அடைந்த துன்பம். துயரம் ஏளனம் இதற்கெல்லாம் அளவே இல்லை.

நான் மட்டுமல்ல இந்தியா முழுவதும் நிறைய திருநங்கைகள். நீதிபதியாக, கல்லூரி முதல்வராக, டிவி வர்ணனையாளரா இன்னும் உயர் பதவியில் என உயர்ந்து இருக்காங்க.’’

”நீங்களும் சாம்பு சாஸ்திரிகளும் எங்க அப்பாவை அன்னிக்கு சமாதானப்படுத்தி என்னை ஏத்துக்க வைத்து இருந்தா, கொஞ்ச காலம் கழித்து நானே போயிருப்பேன். எங்க அம்மா செத்து போய் இருக்கமாட்டா.

இன்னிக்கு நான் செத்துட்டேன்னு வேறே கிண்டலாக சொல்லி இருக்கீங்க. நான், பீனிக்ஸ் பறவை மாதிரி

முண்டாசு கவிஞன் சொன்ன வார்த்தையை திருப்பி நான் சொல்கிறேன்.

வீழ்வேன் என்று நினைத்தாயோ?’’

பாரதி சொன்ன வார்த்தை ஒவ்வொன்றும் தன்னை சாட்டையால் அடிப்பது போல் இருந்தது ராஜாமணிக்கும், சாம்பு சாஸ்திரிகளுக்கும்.

வாசு, ராஜாமணியிடம், “இனி பாரதி தான் எனக்கு எல்லாமே”. இந்தாங்க கோயில் சாவி. இனி நீங்க பிச்சை போட வேண்டாம் வாம்மா போகலாம்.’’

பாரதியின் காரில் வாசுவும், அவன் அம்மாவும். ஏறிக் கொள்ள கார் கிளம்பியது .

# 12. அன்னபூரணி

**"சூழ்நிலை ஒரு மனிதனை உருவாக்கவும்,**

**அழிக்கவும் செய்யும்.''**

மேல்நாட்டு பழமொழி.

கடந்த 6 மாசமா, ஒவ்வொரு இரவும்,குடித்து விட்டு,அஞ்சலையிடம் ரகளை பண்ணுவதும், அவளை சில சமயங்களில் அடிப்பதும், வழக்கமாய் போனது மாடசாமிக்கு.

"நீ திருந்தவே மாட்டியா? எவ்வளவு நாளைக்கு தான் இப்படி போதையில் வரும்போது நான் அடி வாங்கறது?''

அஞ்சலை புலம்பி என்ன பிரயோசனம்.? போதை உச்சிக்கு போனவனுக்கு இந்த அழுகை கூக்குரல் கேக்குமா என்ன?

வைத்திருந்த சாப்பாட்டு தட்டை,காலால் உதறி விட்டு, கட்டிலில் போய் விழுந்தான் மாடசாமி.

முறைமாமன் மாடசாமி தன்னைவிட படிப்பு குறைவு என்றாலும், நேர்மையும், கடின உழைப்பும். தன்னை ஒத்துள்ள மத்த வாலிப பசங்களும் சரி, தன்னை விட வயசில் பெரிசுகளும் 2 கி. மீ தொலைவில் உள்ள மதுபானக் கடைக்கு போய், சரக்கு அடித்துவிட்டு,

சேரியில் ரகளை செய்யும் போது இவன் வலிய போய், "ஏண்ணே! குடிச்சு குடிச்சு குடல் வெந்து வாந்தி அடிக்கும் அளவுக்கு போறீங்க? குடிக்காதீங்க''

என்று கெஞ்சி அவர்களை அவரவர்கள் வீட்டுக்கு கொண்டு விடுவதையும் அவர்களை ஓரளவுக்கு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வைத்து இருந்ததையும் பார்த்து வந்த அஞ்சலை வாக்கப்பட்ட 2 வருஷமும் தன்னிடம். பிரியமாக நடந்து கொண்டவன், 6 மாசமா ஏன் இப்படி ஆனான்?

"எல்லாம் தலைகீழாக மாறி போயீடுச்சே?'

மாடசாமி இப்படி மாறிப் போனதுக்கு காரணம் பாஸ்கர் முதலாளி செஞ்ச செயல் தானே?

அவள் நினைவுகள் பின் நோக்கி சென்றது.

அந்த ஊரில் எல்லோரும் அண்ணி, அண்ணி என்று அன்புடன் அழைக்கப்படும் அன்னபூரணி, ஊருக்கு உபகாரி. பெயருக்கு தகுந்தாற்போல், தினமும் யாருக்காவது அன்னம் இடுபவர். வயது 50லிருந்து 55க்குள் இருக்கும். கொஞ்சம் பெருத்த சரீரம். நீண்ட நாளுக்குப் பிறகு தவம் இருந்து பிறந்த ஒரே பையன் பாஸ்கர். அந்த காலத்திலேயே பி.யுசி, வரைக்கும் படித்தவர்.நாட்டு நடப்பு, உலக விஷயங்கள் எல்லாமே அத்துபடி. தமிழ் பற்று அதிகம்.

ஒரு பிரபலமான கட்சிக்காக தன் சொத்து முழுவதையும் இழந்த நிலையில் திடீர்னு மாரடைப்பின் காரணமாக இறந்து போன முத்தையாவின் மகன். பாஸ்கர் மேல்படிப்புக்காக யு. எஸ் சென்றவன். இறந்த போது காரியங்கள் செய்துவிட்டு போனவன், மீண்டும் படிப்பை முடித்து விட்டு அடுத்த வாரம் ஊர் திரும்புகிறான்.

அன்னபூரணி அண்ணிக்கு கணவர் விட்டுப் போன, 10 ஏக்கர் சாகுபடி நிலம், அதை தவிர்த்து ஊரின் எல்லையில் அய்யனார் கோயில் அருகே நெல் கோடௌன். அத்துடன் பக்கத்தில் 1000 ச.அடி புஞ்சை நிலம் மட்டுமே மிஞ்சிய சொத்து..

முத்தையா கிராமபஞ்சாயத்து தலைவராக இருந்த போது நிறைய நலத் திட்டங்கள் செய்தவர். தன் சொந்தக் காசைப் போட்டு நல்லது செய்தவர். ஊரில் மதுபானக் கடை இருக்க கூடாது என்று சொல்லி பக்கத்து ஊருக்கு அதை கொண்டு சென்றவர்.

இருக்கும் வரை கட்சி, கட்சி என்று பணத்தை செலவழித்தவருக்கு, இறந்து போன பின் ஒருவரும் எட்டி பார்க்கவில்லை.

மாடசாமியின் அப்பா காலத்திலிருந்தே, விவசாயம் சாகுபடி செஞ்சு வந்ததால், மாடசாமியும் அந்த வீட்டில் தொடர்ந்து வேலை செய்யும் சூழ்நிலை உருவானது.

மாடசாமியும், பாஸ்கரும் சம வயசு மட்டுமல்ல,அவனின் நேர்மை தொழிலில் சிறந்த பங்களிப்பு. ஈடுபாடு பாஸ்கருக்கு பிடித்துப்போனதால் தான் படிப்பை முடிக்கும் வரை, மராமத்து வேலைகளையும் சேர்த்து கவனிக்கும் பொறுப்பை கொடுத்து இருந்தான் பாஸ்கர்.

மாடசாமி மனைவி அஞ்சலியின் நல்ல குணத்தை கண்ட அண்ணி, வீட்டு வேலைக்கு உதவியாக வைத்து கொண்டு இருந்தாள்.

"இன்னும் ஒரு வாரத்துல பாஸ்கர் தம்பி வரப் போகுது. நீ வீட்டுக்கு ஒட்டடை அடிச்சு சுத்தம் செஞ்சு பளிச்சுன்னு வை.'' உத்தரவிட்டாள் அண்ணி.

மறுவாரம், பாஸ்கர் வீடு வந்த போது வீடே குதூகலமானது.. மாடசாமிக்கென்று,சில உயர்ந்த துணிமணிகள் சாக்லேட் கொடுத்தான். அஞ்சலைக்கு, அம்மாவுக்கு, உயர்ரக சேலைகள் கொடுத்த போது அஞ்சலை நன்றி கூறினாள்.

ஒரு வாரம் கழித்து அம்மாவிடம் மெதுவாக பேச்சு கொடுத்தான் பாஸ்கர்.

"அம்மா… அய்யனார் கோயில் பக்கத்திலே அல்லிக்குளம் மேல்கரையில் நம்ம நெல் மூட்டை வைக்கும் கோடவுன் இருக்குல்ல. அதிலே மதுக்கடையும், பக்கத்திலே இருக்கும் 1000 சதுர அடி நிலத்திலே, பார் ஒன்னும் வைக்க போறேன்ம்மா.

மதுக்கடை ஏலம் எடுத்து தொழில் செய்யப் போறேன். அதற்கு அப்பா இருந்த கட்சியின் மூலம் ஏற்பாடு செஞ்சு,பார்மலிட்டி முடிந்து இன்னும் 10 நாளிலே திறக்கப் போறேன்.''

"நம்ம குடும்பம் பாரம்பரியம் கொண்டது. இது மாதிரி பிசினஸ் நமக்கு ஒத்து வராது தம்பி…''

அன்னபூரணி குரலில் ஒரு கெஞ்சல் இருந்தது.

”என்னம்மா சொல்றிங்க? அப்பா கட்சிக்காக தொலைத்த பணத்தை மீட்கப் போறேன். அப்பா எனக்காக என்ன வைச்சுட்டு போனாரு?

நீயும் எவ்வளவு தடவை சொல்லியிருப்பே? தனக்கு மிஞ்சிதானே தானம் தர்மம்னு கேட்டாரா?

கட்சி கட்சின்னு எல்லா சொத்தையும் தொலைச்சிட்டு உயிரையும் விட்டாரு…

ஏதோ என் முயற்சியில் பாரின்ல பிசினஸ் சம்பந்தமா படிக்கப் போனேன்…’’

பாஸ்கர் பேசியதில் எந்த தப்பும் கிடையாது என்று அன்னபூரணிக்கு தெரியும்.

இறந்து 2 வருடம் ஆச்சு.

முத்தையா இருக்கும் வரை கட்சி, கட்சி என்று பணத்தை செலவழித்தவருக்கு இறந்து போனபின் ஒருவரும் எட்டி பார்க்கவில்லை.

கட்சியிலிருந்து எந்த உதவியும் கிடையாது.

ஆனாலும், அவள் மனதுக்கு பாஸ்கர் செய்ய போகிற அந்த பிசினஸ் வேண்டாம் என்கிற எண்ணமே இருந்தது.

”அப்பா மாதிரி அரசியலில் இருந்துகொண்டு எதையும் சேக்கலே.நான் அப்படி இருக்கமாட்டேன். ஏற்கனவே படிப்பு கடன் 30 லட்சம் இருக்கு. அப்பா இழந்த சொத்தை மீட்க ஒரே பிசினஸ் இது தான்.

ஒரு நாளைக்கு செலவு போக 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் வரைக்கும் கிடைக்கும்.பண்டிகை காலத்திலே இன்னும் கூட கிடைக்கும். இது பொன் முட்டை இடும் வாத்து.’’

என் பேச்சை கேளு. எவ்வளவு பிசினஸ் இருக்கு. இது மட்டும் வேணாம்.

2000- ஆண்டுகளுக்கு முன்பே மது அருந்துவதின் தீமை பற்றி நமது வள்ளுவப் பெருந்தகை தனது ‘கள்ளுண்ணாமை’ அதிகாரத்தில் மிக அழகாக குறிப்பிட்டுள்ளார்.

**”உட்கப் படாஅர்; ஒளி இழப்பர்; எஞ்ஞான்றும்**

**கள்காதல் கொண்டு ஒழுகுவார்.’**

வாழும் காலத்து, மரியாதையும் இழந்து போவார்னு சொல்லி இருக்கார்.

அவர் சொன்னது குடிப்பவர்களுக்கு மட்டுமல்ல அந்த தொழில் செஞ்சு அதன் மூலம் பாவ காசை சம்பாதிக்கறவர்களுக்கும் சேர்த்து தான்.

வேண்டாமே? இந்த பிசினஸ்.

நீ படிச்ச படிப்புக்கு வேறு தொழில் செய்யலாமே?

ஏழைகள், கூலித்தொழிலாளர்கள், கடின உழைப்பாளிகள், கவலைப்படுகின்றவர்கள், மன நிம்மதி இழந்தவர்கள் போன்றவர்களே, அதிகம் மதுகுடிக்கிறாங்கன்னு புள்ளி விவரங்கள் சொல்லுது.

சந்தோசத்திற்காக குடிக்கறேன்னு ஆரம்பிச்சவங்க, பிறகு மதுவிற்கு அடிமையாகி, குடும்பத்தையும் நாசமாக்கி துன்பத்தை கொடுக்கிறாங்க

ரத்தத்தில் 20 மில்லி கிராம் ஆல்கஹால் கலந்தாலே பார்வைத் திறன் குறையும். 30 மில்லி கிராம் என்ற அளவைத் தொட்டால் தசை தன் கட்டுப்பாட்டை இழக்கும். சிந்திப்பது, புரிந்து கொள்ளும், தன்மை குறைவது என்று சங்கிலித் தொடர்போல் எல்லாம் பாதிக்கப்படும். உடல் அளவிலும், மனஅளவிலும் குடிக்கு அடிமையாகி விடுவதால் வாழ்க்கையில் பலவிதமான பிரச்சினைகள் ஏற்பட்டாலும்கூட குடிப்பதை அவர்களால் நிறுத்த முடியாது”.

குடியை நிறுத்தும்போது கைநடுக்கம், தூக்கமின்மை, மனச்சோர்வு, சிந்திக்கும் திறனில் பாதிப்பு, பயம், பிரமை, நரம்புத் தளர்ச்சி, உணர்ச்சி இன்மை என்று நிறைய வியாதிகள் வரும்.

மதுவிற்பனை மூலம் அதிக வருவாய் ஈட்டும் மாநிலம் இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் முதலிடம். அதே மாதிரி இந்தியாவிலேயே அதிகமானோர் மதுவால் தற்கொலை செய்து கொண்ட மாநிலமும் தமிழ்நாடுதான்.

நம் நாட்டில் குடிக்கிற தண்ணீருக்கு தட்டுபாடு காசு கொடுத்து வாங்கிக்கிறோம். ஆனா இந்த தண்ணீக்கு தட்டுப்பாடு மட்டும் கிடையாது தாராளமா கிடைக்கும்.

தகவல் அறியும் உரிமை சட்டப்படி ஒருபுள்ளி விபரம் சொல்றேன். கேட்டுக்கோ. 2011 இல்4195 கோடியாக இருந்த மதுபான வருவாய் 2021இல்33746 கோடி ரூபாய் வருவாய் ஈட்டி உள்ளது.

இதெல்லாம் யாருடைய பணம்? நான் மேலே சொன்னவர்கள் உழைப்பில் வந்த பணம்.பாவப்பட்ட பணம் நமக்கு வேணாம்…

இதற்கு நீயும் துணை போக வேண்டுமா?

அன்னபூரணி கோபமாகவும், உணர்ச்சி பொங்கவும் பேசிய வார்த்தைகள் பாஸ்கர் மனதை எந்த விதத்திலும் கரைக்கவில்லை என்பது அவன் வாதத்தில் பிரதிபலித்தது.

அம்மா நீங்க இன்னும் பழைய காலத்து கண்ணோட்டத்திலேயே பேசிக்கிட்டு இருக்கீங்க. பாவமாவது, புண்ணியாமாவது?

தமிழ்படிச்ச ஆர்வம் திருக்குறளை உதாரணமாக காட்டி பேசறீங்க.

தினமும் பேப்பர் படிக்கறதினாலே புள்ளி விவரம் சொல்றீங்க.

ஆனா ரியாலிட்டின்னு ஒன்னு இருக்கு. அதை புரிஞ்சு பேசுங்க.

ஒங்க பாரம்பரியம் என் கடனை அடைக்குமா? இல்லை சொந்தக்காரங்கதான் உதவி பண்ணுவாங்களா?

ஒங்க லெக்சர் கேக்கிற மன நலையில் நான் இல்லை.

வாதங்கள் வார்த்தைகளாக வெடித்தன.

”அப்பா செல்வாக்கை பயன்படுத்தி கட்சி மேலிடம் வரைக்கும் போய் சிரமப்பட்டு, லைசென்ஸ் வாங்கி இருக்கேன்.

நான் முன் வைச்ச காலை பின் வாங்கமாட்டேன்

அம்மாவுக்கு இந்த தொழிலில் இஷ்டம் இல்லை என்று தெரிந்தும் பாஸ்கர் அதைப் பற்றி கவலைப்பட வில்லை.’’

”என் முடிவில் எந்த மாற்றமும் இல்லை.’’ என்று கூறியபடி மத்த வேலைகளை கவனிக்க ஆரம்பித்தான்.

பாஸ்கர் தோளுக்கு மேல் வளர்ந்த பிள்ளை. என்ன அறிவுரை சொன்னாலும் கேக்கும் மனப்பக்குவம் இருக்காது என்று நினைத்தார் அன்னபூரணி.

ஆனாலும் இதை இப்படியே விட்டுவிடக்கூடாது. எப்படியாவது இதற்கு முடிவு கட்டணும்.

”இதப் பாரு மாடசாமி. நீ நம்ப வீட்டிலே வேலை செஞ்சுட்டு வரது மட்டும் காரணமல்ல, நீ குடிக்கமாட்டே. பொறுப்பானவன். உழைப்பாளி. நேர்மையானவன்.

சரக்கு விக்கறதும், காலி பாட்டில் கலெக்ட் பண்ணி வைக்கறதும், ஸ்னாக்ஸ் மாஸ்டர் வேலையை கவனிக்கறதும்தான் உன் வேலை.

சுண்டல், சிக்கன், ஆம்லெட், பஜ்ஜி, போண்டா செய்ய ஒரு மாஸ்டரை ஏற்பாடு பண்ணி இருக்கேன். அவரே வாட்டர் பாட்டில், வாட்டர் பாக்கெட் விற்பார்.

நான் வரும்போது கணக்கு பாத்துப்பேன். உனக்கு சம்பளம் மாசம் 12000 ரூபாய். அதை தவிர தீபாவளி, பொங்கல் போனஸ் உண்டு.’’

அன்னபூரணி மாதிரி, அஞ்சலைக்கும் இந்த வேலையில் இஷ்டம் இல்லை என்றாலும், தன் கணவன் குடிக்கமாட்டான் என்ற அசாத்திய நம்பிக்கையுடன் மேலும் நாளைக்கு குழந்தை பிறந்தால், சேமிப்பு தேவை என்ற காராணத்துக்காக ஒத்துக் கொள்ளச் சொன்னாள்.

“சரிங்க எஜமான்”என்று தலையை ஆட்டினான் மாடசாமி.

கிராம மக்களும்,சேரி மக்களும் இனி 2 கி.மீ தொலைவு போய் சரக்கு அடிக்க வேண்டியதில்லை பாஸ்கர் தம்பி நல்லா இருக்கணும். என்று வாழ்த்தினார்கள்.

அதே சமயம் ஊரில் உள்ள பெரிய மனிதர்கள், அன்ன பூரணியை சந்தித்து, தங்கள் வருத்தத்தை தெரிவித்தனர்.

”என்ன அண்ணி? போயும் போயும் தம்பி இந்த பிசினஸ் ஏன் பண்ணனும்?

தம்பி படிச்ச படிப்புக்கு டவுன்ல போய் நல்ல பிசினஸ் பண்ணலாம். ஏன் தம்பிக்கு இப்படி புத்தி போகுது.?

முத்தையா சம்பாதிச்ச பேரை கெடுத்துக்கிற மாதிரி செய்யுதே?

ஏதோ உங்க நல்ல குணத்துக்காக சொல்லிட்டு போகலாம்னு வந்தோம்.''

வந்தவர்கள் புலம்பி விட்டு போனார்கள்.

அன்னபூரணிக்கு இதில் இஷ்டமில்லைதான்.ஆனால் எப்படி தடுப்பது? யோசித்தாள்.

மூன்று மாதம் முள்ளங்கி பத்தை மாதிரி மாடசாமி பணத்தை கொடுத்த போது சந்தோசப்பட்டாள். அஞ்சலை.

நான்கு மாதம் ஆகியிருக்கும். சேரியில் இருக்கும் இருளப்பன் பையன் தன் அம்மாவின் தாலியை அறுத்து அடமானம் வைச்சு கூட்டாளிகளுடன் சேர்ந்து மூச்சு முட்ட குடித்து விட்டு ரகளை பண்ணிய செய்தியை அஞ்சலை தன்னிடம் சொன்னபோது வருத்தம் அடைந்தாள் அன்னபூரணி.

இந்த மதுவினால் இளைஞர்கள் கெட்டுப் போறாங்க. இதுக்கு விடிவு காலம் எப்போது?

"தெருவில் நான் செல்லும்போது என்னைப் பார்த்து,அழுதபடியே தங்கள் குடும்பக்கதையைச் சொல்லும் பெண்களை எப்படித் தேற்றுவது என்று தெரியாமல் தவிக்கிறேன் அஞ்சலை'' என்று தன் வருத்தத்தை சொன்னாள் அன்னபூரணி.

"நான் போராட்டம் நடத்த அனுமதி கேட்டால் காவல் துறையினர் அனுமதி தர மறுத்துவிடுவார்கள்.

அப்படியே போராட்டம் நடத்தினாலும் பேச ஆரம்பிக்கும் முன் கைது செய்வார்கள்.

இதனால் எனக்கும், பாஸ்கருக்கும் விரிசல் கண்டுள்ள நிலையில் இதை எப்படி முறியடித்து வெளியில் வருவது?"

"நம்மைச் சுத்தி நடக்கற அநீதிகளைப் பார்த்துக்கிட்டு சும்மா இருந்தா, நாம மனுஷனா இருக்கறதுக்கு என்ன அர்த்தம்?'னு அப்பா அடிக்கடி கேட்பார்.

அப்பாவோட பேச்சும் செயலும் எனக்குள்ளே சமூக ஈடுபாட்டை அதிகரிச்சது

ஆனாலும் பூஞ்சோலையாக இருந்த குடும்பத்தில் பூ நாகம் மாதிரி பாஸ்கர் செயல் இருக்கே.

இப்ப இருக்கிற கடை அய்யனார் கோயில் பக்கத்துலே இருக்குன்னு சொல்லி ஒரு புகார் அனுப்புவோம்.

அதே மாதிரி சேரி பிள்ளைங்க ஸ்கூலுக்கு போகிற பாதையில் மதுபானக் கடை இருக்கு. உடனே அந்த இடத்தை விட்டு எடுக்க சொல்லி புகார் மனு மேல் மட்ட அதிகாரிகள் எல்லோருக்கும் அனுப்புவோம். என்ன சொல்றீங்க அண்ணி?''

போதைப் பொருட்களையோ அது சார்ந்த வஸ்துகளையோ விற்பது குற்றம் என்று சட்டம் சொல்லுது.

ஆனால் அரசாங்கமே தெருவுக்குத் தெரு மதுக் கடைகளைத் திறந்து வைத்து மதுவை விற்பனை செய்கிறது. அரசாங்கம் என்ன சட்டத்துக்கு அப்பாற்பட்டதா?” என்று நான் கேட்கும் கேள்வியில் உள்ள நியாயத்தைப் புறக்கணித்துவிட முடியாது அஞ்சலை.

மறுநாளே எல்லா இடத்துக்கும் புகார் மனு அனுப்பப்பட்டது.

நல்ல முடிவு வரும் என்று அண்ணியும், அஞ்சலையும் நம்பிக்கை கொண்டு இருந்தார்கள்.

இடையில் அஞ்சலை வாழ்க்கையில் சூறாவளி வீராசாமி மூலம் வீச ஆரம்பித்திருந்தது.

வீராசாமி பக்கத்து கிராமம் அவனுக்கு பிளாக்கில் மாடசாமி சரக்கு வித்தபோது.

“ஏன் மாடசாமி ? ஒன் சம்பளத்தை முழுசா ஒன் பொண்டாட்டிக்கிட்ட கொடுத்துட்டு வரே. இதுல வர காசை பையில் போட்டுக்கிட்டு ஜாலியா ஒரு குவார்ட்டர் அடிப்பியா? இதெல்லாம் ஒங்க முதலாளி பாத்துகிட்டா இருக்காரு?.ஒன் இடத்திலே நான் இருக்கேன்னு வச்சுக்கோ, லைப்ப ஜாலியாக அனுபவிப்பேன்”. பொழைக்க தெரியாத ஆளா இருக்கே?’’

மூளை சலவை செய்தான் வீராசாமி.

”இன்னொரு விஷயம் குடிச்சுட்டு மிச்சம் வைச்சுட்டு போற பாட்டில் எல்லாத்தையும் சேகரிச்சா அதுவே குவார்ட்டருக்கு மேலே வரும்..’

காதை கொண்டா ஒரு ரகசியம் சொல்றேன். புது பாட்டிலோடு இறங்கியவுடன் அதிலிருந்து கொஞ்சம் எடுத்து இன்னொரு பாட்டிலில் ஊத்து. புது பாட்டிலை தண்ணீ ஊத்தி மூடு.

நீயும் முதலாளி மாதிரி கல்லா கட்டலாம். தேன் எடுக்கிறவன் தேனை சாப்பிடாமல் இருப்பானா சொல்லு?’’

வீராசாமியின் மூளை சலவை, மாடசாமியின் மூளைக்கு சென்று வேகமாக வேலை செய்ய வைத்தது.

இப்படித் தான் கொஞ்சம் கொஞ்சமாக குடித்த மாடசாமி மாத சம்பளம் முழுவதையும் அஞ்சலையிடம் கொடுத்து வந்ததினால் சந்தேகம் வராத மாதிரி நடந்து கொண்டான்.

பலநாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான் என்பது போல பாஸ்கருக்கு தெரிய வரவே கையும், களவுமாய் மாட்டிக் கொண்டான் மாடசாமி.

”ஏண்டா நாயே! என் உப்பை தின்னுட்டு என் காசிலே தினமும் சரக்கு அடிச்சுருக்கே? களவாணி தனம் வேறே பண்ணி இருக்கே?

எந்த துரோகத்தையும் மன்னிக்கலாம் ஆனா நம்பிக்கை துரோகம் பண்ணியவனை என்னால் மன்னிக்க முடியாது. இனி வீட்டு வேலைக்கும் வராதே.

இப்பவே போலீஸ்ல புகார் கொடுத்து உன்னை உள்ளே தள்ள முடியும்.’’ பிடரியை பிடித்து தள்ளியதில் அய்யனார் சூலம் அருகே போய் விழுந்தான்.

கூட இருந்த வீராசாமியை பார்த்து," இதுக்கெல்லாம் காரணம் நீ தானே .உன்னை சும்மா விட மாட்டேன்.சமயம் வரும் போது என் கிட்ட மாட்டுவே" என்று அவனையும் பிடித்துத் தள்ளி விட்டு மிரட்டினான் பாஸ்கர்.

"என்னை பார்த்து மிரட்டல் விடுறீங்களா? நான் சொன்னா மாடசாமிக்கு எங்கே புத்திப் போச்சு?. என்னையும் கழுத்தை பிடிச்சு தள்ளிட்டே. இதோட விளைவை சீக்கிரம் பாக்கப் போறே."

போதையில் கண்டபடி உளறினாலும், வீராசாமியிடம் வன்மம் தெரிந்தது.

"சூழ்நிலை ஒரு மனிதனை நல்லவிதமாக உருவாக்கும் அதே சமயம் அழிக்கவும் செய்யும்". எப்போவோ அன்னபூரணி அண்ணி சொன்னது ஞாபகத்துக்கு வந்தது அஞ்சலைக்கு.

ஒருநாள் மூச்சு முட்ட குடித்து போதையில் இருந்த முருகையனை,போதையில் இருந்த வீராசாமி போதையை போக்கிறேன் என்று சொல்லி அல்லி குளத்தின் குளிர்ந்த தண்ணீரில் மூன்று முறை அமுக்கி அமுக்கியெடுக்க மூச்சுத் திணறி இறந்து போய் இருந்தான், முருகையன். வீராசாமியை போலீஸ் கைது செய்து இருந்தது.

அண்ணியும் அஞ்சலையும் வேதனைப் பட்டார்கள்.

ஒருநாள் தங்கள் செய்த புகாருக்கு பதில் வந்து இருந்தது.

ஆனால் அந்த பதில் மதுபானக் கடை இருக்கும் இடம் கோயிலுக்கும், பள்ளிக்கூடத்திற்கும் 100 மீட்டர் தள்ளிதான் உள்ளது என்றும் எனவே அதை மாற்ற வேண்டிய அவசியமில்லை என்றும் மதுபானக் கடை திறப்பது அரசாங்கத்தின் பாலிசி மேட்டர் எனவே நாங்கள் தலையிட முடியாது என்றும் பதில் வந்து இருந்தது.

"நல்லா இருந்த என் புருஷன் குடிக்கக் காரணமே பாஸ்கர் அய்யா தான். அரசாங்கமும் எந்த நடவடிக்கை எடுக்கல. எப்போ இதுக்கு தீர்வு கிடைக்கும்?''

"நீ சொல்றது எனக்கு மன வேதனையை தருது". பாஸ்கர் என்ன சொன்னாலும் கேக்கிற சூழ்நிலையில் இல்லை கவலைப்படாதே. கடவுள் ஒரு நல்ல முடிவு வைச்சு இருப்பாரு.''

நான் சொன்ன வைத்தியத்தை தொடர்ந்து மாடசாமிக்கு கொடு. ஞாபகம் இருக்குல்ல 5 வில்வ இலை1 டீ ஸ்பூன் மிளகு 1 டீ ஸ்பூன் மல்லி மூன்றையும் அரைச்சு தண்ணீரில் கொதிக்க வைச்சு வெல்லம் சேர்த்து வெறும் வயிற்றில் 10 நாள் கொடு. மதுக்கடை பக்கம் போகமாட்டான்.

மறுநாள் காந்தி ஜெயந்தி கடை விடுமுறை. பாஸ்கர் வேலை விஷயமாக வெளியூர் சென்று இருந்தான்.

அமாவாசை இருட்டு. அதிகாலை 3 மணி. ஊரில் கரண்ட் வேறு இல்லை.அய்யனார் கோயில் அருகே ஒரு குள்ளமான குண்டான உருவம். கையில் பெரிய டார்ச்சுடன்

இன்னொரு கையில் இன்னொரு பொருளையும் வைத்து இருந்தது.தன் உடம்பு முழுவதையும் கருப்பு போர்வையால் மூடி இருந்தது. அதன் பார்வை அல்லிக்குளம், அய்யனார்கோயில், தெருப்பக்கம், யாராவது வருகிறார்களா இருக்கிறார்களா, என்று பார்த்துவிட்டு தான் செய்ய வேண்டிய வேலையை கச்சிதமாக 10 நிமிடத்தில் முடித்து விட்டு வேக வேகமாக வயலில் வரப்புகள் இடையே ஓடிச் சென்று மறைந்தது.

காலை 4 மணி அளவில், சிறுநீர் கழிக்க வந்த மாடசாமி மதுபானக் கடையில் உள்ள பாட்டில்கள் ஒன்றுக்கொன்று வெடித்துக் கொண்டு இருந்ததையும் பார் எரிவதையும் கண்டு சேரி மக்களை எழுப்பி

”ஓடி வாங்க... ஓடி வாங்க...

“நம்ம பாஸ்கர் அய்யா மதுபானக் கடை எரியுது”.

சேரி மக்கள் திரண்டு அல்லிக் குளத்தில் இருந்து குடம் குடமாக தண்ணீர் கொண்டு போய் கொழுந்து விட்டு எரிந்த தீயை அணைக்க முயற்சித்தார்கள்.

கூட்டத்தில் சலசலப்பு.

மாடசாமி பாஸ்கருக்கும் தீ அணைப்பு ஆஃபீஸ்க்கும் தகவல் கொடுத்தான்.

“இந்த வீராசாமிதான் பாஸ்கர் அய்யாவை எதிர்த்து அன்னிக்கு பேசினவன். அவன்தான் செஞ்சு இருக்கணும்.”

கூட்டத்தில் யாரோ சொல்லிக்கொண்டு இருந்தார்கள்.

அதிகாலையில் வீடு திரும்பிய பாஸ்கர் தகவல் தெரிந்ததும் அன்னபூரணியுடன் உடனே காரில் கிளம்பி மதுபானக் கடைக்கு வந்தான்.

15லட்சம் பெறுமான மதுபாட்டில்கள் ரொக்கம் 1 லட்சம் போயிடுச்சே என்று கண் கலங்கினான்.

எவ்வளவு தடவை அன்பாகவும், கண்டிச்சும் சொல்லி இருப்போம். முருகையன் சாவு இருளப்பன் மனைவி தாலி பறிப்பு, சேரி மக்கள் இவன் கடையில் குடிச்சு குடிச்சு குடல் புண் ஆனது. ஒழுங்காக இருந்த மாடசாமி குடிக்க ஆரம்பித்து நாசம் போனது வீராசாமியின் கைது. ஒரே வரியில் சொல்வதானால் எல்லாப் பிரச்னைகளுக்கும் மூல காரணமே மதுதான். இதை ஒழிக்காத வரை நான் நிம்மதியாக இருக்க முடியாது.

எல்லாவற்றுக்கும் காரணம் பாஸ்கர் தான் என்று தெரிந்தும். புகார் கொடுத்தும் பிரயோசனமில்லாமல் அரசியல் பலம்,பண பலம் உள்ள தன் மகனிடம் இனி மோதி ஜெயிக்க முடியாது என்று உணர்ந்து இந்த பிரச்சினைக்கு இதுதான் தீர்வு, இதைத் தவிர வேறு வழி இல்லை. இனி இந்த ஊருக்கு மதுபானக் கடை இருக்கக் கூடாது என்று நினைத்து துணிச்சலுடன் தான் மட்டும் ஒத்தையா நின்னு, பெட்ரோல் ஊற்றி மதுபானக் கடையையும், பார் இரண்டையும் கொளுத்தி விட்ட ரகசியம் தனக்கு மட்டும் தெரிந்த ரகசியமாக இருக்கட்டும்

என்று எண்ணி எரிந்த கட்டடித்தை பார்க்க கூட்டத்தோடு கூட்டமாக கலந்தாள் அன்னபூரணி.



# 13. நான் செய்தது

அந்த போஸ்டல் டிவிஷனில் சூப்பரின்டென்டன்ட் ஆகப் பொறுப்பு எடுத்து ஒரு மாதம் ஆகியும் என் வேலைப்பளு என்னவோ குறையவே இல்லை. எனக்கு முன்பு வேலை செய்தவரின் பெண்டிங் வேலைகள் ஒவ்வொன்றையும் கிளியர் செய்வதற்கு இவ்வளவு நாள் ஆயிற்று. இன்று சனிக்கிழமை. ஏதாவது ஆபிஸ் விசிட் பண்ணிவிட்டு ரிப்போர்ட் கொடுக்கலாம் என்று நினைத்தேன்.

பொதுவாக வாரவிடுமுறையான சனிக்கிழமைகளில் ஸ்டெனோவையோ, ஜீப் டிரைவரையோ அழைத்துப்போகும் பழக்கம் கிடையாது. நான் மட்டும் எந்த ஊர் போக வேண்டுமோ தனியாகப் போய் வந்த பிறகு ரிப்போர்ட்களை பிராஞ்சில் கொடுத்துவிடும் பழக்கத்தைக் கொண்டிருந்தேன்.

பஸ் ஸ்டாண்ட் வந்தவுடன் நான் எந்த ஊருக்குப் போக வேண்டும் என்று நினைத்தேனோ, அந்த பஸ் கிளம்பத் தயாராக இருந்தது. அதில் ஏறிக்கொண்ட பிறகு, அடுத்த ஒரு மணி நேரத்தில் அந்த ஊர் வந்ததும் என்னை இறக்கிவிட்டுச் சென்றது பேருந்து.

இருபது வருட இடைவெளிக்குப் பிறகு இந்த ஊரில் காலை வைக்கிறேன். பெரிய மாற்றம் ஏதும் காணப்படவில்லை. பஸ் ஸ்டாண்ட் என்று பெயரளவிற்கு அப்போது கொட்டகையாக இருந்தது. இப்

பொழுது கட்டடமாக உருவாகி உள்ளது. வழக்கமாய் சாப்பிட்டு வந்த மணி அய்யர் ஹோட்டல் விரிவாக்கம் செய்யப்பட்டு கொஞ்சம் மாடர்னாக இருந்தது. ஹோட்டலில் டிபன் சாப்பிடலாம் என்று நுழைந்த என்னை மணி அய்யரின் பையன் ரமணி அடையாளம் கண்டு வரவேற்றான்.

"வாங்க வாசு சார். எப்படி இருக்கீங்க? எந்த 'ஊர்ல வேலை பாக்கறீங்க? ஏது இவ்வளவு தூரம்?"

கேள்வி மேல் கேட்க,

"பரவாயில்லையே ரமணி, என்னை ஞாபகம் வைச்சிருக்கீங்க?''

"எப்படி சார், மறக்க முடியும்? நீங்க இந்த ஊர் போஸ்டாபீசில் கிளார்க்காக வேலை பார்த்தபோது எவ்வளவு உதவி செஞ்சிருக்கீங்க. ஒங்க மூலம்தானே என் தங்கைகள் மூணு பேருக்கும் நல்ல வரன் அமைஞ்சு நல்லவிதமா செட்டிலாகி இருக்காங்க.''

"அதை விடு ரமணி. அதைப் போயி பெரிசா பேசிக்கிட்டு. ஆமாம், அப்பா எப்படி இருக்கார்? எங்கே கல்லாவிலே காணோம்?''

"ஐந்து வருடத்திற்கு முன்பு அப்பா தவறிட்டாரு. அதற்கு அடுத்த வருடமே அம்மாவும் தவறிட்டாங்க. நானும் என் மனைவியும்தான் ஹோட்டலை நிர்வகித்து வரோம். ஒரே பையன்

சாஃப்ட்வேர் இன்ஜினியரா சென்னையில வேலை பார்க்கிறான் சார். ஆமாம் சார், நான் கேட்ட கேள்விக்குப் பதிலே வரலையே?''

"எங்க என்னைப் பேசவிட்டே நீ! நான் இந்த போஸ்டல் டிவிஷனுக்கு சூப்ரன்டாக ஜாயின் பண்ணிருக்கேன். ஒரு மாசமா எங்கேயும் கிளம்ப முடியலை. இன்னிக்கு சனிக்கிழமை தானே, ரிலாக்ஸா இந்த ஊர் ஆபிஸ் இன்ஸ்பெக்ஷன் எடுத்துட்டு அப்படியே கோயில் சாமி தரிசனம் பண்ணிட்டு போகலாம்னு வந்தேன்.''

"ரொம்ப சந்தோஷமா இருக்கு சார். அப்பவே நீங்க பெரிய ஆபிசரா வருவீங்கன்னு எங்க அப்பா அடிக்கடி சொல்வார். அவர் சொன்னது பலித்ததில் சந்தோஷம் சார். வேலை முடிஞ்சதும் லன்ச் சாப்பிட வந்துடுங்க. நீங்க வேலை பார்த்த அதே இடத்திலேதான் போஸ்ட் ஆபிஸ் இருக்கு. நான் வேணும்னா கொண்டு விடட்டுமா?''

"இல்லை ரமணி, காலாற நடந்து போறதே சுகம். பக்கத்திலே தானே இருக்கு. நான் போய்க்கிறேனே.'' உதவிதான் நான் செஞ்சிருப்பேன். அதற்கு இவ்வளவு நன்றியும் மரியாதையுமா?

இருபது வருடத்திற்கு முன்பு, முதன் முதலில் நான் கிளார்க்காக ஜாயின் பண்ணிய போஸ்ட் ஆபிஸ் அப்படியே இருந்தது. சில அரசுக் கட்டடங்களுக்கு வயதாவதில்லை. போஸ்டாபிஸ் உள் நுழைந்து கவுண்டரில் இருக்கும் நபரைப் பார்த்தேன். ஆச்சரியமாக இருந்தது.

போஸ்ட் மாஸ்டரும் என்னைப் பார்த்தவுடன் "அடடே, வாங்க வாசு, எப்படி இருக்கீங்க? எந்த ஊர்ல வேலை பார்க்கிறீங்க? அம்மா, அப்பா சௌக்கியமா? ஏது இவ்வளவு தூரம்? ஹவுஸ் ஓனரைப் பார்க்க வந்தீங்களா? அவங்க காலமாயிட்டாங்கன்னு கேள்விப்பட்டேன். நீங்க மெட்ராசுக்கு தந்தி டிரெயினிங் போன பிறகு நானும் நாலஞ்சு ஊர்ல வேலை பாத்துட்டு மீண்டும் ஒரு டெனியூர் இங்கே வந்திருக்கேன். இன்னும் மூணு மாதத்திலே ரிடையர்மெண்ட்...''

போஸ்ட் மாஸ்டர் சோமசுந்தரத்தின் அவ்வளவு கேள்விக்கும் பதில் கூறாமல் எதுவும் பேசாமல் என்னுடைய ஐ.டி. கார்டை காண்பித்ததும், அதுவரை உட்கார்ந்து பேசிய சோமு சார் சடாரென்று எழுந்து, "சாரி சார்! யாரோ புதுசா சூப்பிரண்டு ஜாயின் பண்ணியிருக்காங்கன்னு கேள்விப்பட்டேன். அது நீங்கன்னு தெரியாமப் போச்சு. தாம் உட்கார்ந்திருந்த - சேரை நன்கு துடைத்த பின்பு அதில் என்னை உட்காரச் சொல்லிவிட்டு அவர் நின்றுகொண்டே பேசினார்.

நான் கிளார்க்காகச் சேர்ந்தபோது இருந்த அதே போஸ்ட் மாஸ்டர். இன்னும் அதே நிலையில் இருக்கும் இந்த மனிதன் என் தொழில் வாழ்க்கையின் தொடக்கத்தில் பாதிப்பை ஏற்படுத்தியவர்.

"மறுபடியும் மன்னிப்பு கேட்டுக்கறேன் சார். கிளார்க் இன்னிக்கு லீவு. நான் மட்டும்தான். பிராஞ்சு ஆபிஸ் பைகள் கட்டியாச்சு. போஸ்ட் மேன் கிளம்பிப் போயிட்டார் சார்".

"பரவாயில்லை சோமு சார், விடுங்க. ரிலாக்சா இருங்க. அக்கவுன்டஸ், கேஷ் டெய்லி டிரான்ஸ்சன்ஸ் ரிப்போர்ட், மத்த ரிகார்ட்களையும் டேபிள் மீது வையுங்க. வேலை முடிஞ்சதும் மத்த விஷயங்கள் பேசலாம். இப்ப வேலையைப் பார்க்கலாம்.''

கேஷ் பாக்ஸை எடுத்து டேபிளில் வைக்கும் போதே அவர் கைநடுக்கத்தைக் கவனிக்க நேர்ந்தது. ஒவ்வொரு டினாமினேசனாக கேஷ் டேலி பண்ணும் போது ரூ.10,000 குறைவாக இருந்தது. பல குறைகள். மொத்தத்தில் எந்த வேலையும் திருப்திகரமாகப் படவில்லை எனக்கு.

"சோமு சார், இப்படி வேலையில பெண்டிங் வைப்பவர் இல்லையே? ஆபிஸ் பண விஷயத்திலேயும் கரெக்டா இருப்பவர் ஆச்சே! என்ன ஆச்சு இவருக்கு?'

"என்ன சோமு சார்? வாட் ஹாப்பண்ட்? எப்படி ரூ.10,000 குறைவாக இருக்கு? எந்த ரிகார்டும் சரியில்லை.'' நான் கொஞ்சம் கடுமையாகவே சத்தம் போட்டேன். என் சப்தம் கேட்டு, குவார்டர்ஸிலிருந்து அவர் மனைவி மீனாட்சி எட்டிப்பார்த்தார். அவரைப் பார்த்ததும் மனம் கனத்தது.

என்னைப் பார்த்ததும் புரிந்துகொண்டு அழ ஆரம்பித்து விட்டார். "ப்ளீஸ்... எந்த நடவடிக்கையும் எடுக்காதீங்க. கொஞ்சம் டயம் கொடுங்க சார்.'

"சரி, மீனாட்சியம்மா, ஒங்களுக்காக நான் ஒருமணி நேரம் தரேன். வெளியே போய்ட்டு வருவதற்குள் எல்லாம் சரி செஞ்சு வைங்க'' என்று வெளியே வந்து நான் வாழ்ந்த அக்ரஹாரத்து வீட்டைப் பார்க்கப் போனேன். ரூம் வேண்டாம் என்று வீடு தேடி வந்த அந்தத் தெருவும், அதே ஓட்டு வீட்டுத் திண்ணையும் அப்படியே இருக்கிறது. அந்த நாள் மனதில் மின்னியது.

"சார்... சார்... யார் வீட்ல இருக்கீங்க?'' எனக் குரல் கேட்டதும் பாக்கியம் ராமசாமி கதையில் வரும் அப்புசாமி, சீதாப்பாட்டி கேரக்டர்களை நிஜத்தில் பார்த்த உணர்வு. வைர மூக்குத்தியும் வைரத் தோடும் ஜொலிக்க, கோல்டன் பிரேம் மூக்குக் கண்ணாடியுடன் கையில் வாரப் பத்திரிகையுடனும் அந்த மூதாட்டி, அவர் பின், சாதுவான அவர் கணவர். "யாருப்பா நீ? என்ன வேணும் உனக்கு?"

"என் பேர் வாசுதேவன். புதுசா இந்த ஊர் போஸ்டாபிசுலே கிளார்க்காக இன்னிக்குத்தான் ஜாயின் பண்ணியிருக்கேன். ரூம் தேடி வந்திருக்கேன் இப்படிச் சொன்னதும் உள்ளே வரச்சொல்லி சேரில் உட்காரச் சொன்னார்.''

நான் என்னைப் பற்றியும் என் குடும்பத்தைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்த வேளையில் கையில் ஸ்வீட்டுடன் வந்தார், அந்த வயதான பெண்மணி. அவர்கள் இருவரையும் பார்த்த உடனே எனக்கு நமஸ்கரிக்க வேண்டும் போல் தோன்றிட இருவரையும் நிற்கச் சொல்லி நமஸ்கரித்தேன் அந்த மூதாட்டி அழ ஆரம்பித்துவிட்டார். - 25 வருடங்களுக்கு முன்பு என் முகச்சாயலில் உள்ள தன் மகன் கும்பகோணம் மகாமகத் திருவிழாவில் மகாமகக் குளத்தில் தவறி விழுந்து, இறந்து விட்டதாகவும், என்னைப் பார்த்ததும் அவர்களுடைய மகன் ஞாபகம்

வந்ததாகவும் சொல்ல நான் நெகிழ்ந்தேன்.

"கடைசிக் காலத்தில் எங்களுக்கு நீ உதவியாக இருப்பாய் என்று நம்பித்தான் ரூம் கொடுக்கிறோம். எங்களுக்கு உதவியா இருப்பியா?'' என்று சொல்லிக் கொடுத்த ரூமில் தங்கி அவர்கள் குடும்பத்திலேயே தங்கியதும் நாள் ஆக ஆக என் மேல் பாசத்தையும் கண்டிப்பையும் காண்பித்து அந்த வயதான தம்பதி அவர்கள் குடும்பத்தில் என்னையும் ஒருவனாக்கிக் கொண்டது என் வாழ்க்கை வரலாற்றில் ஒரு பகுதி.

அந்த வீட்டில் வாழ்ந்த காலத்தில் முதியவர்கள் காசிக்கு போயிருந்தபோது என்னைக் கவனித்துக் கொண்டவர் போஸ்ட் மாஸ்டரின் மனைவி மீனாட்சி.

எனக்கும் போஸ்ட் மாஸ்டருக்கும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை சரியாகப் போய்க்கொண்டிருந்தாலும் அவ்வப்போது சில உரசல்கள் இருந்தன. ஒருநாள் ஆபிஸ் நேரத்தில் யாரும் வராத நேரத்தில் டிரான்ஸிஸ்டரில் கிரிக்கெட் கமன்ட்ரி கேட்டதற்காகக் கோபித்துக் கொண்டார். - வாதங்களில், வார்த்தைகள் வெடித்தன. "இதப் பாருங்க வாசுதேவன்! நான் இங்கே போஸ்ட் மாஸ்டர். நீங்க கிளார்க். நான் சொல்றதை நீங்க கேட்டுத்தான் ஆகணும். இல்லாட்டி இன்சப் ஆர்டினேசன் என்று சொல்லி ஒங்க பேர்ல ரிப்போர்ட் டிவிஷனல் ஆபிஸுக்கு அனுப்ப முடியும். அதற்கு நீங்க விளக்கம் கொடுக்க வேண்டியிருக்கும்'' என்ற வார்த்தைகளினால் என் மனம் காயப்பட்டது. அடுத்த சில நாட்களில் பேச்சு குறைந்து போயிற்று.

பொதுவாக, வார இறுதியில் சொந்த ஊருக்கு வந்து போனால் ஞாயிறு இரவே திரும்பி ரூமுக்குக் கிளம்பிவிடுவேன். அப்படித்தான் அந்த ஞாயிறு இரவு 8 மணிக்குக் கிளம்பத் தயாரான நான், கிளம்பும் வேளையில் அப்பாவிற்குத் திடீரென மைல்ட் ஹார்ட் அட்டாக் வரவே உடனடி யாக ஹாஸ்பிடலில் சேர்க்கும் நிலை ஏற்பட்டது. நல்ல வேளை உயிருக்கு ஆபத்தில்லை என்றாலும் நான் ஹாஸ்பிடலில் தங்கும் சூழ்நிலை ஏற்பட்டது.

மறுநாள் திங்கட்கிழமை ஏழு மணிக்கே பப்ளிக் போன் பூத்திலிருந்து போஸ்ட் மாஸ்டரைக் கூப்பிட்டு நடந்ததைச் சொல்லி லீவு கேட்டதுடன் மட்டுமல்லாமல என் பொறுப்பிலிருக்கும் அலுவலகச் சாவியை, ஹவுஸ் ஓனரிடம் வாங்கிக்கொள்ளச் சொன்னேன்.

நான் செவ்வாய் அன்று, ரூமிற்குப் போகாமல் நேரே ஆபிஸ் வேலைக்கு வந்த எனக்காகக் காத்திருந்தது ஒரு மெமோ. ஜாயின்ட் கஸ்டோயென் சாவியை போஸ்ட் மாஸ்டர் வாங்கிக் கொள்ளவில்லை. 'அன் ஆதார்ஸைடு எட்' என்று டிவிஷனல் ஆபிஸுக்கு ரிப்போர்ட் செய்து என் மேலுள்ள காழ்ப்புணர்ச்சியைக் காட்டிவிட்டார்.

என் விளக்கங்களை ஏற்க மறுத்த தலைமை ஒரு வருட இன்க்ரீமென்ட் கட் செய்து தண்டிக்க இதற்குமேல் அந்த ஆபிஸில் வேலை பார்க்க எனக்கு மனமில்லை. என் எண்ணத்திற்குத் தகுந்ததாற்போல் தந்தி டிரெயினிங்காக சென்னைக்குத் தேர்வாகிப் பயணப்பட்டேன்.

அடுத்த ஓரிரு வருடங்களில் நான் இன்ஸ்பெக்டர் தேர்வு எழுதி பாஸாகி நிறைய

இடங்களில் குறிப்பாக வடமாநிலங்களில் வேலை பார்த்த பின்பு இதோ சூப்ரண்டாக இந்த டிவிஷனுக்கே மாற்றல் ஆகியிருந்தது. அந்தத் தெருவிலிருந்த வேப்பமரம் வளர்ந்திருந் ததைத் தவிர வேறு மாற்றமில்லை .

மெல்ல நடந்து போஸ்டாபிஸுக்கு வந்து கொண்டிருந்தேன். எதிரில் அழுதபடி போஸ்ட்மாஸ்டரின் மனைவி மீனாட்சி அம்மாள் வந்துகொண்டிருந்தார்.

ஆபிஸில் குறைந்த ரூ.10,000 பணத்திற்கு என் மனைவி பொறுப்பேற்று தன்னுடைய தாலியை விற்றுப்பணம் கொடுத்துள்ளார். தான் புத்திக் கெட்டு பணத்தை எடுத்ததற்கும் தன்னுடைய மகனின் உடல் நிலை காரணமாக இந்தச் சூழ்நிலை ஏற்பட்டதும், தான் இன்னும் மூணு மாதத்தில் ஓய்வு பெறப்போவதால் கருணை கூர்ந்து தன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் மன்னித்து விடும்படியும் எழுதி இருந்தார்.

எழுதிக் கொடுத்த ஸ்டேட்மென்ட்டைப் படித்துப் பார்த்த பின்பு உங்களிடம் விளக்கம் கேட்டு மெமோ வரும். இலாகா நடவடிக்கை எடுக்க வேண்டிய சூழ்நிலை வந்தாலும் வரும்” என்று - எச்சரித்துவிட்டுக் கிளம்பினேன். - என் கைகளைப் பிடித்துக்கொண்டு கண்ணீர் மல்க, ”ரொம்ப நன்றி சார்’ ’ என்று சொன்ன சோமசுந்தரத்துக்குத் தெரியாது பழைய வீட்டைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, அழுது கொண்டு வந்திருந்த மீனாட்சி அம்மாவிடம் பர்ஸிலிருந்து ரூ. 10,000த்தை எடுத்துக் கொடுத்து,

“நான் இந்தப் பணம் கொடுத்தது யாருக்கும் தெரிய வேண்டாம். குறிப்பாக, உங்கள் கணவருக்கு. நீங்கள் ‘தாலியை விற்று இந்தப் பணத்தைக் கொடுக்கிறேன்’ என்று வாக்குமூலம் கொடுங்கள். மற்ற விஷயங்களை நான் பாத்துக்கிறேன். நான் பணம் கொடுத்தது உங்க ளைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்குக் காரணமே நான் காய்ச்சலில் இருந்தபோது நீங்க எனக்குச் செய்த மருத்துவ உதவிக்கு, உங்க கையினால் சாப்பிட்ட விசுவாசத்திற்கு நன்றிக் கடனா நினைச்சுக்குங்க.”

நான் செய்தது கைமாறா? அல்லது என் பணியை நேர்மையாகச் செய்யாததா? என்ற குழப்பத்துடன் பஸ்ஸுக்காகக் காத்திருந்தேன்.

# கணியம் அறக்கட்டளை

**தொலை நோக்கு – Vision**

தமிழ் மொழி மற்றும் இனக்குழுக்கள் சார்ந்த மெய்நிகர்வளங்கள், கருவிகள் மற்றும் அறிவுத்தொகுதிகள், அனைவருக்கும் கட்டற்ற அணுக்கத்தில் கிடைக்கும் சூழலை உருவாக்குதல்.

**பணி இலக்கு – Mission**

அறிவியல் மற்றும் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஒப்ப, தமிழ் மொழியின் பயன்பாடு வளர்வதை உறுதிப்படுத்துவதும், அனைத்து அறிவுத் தொகுதிகளும், வளங்களும் கட்டற்ற அணுக்கத்தில் அனைவருக்கும் கிடைக்கச்செய்தலும்.

**எமது பணிகள்**

- **கணியம் மின்னிதழ்** kaniyam.com
- கணிப்பொறி சார்ந்த கட்டுரைகள், காணொளிகள், மின்னூல்களை இங்கு வெளியிடுகிறோம்.
- **கட்டற்ற தமிழ் நூல்கள்** FreeTamilEbooks.com
- இங்கு யாவரும் எங்கும் பகிரும் வகையில், கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமையில், தமிழ் மின்னூல்களை இலவசமாக, அனைத்துக் கருவிகளிலும் படிக்கும் வகையில் epub, mobi, A4 PDF, 6 inch PDF வடிவங்களில் வெளியிடுகிறோம்.
- தமிழுக்கான கட்டற்ற மென்பொருட்கள் உருவாக்கம்
- தமிழ் ஒலியோடைகள் உருவாக்கி வெளியிடுதல்
- விக்கி மூலத்தில் உள்ள மின்னூல்களை பகுதிநேர/முழு நேரப் பணியாளர்கள் மூலம் விரைந்து பிழை திருத்துதல்
- OpenStreetMap.org ல் உள்ள இடம், தெரு, ஊர் பெயர்களை தமிழாக்கம் செய்தல்.

மேற்கண்ட திட்டங்கள், மென்பொருட்களை உருவாக்கி செயல்படுத்த உங்கள் அனைவரின் ஆதரவும் தேவை. உங்களால் எவ்வாறேனும் பங்களிக்க இயலும் எனில் உங்கள் விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

**வெளிப்படைத்தன்மை**

கணியம் அறக்கட்டளையின் செயல்கள், திட்டங்கள், மென்பொருட்கள் யாவும் அனைவருக்கும் பொதுவானதாகவும், முழுமையான வெளிப்படைத்தன்மையுடனும் இருக்கும். https://github.com/KaniyamFoundation/Organization/issues இந்த இணைப்பில் செயல்களையும், https://github.com/KaniyamFoundation/Organization/wiki இந்த இணைப்பில் மாத அறிக்கை, வரவு செலவு விவரங்களுடனும் காணலாம்.

கணியம் அறக்கட்டளையில் உருவாக்கப்படும் மென்பொருட்கள் யாவும் கட்டற்ற மென்பொருட்களாக மூல நிரலுடன், GNU GPL, Apache, BSD, MIT, Mozilla ஆகிய உரிமைகளில் ஒன்றாக வெளியிடப்படும். உருவாக்கப்படும் பிற வளங்கள், புகைப்படங்கள், ஒலிக்கோப்புகள், காணொளிகள், மின்னூல்கள், கட்டுரைகள் யாவும் யாவரும் பகிரும், பயன்படுத்தும் வகையில் கிரியேட்டிவ் காமன்சு உரிமையில் இருக்கும்.

**நன்கொடை**

உங்கள் நன்கொடைகள் தமிழுக்கான கட்டற்ற வளங்களை உருவாக்கும் செயல்களை சிறந்த வகையில் விரைந்து செய்ய ஊக்குவிக்கும்.

பின்வரும் வங்கிக் கணக்கில் உங்கள் நன்கொடைகளை அனுப்பி, உடனே விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

**Kaniyam Foundation**

**Account Number : 606 1010 100 502 79**

**Union Bank Of India**

**West Tambaram, Chennai**

**IFSC – UBIN0560618**

**Account Type : Current Account**